பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 26 சனிக்கிழமை (10.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 226

# ஐ.நா.அலுவலகம் மீதான முற்றுகை

# சர்வதேச நியமங்களை மீறிய செயல்

## மேற்குலக நாடுகள் கூட்டாகக் கடும் கண்டனம்

கொழும்பு,ஜூலை10

ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தை முற்றுகை இட்டமை, ஐ.நா. பணியாளர்களை அச்சுறுத்தியதுடன் தொல்லை கொடுத்தமை ஆகிய செயற்பாடுகள் சர்வதேச நியமங்களை மீறிய அபாத்தான செயல்களாகும்.

கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிட்டமையும் அரசாங்க அமைச்சர் ஒருவர் அதில் ஈடுபட்டமையும் எம்மை அதிர்ச்சிக்கும் கவலைக்கும் ஆளாக்கியுள்ளது.

அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், சுவிற்ஸர்லாந்து, இத்தாலி, நெதர்லாந்து, நோர்வே, றொமேனியா ஆகிய நாடுகளினதும் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் கொழும்பில் உள்ள தூதுவர்கள் நேற்றுக் கூட்டாக விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு இலங்கை அரசாங்கம் மீது கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் என்பது ஜனநாயக நடைமுறைகளில் ஓர் அங்கமென்றாலும், இப்படியான ஆர்ப்பாட்டங்கள் சர்வதேச மட்டத்தில் இலங்கையின் நற்பெயரைக் கெடுக்கும் செயல் .

ஐ.நா. சபையின் அலுவலகத்துக்குச் செல்லும் வழிகளில் தடைகளை ஏற்படுத்துவதும், ஐ.நா. பணியாளர்களை துன்புறுத்துவதும், மிரட்டுவதும், சர்வதேச நியமங்களையும் நடைமுறைகளையும் மீறும்செயல்.

ஐ.நா. சபையின் பணியாளர்கள் மற்றும் அலுவலகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ், முரளிதரன், சுஸில் விமலை நேரில் சந்தித்தனர்

கொழும்பு,ஜூலை10

கொழும்பு, ஐ.நா அலுவலகத்துக்கு முன்னால் சாகும் வரையான உண்ணவிரதத்தை மேற்கொண்டிருக்கும் அமைச்சர் விமல் வீரவன்ஸவை அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, சுஸில் பிரேம ஜயந்த மற்றும் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

அதேவேளை, உண்ணவிரதமிருக்கும் பகுதிகளில் வெள்ளைக் கொடிகளைப் பறக்க விடுமாறும் அங்கு வரும் மக்கள் அனைவரும் வெள்ளை உடை அணிந்து வருமாறும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (சி)

## ஐ.நாவின் செயலாளர் நாயகம் அவசரப்பட்டுவிட்டார்; வார இறுதிக்குள் தீர்வு காண முடியும் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஜூலை 10

ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் புஹூனேயை நியூயோர்க்கிற்கு மீள அழைத்ததன் மூலம் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் அவசரப்பட்டுவிட்டார் என்று அரசு நேற்றுத் தெரிவித்தது.

ஐ.நாவுடனான இந்த முறுகல் நிலைமையத் தணிக்கும் பொருட்டு இந்தவார இறுதிக்குள் ஐ.நாவுடன் இலங்கை அரசு பேச்சு நடத்தும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் புஹூனே ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியூயோர்க்குக்கு மீள அழைக்கப்படவில்லை. இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பாகத் தகவல்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்காகவே அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான நிலைமைகளின்போது வெளிநாட்டுத் (24 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தால் மட்டுமே வீரவன்ஸ உண்ணாவிரதத்தைக் கைவிடுவாராம்

கொழும்பு,ஜூலை10

ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் மாத்திரமே தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. தனது உண்ணாவிரதத்தைக் கைவிடுவார் என முன்னாள் எம்.பி. எம்.முஸம்மில் நேற்றுப் பகல் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் முதல் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் உடல் நிலை மோசமடைந்து வருகிறது என அவரது குடும்ப டாக்டர் தெரிவித்தார் என்று விமல் வீரவன்ஸவின் உதவியாளர் கூறினார்.

உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் விமல் வீரவன்ஸ எம்.பியை நேற்று முன்தினம் மாலை அமைச்சர்களான டலஸ் அழகப்பெரும, மேர்வின் சில்வா ஆகியோர் சென்று பார்வையிட்டனர். பின்னர் அவருடன் உரையாடினர். நேற்றுக்காலை அமைச்சர் தினேஷ் குணவர்தன விமல் வீரவன்ஸவைப் பார்வையிட்டார். அவரது உடல்நிலை குறித்தும் கேட்டு அறிந்துகொண்டார்.

கொழும்பு - 07 பௌத்தாலோக மாவத்தையில் உள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்னால் பெரும் (24 ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டமைக்கு பொன்சேகாவே காரணம் என்கிறது அரசு

கொழும்பு,ஜூலை10

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டமைக்கு ஜெனரல் சரத் பொன்சேகாவே காரணம் - என்று அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் நடவடிக்கைகளின் காரணமாகவே, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் மூன்று பேர் அடங்கிய நிபுணர்கள் குழுவை நியமித்துள்ளார் என

(24 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு இணைப்பு முஸ்லிம்களுக்கு ஆபத்தானது; முஸ்லிம் காங்கிரஸ் அதனை ஏற்காது எனச் சபையில் அறிவிப்பு

கொழும்பு,ஜூலை 10

வடக்கு - கிழக்கை மீண்டும் இணைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்து வருகிறது. வடக்கு-கிழக்கு இணைப்பு கிழக்கு முஸ்லிம்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். இந்தக் கோரிக்கையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டாது. - இப்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வரவு - செலவுத் திட்டம் மீதான நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படும்போது சிறுபான்மை இனம் பாதிக்கப்படாதவாறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். (24 ஆம் பக்கம் பார்க்க)

## பட்ஜெட் 2ஆம் வாசிப்பு நேற்று நிறைவேறியது

கொழும்பு,ஜூலை10

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்று மாலை இடம்பெற்றது. 68 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

கண்டி மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் உட்பட ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் 139 பேர் ஆதரவாக வாக்களித்தனர். ஐ.தே.கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தேசிய முன்னணி ஆகியன எதிர்த்து வாக்களித்தன. (ஒ-1)

## இந்திய அரச தரப்பின் நிலைப்பாடு நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளது

### நாடு திரும்பிய பின் மாவை தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 10

இந்திய அரச தரப்பினருடன் நாம் நடத்திய பேச்சுக்கள் நம்பிக்கை தரக்கூடிய வகையில் அமைந்திருந்தன. அவற்றில் முன்னேற்றகரமான நிலைப்பாட்டை அவதானிக்க முடிந்தது என்பதனை தெரிவிக்க விரும்புகின்றோம்.

இந்தியாவில் இருந்து நேற்றிரவு கொழும்பு திரும்பிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில் இந்தியா சென்றிருந்த அறுவர் கொண்ட கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு அங்கு முக்கிய தலைவர்களுடன் பேச்சுக்களை

(24 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் இன்று வன்னி விஜயம்

கொழும்பு,ஜூலை 10

பிரதமர் டி.எம். ஜயரத்ன இன்று வன்னிக்கு விஜயம் செய்ய உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போர் காரணமாக அழிவடைந்த சர்வ மத வழிபாட்டுத் தலங்களைப் புனரமைக்கும் விசேட திட்டமொன்றும் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்குக் கிழக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள பல அபிவிருத்தித் திட்டங்களை பிரதமர் ஆரம்பித்து வைக்க உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## அருள் மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் தீர்த்தத் திருவிழா



நாளையதினம் ஞாயிற்றுக்கிழமை காலை விசேட அபிஷேக ஆராதனை இடம்பெற்று பி.ப. 4 மணிக்குத் தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது.

அதில் விசேட நிகழ்ச்சியாக தவில், நாதஸ்வர கச்சேரி இடம் பெறவுள்ளது.

தவில், நாதஸ்வரக் கலைஞர்கள்:- திரு இ.சுந்தரமூர்த்தி குழுவினர், N.R. கோவிந்தசாமி புதல்வர்கள், இரத்தினகுமார் குழுவினர், வாக்ஸ்வான் குழுவினர். உலகப்புகழ் சின்னராசாவின் புதல்வர்கள் திரு இரவீந்திரன், சுதாகரன் குழுவினர்.

இரவு 9மணியளவில் கொடியிறக்கம் நடைபெறவுள்ளது. முருகன் அடியார்கள் தீர்த்தத் திருவிழாவில் கலந்து நாதகான மழையில் நனைவதோடு முருகப்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெறுவீராக. தீர்த்தத் திருவிழா உபயகாரர்.



## அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான 2010ஆம் ஆண்டு மஹோற்சவ விஞ்ஞாபனம்

### கிரியா நிகழ்வுகள்

10.07.2010 சனி,பி.ப. 4 மணி கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்துசாந்தி, மிருத்திசங்கிரணம்

முதலாம் திருவிழா

11.07.2010 ஞாயிறு மு.ப. 9.30 மணி கொடியேற்றம்

02ஆம் திருவிழா

12.07.2010 திங்கள் காலை 8.00 மணி நவசக்தி அர்ச்சனை

05ஆம் திருவிழா

15.07.2010 வியாழன் காலை 5.00 மணி 108 சங்காபிஷேகம்

06ஆம் திருவிழா

16.07.2010 வெள்ளி காலை 8.00 மணி பக்தோற்சவவிழா

07ஆம் திருவிழா

17.07.2010 சனி காலை8.00 மணி நவசக்தி அர்ச்சனை
மாலை 5.00 மணி திருவிளக்கு பூஜை

10ஆம் திருவிழா

20.07.2010 செவ்வாய் காலை 8 மணி நவசக்தி அர்ச்சனை

11ஆம் திருவிழா

21.07.2010 புதன் காலை 7 மணி சுமங்கலி பூஜை

12ஆம் திருவிழா

22.07.2010 வியாழன் மு.ப. 10 மணி வசந்தோற்சவம்

13ஆம் திருவிழா

23.07.2010 வெள்ளி காலை 5.00 மணி 108சங்காபிஷேகம் , தைலாப்பியரங்கம்
மாலை 4.00 மணி வேட்டை,சப்பறம்

14ஆம் திருவிழா

24.07.2010 சனி காலை 8.00 மணி இரதோற்சவம்

15ஆம் திருவிழா

25.07.2010 ஞாயிறு காலை 6 மணி சமுத்திர தீர்த்தோற்சவம்
மாலை 4மணி பூரணைப் பூஜை, கொடியிறக்கம்

26.07.2010 திங்கள் காலை 7.00 மணி 1008 சங்காபிஷேகம், பூங்காவன இளைஞர் விழா

27.07.2010 செவ்வாய் பி.ப. 3.00 மணி வைரவர் சாந்தி

மஹோற்சவ காலத்தில் மாலை 6.00 மணி சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

எம் பெருமாட்டியின் பெருவிழாக்காலங்களில் அம்பிகையைத் தரிசித்து வேண்டும் வரம் பெற்றேகுக.

பரிபாலனசபை

## காணவில்லை



மல்லாகத்தைச் சேர்ந்த தில்லையம்பலம் பாலசிங்கம் வயது 73 மெல்லிய தோற்றம், வெள்ளை நிறம், நடுத்தர உயரம், நரைத்த முடி இவ்வாறான தோற்றம் கொண்ட இவர் கடந்த (08.07.2010) வியாழக்கிழமை முதல் காணாமற் போயுள்ளார்.

இவர் காணாமற்போன நேரத்தில் நீல செக் சரமும், செக் சேட்டும் அணிந்திருந்தார். இவரைக் காண்பவர் கள் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
அனோஜன் ரேடர்ஸ்,
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
தொலைபேசி இலக்கம்.
0776606877, 0214920360

(100486) தகவல்: குடும்பத்தினர்.

## 15 சமூக சேவையாளர் பதவிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் யுனிசெவ் நிறுவன நிதி உத வியுடன் நலிவுற்ற குடும்பங்களுக்கு வழங்கும்சேவையை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத் தின் கீழ் பணியாற்ற உத்தியோகத்தர் கள் நியமிக்கப் பட வுள்ள னர்.

இதற்கெனதகைமையுடையவர்களிடமிருந்து விண் ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. மாகாண தலைமை அலுவலகத்துக்கு செயற்றிட்ட தொழில்நுட்ப உதவி அலுவலர் பதவி மற்றும் தலைமை அலுவலகம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய சேவை நிலையங்களுக்கு 15 சமூக சேவையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

22 இற்கும் 45 இற்கும் இடைப்பட்ட வயதுடைய வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர் வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சான்றிதழ்களின் பிரதிகளுடன் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், வரோதயநகர், திருகோண மலை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## பாலை விற்க முடியாது சிரமப்படும் மக்கள்

தென்மராட்சி, ஜூலை 10

தென்மராட்சிப் பிரதேசத்தில் கால்நடைவளர்ப்போர் பாலை விற்க முடியாது திணறுகின்றனர்.

பால் கொள்வனவு செய்வதற்கு பால் சபையினரோ வர்த்தக நிலையங்களோ பின்னடிப்பதால் உற்பத்தி செய்யப்படும் பாலை விற்பனை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பிரதேசத்தில் அண்மைக் காலமாக பால் உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும் அவற்றைச் சந்தைப்படுத்த முடியாத நிலைமை குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று கால் நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்தனர். (ஒ-207)

### மணமகன் தேவை

யாழ் இந்து உயர் கௌரவ வயது 40, அத்தம் 1ம் பாதம், லக். சூரியன் செவ்வாய், பாவம் 83, உயரம் 5 - 1/2" அரசாங்க உத்தியோகம், உயர் பதவி வகிக்கும், ஓர் அளவு அழகிய மணமகளுக்கு, குறைந்தளவு வயது மணப் பொருத்தம் உள்ளவர்களும், 48 வயதுக்கு உட்பட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

Selva Singam Marriage Service
No.9 Quarry Road, Wellawatte
0112362994,
011 7205129 0777 886916

## முக்கிய அறிவித்தல்

பாலசிங்கம் அரிகரன் (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன வெளிக்கள உத்தியோகத்தர்) ஆகிய நான் அபிராமி எலக்றிக்கலில் இருந்து 08.07.2010 தொடக்கம் விலகி தனித்து செயற்பட்டு வருகிறேன். என்பதனை அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன். இனி அபிராமி எலக்றிக்கல்ஸ் சம்பந்தமான எந்தவிதமான தொடர்புகளுக்கும் நான் பொறுப்பாளி அல்ல என்பதை உறுதிப் படத்தெரிவிக்கின்றேன்.

மேலதிக தொடர்புகளுக்கு
0775225038
உரிமையாளர்,
பாலுகடை,
கட்டுடை, மானிப்பாய்

(100459)

## கண்ணீர் அஞ்சலி

எமது GODS OWN CHILDREN நிதியத்துக்கு இலவச பாடசாலையையும் தொழிற்பயிற்சி நிலையத்தையும் நடத்துவற்கு தமது கட்டடத்தை மனம் உவந்தளித்த அன்னை

### திருமதி சச்சிதானந்தம் தையல்நாயகி

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு கவலை அடைவதுடன் அவரின் குடும்பத்தின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

GODS OWNCHILDREN Foundation
தலைவர்,
Dr. பா. ஆனந்தகுமார்,
இயக்குநர்கள், நிர்வாக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

140, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே.: 021 222 5796
(சி-569063)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சச்சிதானந்தம் தையல்நாயகி

அராலி வடக்கு, செட்டியரா் மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சச்சிதானந்தம் தையல்நாயகி நேற்று (09.07.2010) வெள்ளிக் கிழமை சிவ பதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓவசியர் சச்சிதானந்தத்தின் அன்பு மனைவியும், பத்மாவதி தியாகராஜா, திலகவதி சிவ குருநாதன், யோகானந்தன், உமாவதி சரவணபவான், ஜெயானந்தன், காலஞ்சென்ற சிவானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டியார் மடம்,
அராலி வடக்கு. (சி-569063)

தகவல்:
மகன் (ஜெயானந்தன்).

### திருமதி யோகராஜா கிருபாநிதி

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் காரைநகரை வசிப்பிடமாகவும் தற்போது நோர்வேயில் வசித்து வந்தவருமான யோகராஜா கிருபாநிதி காரைநகரில் நேற்று (09.07.2010) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலப்பிள்ளை மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (கார்க்கார அருளம்பலம்) -பகவதி அம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் யோகராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அஜந்தன் மற்றும் அரவிந்தன், அனுசாந்தன் ஆகியோரின் தாயும், நிமல்குமார் (நீர்கொழும்பு), திருக்குமார் (பிரான்ஸ்), சுகுணா (நீர்கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் கந்தசாமி (வவுனியா), காலஞ்சென்றவர்களான சின்னராசா, சரஸ்வதி, பாலசுப்பிரமணியம், கோபாலகிருஷ்ணன் மற்றும் நாகரத்தினம் (ஆறுகால்மடம்), பகீரதன் (சங்கானை) மற்றும் மகேஸ்வரி (நீர்கொழும்பு), சறோ (பிரான்ஸ்), வேலாயுதபிள்ளை (நீர்கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.07.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது மாமனார் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலகடி,
காரைநகர். (100483)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நாமாகத் தேடிக்கொள்ளும் வினை

இலங்கை விவகாரத்தில் தனக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழுவை நியமித்த போது, கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தையும், ஐ.நா. அபிவிருத்தித்திட்ட (யு.என்.டி.பி.) அலுவலகத்தையும் மூடுவதற்கு நேரிடும் என்றோ, இங்குள்ள ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி நீல் புஹூனேயை திருப்பியழைக்க நேரிடும் என்றோ செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நினைத்திருக்கமாட்டார்.

காரணம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். போர் முடிவுற்ற பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா.செயலருக்கும், இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் இத்தகைய அல்லது இது போன்ற ஒரு கருமம் நடைபெறும் என்பதில் இணக்கப்பாடு ஏற்பட்டிருந்தது.

ஆனால் பான் கீ - மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழு நியமிக்கப்படும் என்று எந்தவித எதிர்பார்ப்பும் இலங்கை அரச தரப்பில் இருக்கவில்லை, அதற்கு முன்னர் எமது வீட்டுக் காரியத்தை நாமே பார்த்துக் கொள்ளலாம் என்று தப்புக்கணக்குப் போட்டதால் -

தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவை தாமே சொந்தத்தில் நியமித்ததால், ஐக்கிய நாடுகள் சபை தனது சொந்தத்தில் நிபுணர் குழு ஒன்றை நியமிக்காது என்று இலங்கை அரசு தப்புக்கணக்குப் போட்டிருக்க வேண்டும். அதனால் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழு நியமிக்கப்பட்டதும் இலங்கை அரசுக்கு அதிர்ச்சி (ஒவ்வாமை என்றும் கொள்ளலாம்) ஏற்பட்டிருக்க வேண்டும். அதன் பங்காளிகளான ஜனநாயக சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் ஊடாக ஐ.நா. நிபுணர்குழு நியமனத்தை ரத்துச் செய்யக் கோரி போராட்டங்களை நடத்த (மறைமுகமாக) அனுமதித்திருக்கிறது.

ஐ.நாவின் கொழும்பு அலுவலகத்தின் முன்னால் நடத்தப்படும் ஆர்ப்பாட்டத்தை அரசு தடுத்து நிறுத்த முடியாது. அமைச்சர் விமல் வீரவன்சவும் அவரது ஜனநாயக சுதந்திர முன்னணியும் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கும் தடங்கல் ஏற்படுத்த முடியாது என்றெல்லாம் அமைச்சரவையின் சட்ட ஆலோசகர் என்று வர்ணிக்கப்படும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வாதம் செய்திருக்கிறார். அவருடைய வாதம் - கோட்பாடு - மேல் நோக்காகச் சரியாக இருந்தாலும் -

அரசினால் தூண்டிவிடப்பட்டே அதன் அங்கத்துவக் கட்சிகள் இந்தப் போராட்டங்களை - ஜனநாயகத்தின் வெளிப்பாடுகளை - காட்சிப்படுத்துகிறார்கள் என்பதனை ஒரு மாணவனால் கூட பகுத்தறிய இயலும்!

எந்த வாதப் பிரதிவாதங்களை எமது நாட்டு ஆட்சிபீடத்தினர் முன்வைத்தாலும் சர்வதேச அமைப்பு ஒன்றுக்கு எதிராக இலங்கை அரசு போர்க்கொடி தூக்கியுள்ளது என்ற படத்தை அழித்துவிட முடியாது.

பலம்வாய்ந்த ஓர் உலக சக்தியுடன் மோதுவதற்கு இலங்கை அரசு மேற்கொண்டிருக்கும் முயற்சி, இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பலவகையான நட்டங்களையும், கெடுதல்களையும் உருவாக்கிவிட்டுள்ளது; மேலும் உருவாக்கும்.

உலகப்பெருமன்றத்தின் மேல்மட்ட நாடுகளில் ஒரு சிலவற்றின் ஆதரவு இலங்கை அரசுக்கு உண்டு என்பதால், அதனை எதிர்த்து அல்லது முண்டி எந்தக் காரியமும் எங்கள் நாட்டுக்கு சாதகமாகக் கிடைக்கப் போவதில்லை என்பது சர்வ நிச்சயம்.

உலக நாடுகளின் வல்லமை மிக்க நாடுகளில் இரண்டாம் தட்டில் உள்ளவற்றின் ஆதரவு இலங்கைக்கு மிகக்குறைவு. இத்தகைய ஒரு பின்னணியில், வியன்னா சாசனத்தை மீறும் வகையில் இலங்கை செயற்படத் துணிந்திருப்பது எங்கள் நாட்டுக்குப் பல பின்னடைவுகளைக் கொண்டு வரப்போகிறது.

அரசாங்க உயர் மட்டத்தின் ஆசி மற்றும் பக்கபலத்துடன்தான் ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிரான ஆர்ப்பாட்டம், அதன் அலுவலகங்கள் முற்றுகை என்ற ஜனநாயகப் போராட்டங்கள் எமது நாட்டின் நிலைப்பாட்டை குளறுபடித் தனத்துக்கு உள்ளாக்கி, அதன் மட்டத்தைக் கீழ்நோக்கித் தள்ளிவிட்டிருக்கிறது.

இதனால் பாதிக்கப்படப்போவது ஆட்சியில் உள்ள அரசியல் தலைவர்களும், அவர்களின் கூட்டாளிகளும் அல்லர். இந்த நாட்டின் குடிமக்களே.

ஆட்சியாளர்கள் - அரசியல் தலைவர்கள் - இன்று வருவார்கள்; நாளை போவார்கள். ஆனால் குடிமக்கள் என்றும் குடிமக்களே.

விமல் வீரவன்ச அமைச்சர் பதவியில் இருந்து விலகிவிட்டதாலோ அவரது போராட்டத்துக்கும் அரசாங்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அறிவிப்பதாலோ நமக்கு நாமே உண்டாக்கிய மாசை இலகுவில் துடைத்துவிட முடியாதே!

# ராஜபக்ஷ - பான் கீ மூன் ஒப்பந்தப்படியே நிபுணர் குழு நியமனம் என்கிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 10

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையிலேயே மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆலோசனை கூறுவதற்கான நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

கடந்தவருடம் மே மாதம் 23 ஆம் திகதி கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின்படி அப்படியான ஒரு குழு அமைப்பதற்கு அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் கொழும்பிலுள்ள ஐ.நா. காரியாலயத்துக்கு முன்னால் அமைச்சர் வீரவன்ஸ ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு அடிப்படை ஏதும் கிடையாது என்று விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கூறினார்.

படை வீரர்களின் உரிமைகளை ஐ.தே.கட்சி ஆதரிக்கின்றது என்று கூறிய அவர் பல்வேறு தரப்பில் அழுத்தங்கள் இருந்தபோதிலும் அரசாங்கம் 2002 ஆம் ஆண்டு ரோம் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. அவ்வாறு செய்திருந்தால் எமது பிரஜைகள் சர்வதேச நீதிமன்றத்தின் முன் ஆஜராக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். போர் ஒன்று நடக்கும்போது பொது மக்கள் பாதிக்கப்படுவது வழமைதான். ஆனால் பொதுமக்கள் பாதிப்பை குறைப்பதற்கு அரசு என்ன செய்தது என்பதே கேள்வியாகும் என்றார். (ப)

# தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயில்வதற்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜூலை 10

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியர் கல்வியில் மூன்றாண்டு கால சேவைமுன் தொழிற்பயிற்சி ஒன்றைப் பயில்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், கணிதம், உடற்கல்வி, ஆங்கிலம், இந்துசமயம், இஸ்லாம், கிறிஸ்தவம், தமிழ், விவசாயம், சித்திரம், நடனம், சங்கீதம் (கர்நாடகம்), நாடகமும் அரங்கியலும், தகவல் தொடர்பாடல், மனைப்பொருளியல், சமூகவியல், வணிகமும் கணக்கியலும் ஆகிய பாடநெறிகளுக்கு பயில்வதற்கு கல்வித் தகைமைகளையும், தகுதிகளையுமுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் யாவும் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பிரதம ஆணையாளர் (ஆசிரிய கல்வி), கல்விக் கல்லூரிக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலதிக விவரங்களை இந்த மாதம் 9 ஆம் திகதி 1662 ஆம் இலக்க அரச வர்த்த மானிப் பத்திரிகையில் பெற்றுக் கொள்ளலாம். (க)

## கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் வீணைக் கச்சேரி

யாழ்ப்பாணம், ஜூலை 10

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வீணைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

மன்றத்தில் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் திருமதி விதுஷா கோபிகிருஷ்ணாவும் அவரது மாணவிகளும் வீணைக் கச்சேரியை வழங்கவுள்ளார்கள்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட வீணை விரிவுரையாளர் எ.சத்தியசீலன் கலந்து சிறப்பிப்பார். (50)

# நல்லிணக்க ஆணைக் குழுவின் பூர்வாங்க அமர்வு இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 10

முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர். டி.சில்வா தலைமையிலான கற்ற பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு கொழும்பிலுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் ஞாபகார்த்த மண்டபத்தில் அதன் பூர்வாங்க அமர்வை இன்று ஆரம்பிக்கின்றது.

ஆணைக்குழு தனது பகிரங்க அமர்வுகளை ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கவிருக்கின்றது. சாட்சியங்களிடம் இருந்து வரும் அறிக்கைகளை பதிவு செய்ததன் பின்னர் நாம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்வோம். இது அங்குள்ளவர்கள் சங்கடமின்றி வாக்குமூலங்களை அளிப்பதற்கு வசதியாகவிருக்கும் என்று ஆணைக்குழுவின் தலைவர் கூறியுள்ளார்.

குழுவின் பணிகள் தொடர்பாக அதன் செயலாளர் எஸ்.எம்.சமரக்கோன் தெரிவிக்கையில், கடந்த மாதம் முழுவதும் குழுவினர் தொடர்ச்சியாகக் கூடி ஆலோசனைகள் நடத்தியுள்ளனர். பொது விசாரணைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்வதே குழுவின் முக்கிய கரிசனையாக இருந்துள்ளது - என்றார். (ப)

# எண்ணெய் விநியோக நிலையத்தை வவுனியாவில் அமைச்சர் திறந்துவைப்பார்

கொழும்பு, ஜூலை10

வவுனியாவில் எண்ணெய் விநியோக நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளதாக பெற்றோலிய அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 12ஆம் திகதி பெற்றோலிய அமைச்சர் சுசில்பிரேமஜயந்த இந்த நிலையத்தைத் திறந்து வைப்பார். ஏற்கனவே இந்த நிலையம் எண்ணெய்சேமிப்பு நிலையமாகப் பெயர் குறிப்பிட்டபோதிலும் 1998 ஆம் ஆண்டிலிருந்து சாதாரண எண்ணெய் விற்பனை நிலையமாகவே செயற்பட்டு வந்துள்ளது. தற்போது வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இது உப எண்ணெய் விநியோக நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் பல ஏனைய இடங்களுக்கு இந்த உப நிலையத்தினூடாக எண்ணெய் விநியோகம் செய்யப்படும். மேலும் இந்த நிலையம் கொலன்னாவையில் அமைந்துள்ள பெற்றோலிய கூட்டுத்தாபன கட்டமைப்பினால் நிர்வகிப்படுமெனவும் தெரியவருகின்றது. (க)

# இராணுவ வீரர்களுடன் இப்போது நாய்களும் வன்னியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளில்

கொழும்பு, ஜூலை 09

கண்ணிவெடிகளைத் துரிதமாக அகற்றுவதற்கு பயிற்றப்பட்ட எட்டு நாய்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் வவுனியா, மன்னார், முல்லைத் தீவு, கிளிநொச்சி பிரதேசங்களில் கண்ணிவெடிகளை விரைவில் அகற்றிவிட்டு மக்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்று தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இயந்திரங்கள் மற்றும் மனித சக்தியால் 1,113 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இயந்திரங்கள் மூலம் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 29 பிளை இயந்திரங்களை இராணுவத்துக்கு வழங்கியுள்ளது. கண்ணிவெடிகளை இயந்திரம் மூலம் அகற்றுவதில் 1,050 இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இயந்திரங்கள் அணுகமுடியாத இடங்களில் கண்ணிவெடிகளை அகற்ற 8 பயிற்றப்பட்ட நாய்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 27 | : 11.07.2010 |
| | : ஞாயிற்றுக்கிழமை |
| திதி | : அமாவாசை பி.இ. 01.45 வரை |
| நட்சத்திரம் | : திருவாதிரை பி.ப. 04.58 வரை |
| சுபநேரம் | : 08.59 - 10.29 |
| ராகுகாலம் | : 04.29 - 05.59 |

அமாவாசை விரதம்

# கரடிப்போக்குச் சந்தியில் எரிபொருள் நிரப்புநிலையம்

## 13ஆம் திகதி திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை10

கிளிநொச்சி கரடிப் போக்குச் சந்தியில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் இத் தகவலை தெரிவித்தார்.

பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு எரிபொருள் விற்பனை நிலையத்தை திறந்து வைப்பார்.

இந்நிகழ்வில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (50-224)

## திருநெல்வேலியில் கொமர்ஷல் வங்கிக்கிளை

யாழ்ப்பாணம், ஜூலை10

கொமர்ஷல் வங்கியின் கிளை ஒன்று பலாலி வீதி திருநெல்வேலியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11.27 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (50-201)

# தடகளப்போட்டிகள் இன்றுமுதல் மன்னாரில்

யாழ்ப்பாணம், ஜூலை10

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ்.மோகனதாஸ் தலைமையில் மன்னார் கருங்கடல் றோ.க.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் ஏ.நிக்கலஸ்பிள்ளையும் கௌரவ விருந்தினராக மன்னார் மாவட்ட பிரிகேட் கொமாண்டர் எச்.எல்.வி.என்.லியனகே, வட மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரையும் சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட சர்வோதய இணைப்பாளர் எஸ்,லோகேந்திரராசாவும் கலந்துகொள்வர்.

(50-201-86)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்விவலய தொழில்நுட்ப உத்தியோகத்தர்
கே.தவலேஸ் அவர்களின் அன்புத் தந்தை

## சின்னத்துரை கேசவராசா

அவர்கள் அமரத்துவம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
வலயக்கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை.

(100472)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 13.10.1984
இறப்பு: 22.06.2009
திதி: சதுர்த்தசி 10.07.2010

அமரர்
## மகேந்திரன் சசீந்திரன்

ஓராண்டு உன் பிரிவு இன்றுடன்
நூறாண்டு வாழவே நாம் கண்ட கனவுகள்
இன்று விழியிரண்டும் வலியின் வேதனையில் துடிக்கிறது.....
ஆண்டுகள் கடந்தாலும் நீ செதுக்கிச் சென்ற
பாசமெனும் சிலை-நம்
இதயத் தூண்களை விட்டு என்றுமகலாதே....
நட்பெனும் இலக்கணத்தின் நாயகனை இழந்து விட்டோம்
கைகோர்த்து தோழமையில் காட்டிய அன்பு உந்தனது
என்று அன்று நீ நினைத்தாய்.....
அன்று நடந்த பாதகத்தால் வாழ்வை நீ இழந்தாய்...
ஆருயிர் மகனே வெண்நிலவாய் எமக்குள்ளே
என்றும் நீ ஒளிர்வாயடா
கண்ணா பாசத்தின் பனித்துளிகள் காயமுன்னே
பூவொன்று கருகியதே.....
புன்னகையின் புகலிடமே உன்னருகில்
நாம் வாழும் பாக்கியத்தை இழந்துவிட்டோம்
சசி உன் நினைவுகள் எம்முயிர் வாழும்வரை
எம்முடன் வாழும்...
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

31, K.K.S. Road,
Sharujan Fancy
Kokuvil West, Kokuvil.

தகவல்:
குடும்பத்தினர்

(100471)

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதபிள்ளை அம்பிகைபாகன்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை அம்பிகைபாகன் (முன்னாள் இ.போ.ச. பேருந்து நடத்துநர்) நேற்றுமுன்தினம் (08.07.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-அரியரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராணியின் அன்புக் கணவரும் வாசுகன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), காமிலா (பிரதேச செயலகம், நல்லூர்), சர்மிலன் (யாழ்.இந்துக் கல்லூரி மாணவன், க.பொ.த.(உ/த) கணிதப் பிரிவு 2008) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பரணீதரன் (பொறியியலாளர், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட அலுவலகம்(UNDP) யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும், பிரித்திகாவின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான வசந்தகோகிலம், விவேகானந்தன் மற்றும் திருநாவுக்கரசு, இளங்கோதை, காலஞ்சென்ற கௌரிகாந்தன் மற்றும் கௌரிதேவி, விமலாதேவி, தயாநிதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தில்லைநாதன், காலஞ்சென்ற இராஜேந்திரன் மற்றும் விஜயசீலன், யோகலிங்கம், சந்திரகுமார், அரியநாயகம், யோகராணி, காலஞ்சென்ற புஷ்பராணி மற்றும் தர்மராசா, சிவராசா, காலஞ்சென்ற மகேந்திரராணி மற்றும் தேவராசா, கமலராசா, காலஞ்சென்ற தயாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.07.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்தட்டுமட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(100480)

## சைவத்திரு அப்பையா சிவப்பிரகாசம்

(ஏழாலை மேற்கு)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், துணவி, வட்டுக்கோட்டை, ஏழாலை, கொழும்பு ஆகிய இடங்களை வாழ்விடங்களாகவும் Norway யில் இறுதி 14 வருடங்களாக வாழ்ந்தவருமாகிய அப்பையா சிவப்பிரகாசம் 03.07.2010 சனிக்கிழமை அன்று சிவபதம் அடையப்பெற்றார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பையா - முத்தாபரணம் தம்பதியினரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்ற ஆறுமுகம்-செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஞானத்தின் அன்புக் கணவரும் சக்திதரன் (ராஜன்), சக்திமித்திரன் (மித்தி), சக்திகிரீவன் (கிரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரஜனி (Baba), வாசுகி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆர்யா, சுஜரித்ரன், சுஜரூபன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சகுந்தலா (Baby)வின் பாசஅண்ணனும் காலஞ்சென்றவர்காளன வேலாயுதம், கண்மணி மற்றும் பராசக்தி (லண்டன்), கிருஷ்ணமூர்த்தி (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் துதிமலர் (இலங்கை), ஏகாம்பரேஸ்வரி (இலங்கை), நிர்மலராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.07.2010) ஞாயிற்றுக் கிழமை Bergen Norway யில் நடைபெறும். அன்றையதினம் நண்பகல் 12.30 மணிக்கு பூதவுடல் அஞ்சலிக்கு வைக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : சந்திரன்
தொலைபேசி : 004755138507, கைத்தொலைபேசி : 004799700956
சக்திமித்திரன்: தொ.பே: 004755167994, கை.தொ: 004797032707
சக்திகிரீவன்: தொ.பே: 0094212226048, 0094213218362.
முகவரி: BAAREKAPELLET
HARALDSPLASS SYKEHUS,
BERGEN.

தகவல் :
பிள்ளைகள்.

(ஓ/569055)

## சாவகச்சேரிப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு திங்கள்முதல் தடுப்பூசி

தென்மராட்சி, ஜூலை 10

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் நாளை மறு தினம் திங்கட்கிழமை தொடக்கம் ஏற்றப்படவுள்ளது.

திங்கட்கிழமை மீசாலைப் பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-207)


# COMPUTER EXPRESS
## Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

## மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் 2010

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office<br>3 Months<br>3500/= | Diploma in Desktop Publishing<br>4 Months<br>~~22500/=~~ 4500/= | Diploma in Web Page Designing<br>3 Months<br>~~22500/=~~ 4500/= |
| Diploma in Graphic Designing<br>4 Months<br>~~22500/=~~ 4500/= | Diploma in Hardware Engineering<br>3 Months<br>~~20000/=~~ 4000/= | Diploma in Auto CAD<br>3 Months<br>~~22500/=~~ 4500/= |
| Diploma in Accounting Package<br>3 Months<br>~~22500/=~~ 4500/= | Diploma in Computer Science<br>4 Months<br>~~22500/=~~ 4500/= | Honors Diploma in Computer Science<br>3 Months<br>~~32500/=~~ 6500/= |

80% Off

50% Off Advance Courses
Dip. in. Multimedia ~~10000~~ 5000/=
Dip. in. Video Editing ~~9500~~ 4750/=

Batch i - 10-07-2010 - 9Am or 3pm
Batch ii - 12-07-2010 - 9Am or 3pm
Batch iii - 14-07-2010 - 9Am or 3pm
Batch iv - 17-07-2010 - 9Am or 3pm

1 Week Courses
(Monday to Friday)
Start On 12.07.2010 At 9AM
1) Diploma in Hardware Engineering
2) Diploma in Video Editing
3) Diploma in Graphic Designing



## காணி விற்பனைக்குண்டு

பொலிகண்டி கந்தசுவாமி கோயிலுக்கு முன் றோட்டில் கோயிலுக்கு மிக அண்மையில் 4 பரப்புக் காணி 50 க்கு குறையாத பனை மரங்களுடன் வீடு கட்டக்கூடிய சதுரமான காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் :0775252246

(ஓ/569056)


## பெயர் மாற்றம்

சோளங்கன் கரணவாய் மேற்கு (S.P.O. வளவு) கரவெட்டியைச் சேர்ந்த திருமதி குருகுலசிங்கம் ஜெகதீஸ்வரி அம்மா ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து (10.07.2010) திருமதி குருகுலசிங்கம் ஜெகதீஸ்வரி என மாற்றம் செய்துள்ளேன் என்பதனை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

கு. ஜெகதீஸ்வரி

(98207)


## கடை வாடகைக்கு

மானிப்பாய் யாழ் வீதியில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு; 0770767322



புதிய பிரிவு ஆரம்பம் MIS
(A/L) ICT - 2012 11.07.2010 Sunday at 5 pm
R.Kumaran - B.Sc.
அடிப்படையிலிருந்து முற்று முழுதாகக் கற்பதற்கு......
# 74, Sabapathy Lane, Thalaiyaali, pirambady,Jaffna
TPNo : 0776577359



SHAMROCK
A/L-2012
C/Ma - G.கஜனன் (B.Sc)
Sat, Sun 6.00 Pm
B10 - R.தகனேந்தன் (B.Sc)
Wed, Fri 4.30 Pm

★ Gr 1 முதல் O/L வரை.
★ ENG . Medium Gr 6 To 11
★ ENG. LIT. Gr 10, 11
★ I.C.T, G.I.T.
★ புலமைப்பரிசில் (5)



## காயத்திரி பப்ளிகேஷனின்

### நாடளாவியரீதியில் பாடசாலைமட்ட முன்னோடி புலமைப்பரிசில் பரீட்சை 2010

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களை பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான முன்னோடி பரீட்சையை ஆசிரியர் வே. நவமோகனின் வழிகாட்டலில் காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனம் நாடளாவியரீதியில் பாடசாலை மட்டத்தில் நடத்தவுள்ளது.

- இரண்டு பகுதி வினாத்தாள்களைக் கொண்ட இப்பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதம் 18 ஆம் திகதி நாடளாவியரீதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- அனுமான வினாக்களைக் கொண்டதாக இருக்கும் இப் பரீட்சையில் திறமையாகச் சித்தியடையும் மாணவர்களுக்கு பரிசில்களும் சித்தியடையும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- மாகாண மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு எமது இலச்சினை பொறிக்கப்பட்ட பதக்கமும், தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெறும் மாணவருக்கு 22K தங்கப் பதக்கமும் வழங்கப்படும்.
- பரீட்சைக்கட்டணம் தலா ஐம்பது ரூபா வீதம் அறவிட்டு வே. நவமோகன் என்ற பெயருக்கு வெள்ளவத்தை தபாலகத்தில் மாற்றத்தக்கதாக அனுப்பி வைக்க வேண்டும்.
- பரீட்சை வினாத்தாள்களை பரீட்சைக்கு இரு தினங்களுக்கு முன்னர் பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைப்போம்.
- பரீட்சை முடிந்தவுடன் அவற்றை அப்படிஜேபார்சல் செய்து திருத்துவதற்கு எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- கொழும்பு, யாழ்ப்பாண மாவட்டங்களில் தனிப்பட்ட ரீதியிலும் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவர்கள் 100 ரூபா வீதம் கட்டணம் செலுத்தவேண்டும்.

இப் பரீட்சைக்கு தோற்றவிரும்புவர்கள் 12ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்

மோகன்ஸ்
A9 பளை Town, பளை. T.P: 0778176476


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர்
திருமதி பா.வேழினி அவர்களின் அன்புத் தாய்

## அன்னலெட்சுமி வல்லிபுரம்

அவர்கள் அமரத்துவம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
வலயக்கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை.

(100472)


# வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள சகல வசதிகளுடனான சுற்றுலா விடுதிக்கு பின்வரும் பணிகளுக்குப் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

* விடுதி முகாமையாளர் - ஆண்
* வரவேற்பாளர்கள் - ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கணனி அறிவுடன் ஆங்கிலம் அல்லது சிங்களம் தெரிந்திருத்தல் மிக அவசியம்.
* விடுதி உதவியாளர்கள் - ஆண்
* சுத்திகரிப்பாளர் - ஆண்

விண்ணப்பப்படிவங்களை சுய கையெழுத்துக்களினால் பூரணப்படுத்தி, தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு 14.07.2010ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இல.321, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(100478)


# 6ஆம் மாத நினைவஞ்சலி



திருமதி
## விஜயநந்தினி கேதீஸ்வரன்

மலர்வு
1969.12.26

உதிர்வு
2010.01.10

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு மாதம் ஆறுகடந்தாலும்
உங்கள் இறப்பை எம் மனம் நம்ப மறுக்கின்றதே
மாதங்கள் பல சென்றாலும் தாயே - உன்
அன்பு முகம் எம்நினைவில் மறையாதம்மா!
என்றும் உன் ஆத்மா சாந்தியடைய
நாம் இறைவனை வேண்டுகின்றோம்.

- ஓம் சாந்தி -

நீங்கா நினைவுகளுடன்:
கணவர்: கேதீஸ்வரன், பிள்ளைகள்:
சுபஸ்திகா, சுஜீவன், கஜாளினி, சஜிருயன்.

118, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி.

(100463)



சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306 பி1 இன் இரண்டாவது உப மாவட்ட ஆளுநராக லயன் எஸ்.எஸ். தங்கராஜா (எம்.ஜே.எவ்) தெரிவு செய்யப்பட்டமையைப் பாராட்டி கௌரவிக்கும் விழா அண்மையில் மானிப்பாயில் இடம்பெற்றது.

மங்கள வாத்தியங்களுடன் அழைத்து வரப்பட்ட லயன் திரு.திருமதி தங்கராஜா தம்பதியினர் மங்கள விளக்கேற்றுவதனையும் நிகழ்வின் தலைவர் லயன் வைத்திய கலாநிதி வை. தியாகராசா தலைமையுரை ஆற்றுவதையும் இரண்டாவது உப மாவட்ட ஆளுநர் லயன்.எஸ்.எஸ். தங்கராஜா ஏற்புரை நிகழ்த்ததுவதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் - இரா. சுதா)

# நவாலி தேவாலயம் மீதான விமானத் தாக்குதல் அனைத்து உள்ளங்களிலும் ஆழப்பதிந்த நிகழ்வு

## அஞ்சலி வைபவத்தில் அருட்தந்தை சோதிநாதன்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நவாலித் தேவாலயம் மீதான விமானத் தாக்குதல் தமிழ் நெஞ்சங்களில் மட்டுமல்ல. அனைத்துள்ளங்களிலும் ஆழப்பதிந்துள்ள நிகழ்வாக மாறிவிட்டது.

இந்த படுகொலையின்ளபோது சிறுவர்கள், வயோதிபர்கள், அரச சேவையாளர்கள், இடம்பெயர்ந்தவர்கள் என மொத்தம் 147 பேர் பலியானார்கள்.

இந்த உறவுகளை இன்றைய நாளில் நினைவு கூருவதனை உலகறியச் செய்ய வேண்டும்.

நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயம் மீதான தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவு தினத்தில் கலந்து கொண்டுஅஞ்சலியுரையாற்றியபங்குத்தந்தை ஜோன்பிள்ளை பஸ்ரியாம்பிள்ளை சோதிநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

09.07.1995 அன்று நவாலியில் இடம்பெற்ற விமானத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் நினைவு தின நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 5.40 மணியளவில் நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட அருட்திரு ஜோன்பிள்ளை பஸ்ரியாம்பிள்ளை சோதிநாதன் மேலும் தெரிவிக்கையில்:-

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து களைப்படைந்த நிலையில் ஆலயத்தில் தஞ்சம் அடைந்த பொதுமக்களின் மீதான தாக்குதலில் கொல்லப்பட்ட உறவுகளின் இரத்தங்கள் இன்னும் ஆறவில்லை. தாக்குதல் சின்னங்கள் ஒவ்வொன்றும் வரலாறுகளைக் காட்டுகின்றன. தொட்டு நிற்கின்றன.

இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறக்கூடாது - என்றார். நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலில் கொல்லப்பட்ட உறவுகள் நேற்றுக் காலை ஆலயத்தில் ஒன்று கூடி பிரார்த்தனையில் ஈடுபட்ட பின்னர் அனைவரும் கண்ணீர் மல்க கதறியழுத காட்சி அனைத்துள்ளங்களின் மனதை உருக வைத்தன.

பின்னர்: நவாலி சென். பீற்றர்ஸ் ஆலயத்தில் பலியானவர்கள் நினைவாக உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னத்திற்கு அருகில் நவாலி சென். பீற்றர்ஸ் ஆலய பங்குத் தந்தை அருட் திரு. ஜோன்பிள்ளை பஸ்ரியாம்பிள்ளை சோதிநாதன் இறந்தவர்களை நினைவு கூர்ந்து மாலையணிவித்து மெழுகுவர்த்தி தீபம் ஏற்றிவைத்தார்.

அதனை தொடர்ந்து இறந்தவர்களின் உறவுகள் நினைவுச் சின்னத்தில் மெழுகுவர்த்திகளை ஏற்றினார்கள். மேலும் நவாலி ஸ்ரீ.கதிர்காமமுருகன் ஆலயத்திலும் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

நவாலி வடக்கு புலவர் வீதியில் உருவாக்கப்பட்ட நினைவுச்சின்னத்திலும் மெழுகுவர்த்தி தீபம் ஏற்றப்பட்டு மாலைகள் அணிவிக்கப்பட்டன.

(50-302)




# பொதுமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண கிராமம் தோறும் 30பேர் கொண்ட இரு குழுக்கள்

## பொலிஸார் விசேட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ்.குடாநாட்டில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களை இனம் காண்பதற்கும் பொதுமக்களுடனான தொடர்புகளை விஸ்தரிப்பதற்கும் ஒவ்வொரு கிராமம் தோறும் முப்பது பேர்கொண்ட இரு குழுக்களை நியமிக்கவுள்ளதாக யாழ்.பொலிஸ் தலைமை அலுவலகப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது இங்குள்ள மக்கள் படிப்படியாகச் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

எனினும் மேலும் இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மற்றும் இங்கு நிலவும் குற்றச் செயல்களை இனங்கண்டு அவற்றைத் தடுப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கும் இங்குள்ள 56 கிராம சேவகர்பிரிவுகளில் இருந்தும் முப்பது பேர்கொண்ட இளைஞர் குழுக்களையும், வேறு முப்பது பேர்கொண்ட முதிய வர்கள் அடங்கிய குழுக்களையும் தெரிவு செய்யவுள்ளோம்.

இவர்களில் முதியவர்கள் அடங்கிய குழுவினர், கிராமமட்டத்தில் நிலவுகின்ற குற்றச் செயல்கள் மற்றும் பொதுமக்களின் தேவைகள் குறித்த ஆலோசனைகளை எமக்கு வழங்குவர்.

இந்த ஆலோசனைகளைப் பெற்றுக் குற்றச் செயல்களை இனங்காணும் பொறுப்பு இந்த இளைஞர்கள் கொண்ட குழுக்களிடம் வழங்கப்படும். அதற்குரிய பயிற்சிகளை வழங்குவதற்கும் நாம் தயாராகவுள்ளோம்.

அதுமட்டுமல்லாது வெளிநாடு செல்ல விரும்புவோர் இந்த முதியோர் குழுத் தலைவரிடம் நற்சான்றுக் கடிதம் பெற்று எம்மிடம் சமர்ப்பிப்பின் அவர்களுக்கான நற்சான்றுப் பத்திரம் பொலிஸாரால் வழங்கப்படும்.

இந்தக் குழுக்களை வழி நடத்துவதற்கும் இக் குழுவிற்கான அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்காகவும் நான்கு பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழுக்கள் இன்று முதல் 56 கிராம சேவகர் பிரிவுகளுக்கும் அனுப்பப்படவுள்ளனர்.


இவர்களால் திரட்டப்படுகின்ற தரவுகளின் அடிப்படையில் மேற்படி குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். இந்த அதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பில் இக் குழுக்கள் இயங்கவுள்ளன-என்றார். (50-16)

## பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கத்தின் 40ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை10

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க 40 ஆவது ஆண்டு விழாவும் 88 ஆவது அனைத்துலகக் கூட்டுறவு தின விழாவும் மற்றும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை ப.நோ.கூ.சங்க தலைமை அலுவலகத்தில் சங்கத் தலைவர் த.சந்திரதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலக நிர்வாக அலுவலர் க.முருகையா, மக்கள் வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் மு.சிவனேசன், வல்வெட்டித்துறை கிளை முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் ஆர்.ராஜாராம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் ஏ.ஏ.நடராசா ஆகியோர் கலந்துகொள்வர். (50-201)




யாழ்ப்பாணம்,ஜூலை10

பிரசித்திபெற்ற நவாலி ஸ்ரீகதிர்காம முருகன் ஆலய ஆடிவேல் உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் விசேட பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து கிராமிய ரீதியிலான ஊர்வலம் இடம்பெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவமும் 28ஆம் திகதி பொங்கல் பூசையும் இடம்பெறும். (204-302)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை10

கந்தர்மடம், பழம் வீதி சித்தி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா 'இசையும் இறைவனும்' என்னும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை10

மாவை கொல்லங்கலட்டிஸ்ரீமத் சிதம்பரரேஸ்வர சுவாமி ஆலய கும்பாபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் முற்பகல் 10 மணிக்கு மகாயாக விசேட பூசை, தூபி அபிஷேகம் என்பன நடைபெறும்.

இன்று சனிக்கிழமை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (204)

## நல்லூர் பிரதேசத்தில் புதிதாக காணி கொள்வனவு செய்வோருக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை10

நல்லூர் பிரதேச சபை பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் புதிதாகக் காணிகளைக் கொள்வனவு செய்பவர்கள் நல்லூர் பிரதேச சபையுடன் தொடர்புகொண்டு உரிய அறிவுறுத்தலைப் பெற்ற பின்னரே கொள்வனவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இதுவரை காணிகளை பெயர் மாற்றம் செய்யாதவர்கள் உடனடியாகப் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றம் செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(50-14-ரி)

## நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூலை10

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நியமித்துள்ளார். (50-டி-ரி)

## சந்திரோதய வித்தியாலய மாணவர்களுக்கு பாதணிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை10

வடமாகாண ஆளுநர் நிதியிலிருந்து உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவர்கள் 221 பேருக்கு 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பாதணிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் அன்ரன் பிரேமதாசா தலைமையில் இடம்பெற்றது.

இதில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பாதணிகளை வழங்கினார். (50-23)

## காரைநகர் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை10

காரைநகர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

காரைநகர் மொந்திப்புலம் வீதி, காரை திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டத்திற்கான சுற்றுமதில் மற்றும் இணைப்பு வீதி அமைத்தல், வேதரடைப்பு சனசமூக நிலைய கட்டட அபிவிருத்தி பணி, பேரம்பலம் முன்பள்ளி அபிவிருத்தி மற்றும் மலசலகூடம் அமைத்தல் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒப்பந்தகாரரிடம் இருந்தும் கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

(50-224)

## வெள்ளைப்பூடு விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ்.நகரில் வெள்ளைப்பூட்டின் (உள்ளி) விலை திடீரென அதிகரித்துள்ளது.

வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ வெள்ளைப்பூடு 300 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

(50-224)

# அதிகாரப் பகிர்வை ஆதரிக்கும் கம்யூனிஸ்ட் கட்சி உருவாகி 67 ஆண்டுகள் பூர்த்தி

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 67ஆவது ஆண்டு நினைவை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

### பிரிவினையைத் தவிர்க்க அதிகாரப் பகிர்வு

இலங்கையில் 1943 ஜூலை 03 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு 67 ஆண்டுகள் ஆகிவிட்டது. இதற்கு முன்னர் 1935 இல் உருவாக்கப்பட்ட சமசமாஜக் கட்சியில் பங்காளிகளாக கம்யூனிஸ்ட் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். முதன் முதலில் மருத்துவப் படிப்பை முடித்து இலங்கை வந்த டாக்டர் எஸ்.ஏ.விக்கிரம சிங்கா ஏகாதிபத்தியத்திற்கெதிராக தாய கத்தின் பூரண விடுதலைக்காக தென் இலங்கை முழுவதும் பிரசாரம் செய்தார். இவர் ஒரு சிறந்த மாக்ஸிஸ்ட் தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்டவர். 1931 இல் மொறவாக்க தொகுதியிலிருந்து சட்ட சபைக்கு தெரிவானவர். இந்தக்காலகட்டத்தில்தான் கலாநிதி என்.எம்.பெரேரா, பிலிப் குணவர்த்தனா, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா, அ.வைத்தியலிங்கம் போன்ற வர்கள் வெளிநாட்டில் கல்வியை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பி இருந்தார்கள். இவர்கள் அனைவரும் மார்க்ஸிஸ, லெனி னிஸத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். தொழிலாளர் அரசை நிறுவ வேண்டிய அவசியத்தை உணர்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங் காவுடன் இணைந்து சமசமாஜக் கட்சியை உருவாக்கினார்கள். மலேரியா ஒழிப்பிற்காக சூரியமல் இயக்கத்தை நடத்தினார்கள். இதன் பிரதான கடமை மலேரியா ஒழிப்பிற்காக வைத்திய உதவி செய்தலாக இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் இரண்டாவது உலகமகாயுத்தம் நடைபெற்றது. நாசிசப் படைக்கு எதிராக சோவியத் யூனியன் ஏனைய நாடுகளுடன் இணைந்து போரிட் டது. கட்சிக்குள் ஒரு தத்துவப் போராட்டம் இந்நிலையில் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரம சிங்க, அ.வைத்தியலிங்கம், ரி.துரைசிங்கம் மற்றும் பலரும் சோவியத்தின் ஏஜெண்டு கள் என்று முலாம் பூசப்பட்டு சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். வெளியேறியவர்கள் இங்கிலாந்தில் பட்டப் படிப்பை முடித்து தாயகம் திரும்பிய பீட்டர் கெனமன், பொன். கந்தையா போன்றவர்களுடன் இணைந்து ஐக்கிய சோசலிச கட்சியை 1940 இல் உருவாக்கினார்கள். பின்பு இதையே உத்தியோகபூர்வமான கம்யூனிஸ்ட் கட்சியாக 1943 ஜூலை 03 ஆம் திகதி பிரகடனப்படுத்தினார்கள். உலக கம்யூனிஸ்ட் முகாமில் அணிசேர்ந்து செயற்பட்டார்கள்.

நாட்டிலுள்ள முற்போக்காளர்களை மேலும் அணிதிரட்டி கம்யூனிஸ்ட் கட்சியைப் பலப்படுத்தினார்கள். ஏகாதிபத்தியத்திற் கெதிராக சகல முற்போக்காளர்களையும் ஒன்றிணைத்தார்கள். 1947 தேர்தலில் கட்சி போட்டியிட்டது. இதில் கம்யூனிஸ்ட் கட்சி 13 இடங்களில் போட்டியிட்டு 03 தொகுதிகளில் வெற்றியீட்டியது. இந்தத் தேர்தலில் கட்சி 3.7 சதவீத வாக்குகளைப் பெற்று ஒரு பலமான கட்சியாக நாடாளு மன்றத்தில் விளங்கியது.

தேர்தல் முடிந்ததுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கெதிராக ஒரு மாற்று அணியை உரு வாக்கி ஆட்சி அமைக்க முயற்சித்தார்கள். தமிழ் பிரதிநிதிகள் ஐக்கிய தேசியக்கட்சி யுடன் இணைந்ததால் மாற்று அணியால் ஆட்சியமைக்க முடியவில்லை.

1947ஆம் ஆண்டு தேர்தலில் அகில இந்திய காங்கி ரஸ் கட்சி 06 ஆசனங்களைப் பெற்றிருந்தது, இவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள். முற்போக்கு கட்சிகளுக்கு ஆதரவாக செயற்பட்டார்கள். ஐக்கிய தேசியக்கட்சி இவர்கள் பிரஜாவுரிமை அற்றவர்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாது என்று ஒரு சட்டத்தைக்

## மக்கள் சார்பு நிலையில் அதன் வளர்ச்சியும் பணிகளும்

கொண்டுவந்து இவர்களின் ஆசனத்தை இல்லாமற் செய்தார்கள். இதற்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சி போரிட்டது; எதிர்த்து வாக்களித்தது. தமிழ் பிரதிநிதிகளின் இரட்டை வேடத்தால் இச்சட்டம் நிறைவேறியது.

### இனப்பிரச்சினையும் கம்யூனிஸ்ட் கட்சியும்

கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பித்ததிலிருந்து பல்லின, மொழி, கலாசார, மதங்களைக் கொண்ட மக்கள் வாழ்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டி வந்துள்ளது. 1944 ஒக்டோ பர் 15 ஆம் திகதி அவர்களால் நிறைவேற் றப்பட்ட தீர்மானம் இதற்கு சான்றாகும். இதில் இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கூறியுள் ளார்கள். இந்த நிலைப்பாட்டினை கட்சி யின் தொழிற்சங்க சம்மேளனமும் சுட்டிக் காட்டியுள்ளது.

**து.குகதாஸ்**
**கம்யூ.கட்சி-மாவட்ட செயலாளர்**

வடபகுதி கம்யூனிஸ்ட்கள் ஒரு மாநில மாநாட்டைக் கூட்டினார்கள். அதில் தமிழ் பேசும் மக்கள் தொன்றுதொட்டு பாரம்பரியமாக வடக்கு, கிழக்கில் வாழ்ந்து வரு கின்றார்கள் என்பதை இந்த நாடு ஏற்க வேண்டும் என்றும், தமிழ் பேசும் மக்களுக்கு இந்தப்பகுதியில் தனியான நிர் வாக அமைப்பை ஏற்படுத்தி ஒரு பிரதேச சுயாட்சி முறையை உருவாக்க வேண்டும் என்ற தீர்விற்கும் வந்தார்கள். இத்தகைய தீர்வுதான் தேசிய ஒற்றுமையையும், நாட் டையும் பாதுகாக்கும் என்றார்கள்.

எனவே தான் 1954 இல் வல்வெட்டித் துறையில் நடந்த மாநாட்டில் கட்சி பிரதேச சுயாட்சி என்பதை முன்மொழிந் தது. இத்தீர்மானத்தை நிறைவேற்ற கட்சி யின் தேசிய மாநாட்டிற்கு அனுப்பி வைக் கப்பட்டு, இந்தத் தீர்மானம் மாத்தறையில் கூடிய கட்சி காங்கிரஸில் நிறைவேற்றப் பட்டதுடன், 1956 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலும் இது தெட்டத்தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில்தான் சிங்களம் மட்டும் சட்டத்தை கட்சி வன்மையாகக் கண்டித் தது. பதிலுக்கு சிங்களத்தோடு தமிழும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்ட்கள் கூறினார்கள். சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து கம்யூனிஸ்ட்கள் வாக்களித்தார் கள்.

### பண்டா- செல்வா ஒப்பந்தம்

சிங்களம் மட்டும் சட்டத்தை தமிழ் மக்கள் எதிர்த்து அறவழியில் போராட்டம் நடத்தினார்கள். இந்த நிலையில் அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்கா தமிழ் மக்களின் பெருமதிப்பைப் பெற்ற தந்தை செல்வநாயகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி ''மாவட்ட ரீதி யான ஆட்சி அதிகாரமுறை'' என்ற இணக்கப்பாட்டிற்கு வந்தார். இது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முற்றுமுழுதான தீர்வாக அமையாதபோதும் சம்பந்தப் பட்டவர்கள் ஓர் உடன்படிக்கைக்கு வந்ததை கம்யூனிஸ்ட்கள் ஆதரித்தார்கள். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இதை எதிர்த்து கண்டி யாத்திரை மேற்கொண்டு இன வன்முறையைத் தூண்டினார். இதன் முடிவு ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இதைக் கண்டித்து தமிழ் மக்களின் நியாயபூர்வமான தீர்வை வழங்கும்படி கம்யூனிஸ்ட்கள் குரல்கொடுத்தார்கள். சிங்கள மக்கள், தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனம், பரஸ்பர புரிந்துணர்வின் மை ஏற்பட்டது.

### ஆயுதப் போரின் ஆரம்பம்

தொடர்ச்சியான வன்முறைகளுக்கு தமிழர்கள் அதிகமானோர் பலியாயினர். இளைஞர்கள் செய்வதறியாது ஆயுதமேந் தத் தொடங்கினார்கள். இவர்களை அரசு ஆயுதபலம் கொண்டு அடக்கியது. வட பகுதி மக்கள் உணவிற்கே பெரும் கஷ்டப் பட்டார்கள். இந்தநிலையில் இந்தியா உணவுக் கப்பலை அனுப்பியது. ஆனால் இலங்கைக் கடற்படையின் பலத்த எதிர்ப் பினால் உணவுக் கப்பல் திரும்பியது. பதி லுக்கு இந்திய அரசு இலங்கை வான் பரப் பிற்கு வந்து உணவுப் பொட்டலத்தை போட்டதுடன், ஜே.ஆர்.மீது பெரும் கோபம் அடைந்து தனது ராஜதந்திர நடவடிக்கைகளை ஆரம்பித்து இதன் விளைவுதான் இந்திய - இலங்கை ஒப் பந்தம் ஆகும்.

### 13 ஆவது திருத்தச் சட்டமும், கம்யூனிஸ்ட் களும்

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை கம்யூ னிஸ்ட்கட்சி ஆதரித்தது. இதன் மூலம் மத்தியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் மாகாணமட்டத்தில் பகிர்ந்தளிக்கப்படும் என்பதினாலாகும். அவசர அவசரமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்வுத்திட்டத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்து வாக்களித்தது. இதன் தோற்றம் தான் வடக்கு கிழக்கு மாகாணசபை (தற்காலிகம்) இம்முறையை ஆதரித்த தனால் கம்யூனிஸ்ட்கள் பலர் நாடுபூராவும் சுட்டுக் கொல்லப்பட்டனர். மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் உரியமுறையில் வழங்கப்பட்டிருந்தால் இந்தக் கொடிய யுத்தம் கட்டுப்படுத்தப் பட்டிருக்கும் நாடும் முன்னேற்றப்பாதை யை நோக்கிச் சென்றிருக்கும்.

கம்யூனிஸ்ட் கட்சி நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையையும் எதிர்க்கின்றது. 1978 இலிருந்து இதை எதிர்த்து குரலெழுப்பி வருகின்றது. நாடா ளுமன்ற ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும்! மனித உரிமை மதிக்கப்பட வேண்டும்! மக்கள் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும். இதற்காக கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்தும் பாடுபடும்.

---

# வலிகாமம் வலயத்தில் நடந்த ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

வலி. வடக்கு, ஜூலை 10

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கில தினப் சொல்வதெழுதல் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**தரம் 6**

அபிநயா சேயோன்(வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), தட்சன் யோகேஸ்வரன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), துஷாந்தினி ஞானச்சந்திரன் (இளவாலை புனித கன்னியர் மடம் மகா வித்தியாலயம்).

**தரம் 7**

அனோஜா சத்தியசீலன் (வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), தர்சனா சபாரெட்ணசிங்கி ( வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), மேசிதா தனஞ் செயன் ( உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் 8**

மச்சாயினி பாலசுப்பிரமணியம் ( உடுவில் மகளிர் கல்லூரி), கைசியா பேரின்பநாயகம் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), நொயலின் கொட்டிரி விஜயராஜ் (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**தரம் 9**

தனசிகா சின்னராசா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), விருத்திகா செந்தூர்செல்வன் ( உடுவில் மகளிர் கல்லூரி), அபிராமி குகதாசன் ( பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்).

**தரம் 10**

காயத்திரி தேவசுதன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), யூலியட் கோணி மரியநாயகம் (இளவாலை புனித கன்னியர் மடம் மகா வித்தியாலயம்),விஜிதா தவராசா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).

**தரம் 11**

கார்த்திகா குணரத்தினம் (பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), துர்க்காயினி இராஜ குலேந்திரன் ( தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) (இருவரும் முதலாம் இடம்), பரமேஸ்வரன் சதுர்வேதன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), நிலோஜினி அந்தோனிப் பிள்ளை (இருவரும் 3ஆம் இடம்).

**தரம் 12**

டயாளினி ஆனந்தராஜா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), உஷாமினி குலேஸ்வரராஜா ( உடுவில் மகளிர் கல்லூரி), சப்திகா குலதாஸ் ( உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் 13**

ஆன் லாவண்யா செபஸ்தியன் (இளவாலை புனித கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), பிரமிளா லக்ஸ்மிகாந்தன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), அனித்தா சபாரெட்ணம் (உடுவில் மகளிர் கல்லூரி).

சொல்வதெழுதல் போட்டியில் இரு ஆண்கள் மட்டும் தரம் 06,11 இல் 2ஆம், இடத்தையும், 3ஆம் இடத்தையும் பெற்ற போதிலும் ஏனைய தரங்கள் எதிலும் ஆண்கள் வெற்றி பெற வில்லையென்பது சுட்டிக்காட்டக் கூடியதாகும். (86)

(தொடரும்)

---

### இத்தரணியில் வந்தெம்மைக் காத்தருள்வாய்!

வளமான இணுவையில் வள்ளி தெய்வானை யோடு
வாழ்வு கொண்ட - குமரேசா!
களத்தில் துணிவோடு வடிவேல் கரம் கொண்டு
சூரனைக் கொன்றொழித்த வேலவா!
உளமோடு மனமுருகி உனை துதிப்போர்க்கு
வண்ண மயில் மீது வந்து அருளும் - முருகா!
தளராத மனத்தோடு தேரேறி இத் தரணியில்
வந்தெம்மைக் காத்தருள்வாய் - மால்மருகா!

**சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம்,**
நாயன்மார்கட்டு.

*இணுவில் கந்தசுவாமி கோயில் தேர் உற்சவம் இன்று (10.07.2010) சனிக்கிழமை இடம் பெறுகிறது. அதனையொட்டி இக்கவிதை இங்கு பிரசுரமாகிறது.*



நெடுந்தீவு மகா வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி பி.எம்.கே. அன்ரனி எழுதிய 'அறவாழ்வின் அச்சாணிகள்' என்னும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ். அடைக்கல மாதா ஆலய மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் அ.வெ.அரியநாயகம், ஆசிரியர் இரா.தர்மரத்தினம் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும் நூலின் முதற்பிரதியை திருமதி அன்ரனியிடமிருந்து யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி எஸ்.சுகந்தரராசா பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# பொதுமக்களுக்கான சேவைகளை வழங்க பொலிஸார் 24 மணி நேரமும் சேவையில்

## பொறுப்பதிகாரி சமன் சிகேரா தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

பொது மக்களுக்குத் தேவையான சேவைகளை உரியமுறையில் செய்வதற்காகப் பொலிஸார் 24 மணி நேரமும் கடமை புரிந்து வருகின்றனர். இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.பொலிஸ் தலைமை அலுவலகப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொது மக்களைக் கட்டுப்படுத்துவதற்காகவல்ல, பொது மக்களுக்குச் சேவை செய்யும் நோக்குடனேயே பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.




எனவே பொது மக்கள் தங்களது பிரச்சினைகள் தொடர்பாக எம்முடன் தொடர்பு கொண்டு முறையிடும் பட்சத்தில் அவற்றுக்குரிய தீர்வுகளை முன்வைப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

இவ்வாறு பொலிஸ் நிலையம் வரும் மக்கள் தமது பிரச்சினைகளுக்குரிய தீர்வுகள் பெறப்படாதவிடத்து அல்லது பொலிஸாரினால் வீணாக அலைக்களிக்கப்பட்டால் என்னை நேரடியாகவே வந்து சந்திக்க முடியும்.

என்னைச் சந்திப்பதற்கு யாருடைய சிபார்சும் பெறப்படத் தேவையில்லை. மேலும் எந்தத் தேவையாயினும் 24 மணி நேரமும் எனது தொலைபேசி இலக்கமான 0773588778 உடன் தொடர்புகொள்ள முடியும்.

அத்துடன் மக்களுக்குச் சேவைசெய்வதற்காக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா தற்போது காங்கேசன்துறையிலேயே தங்கியுள்ளார். இவர் யாழ். நகரில் தங்கியிருந்து சேவைசெய்வதற்கு இடம் கிடைக்குமாயின் அவர் இங்கு வந்து சேவையை வழங்குவார் - என்றார். (50-16)

## தனியார் பஸ்தரிப்பு நிலையத்தின் சேதமுற்ற கூரை திருத்தப்படவில்லை



யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்.முற்றவெளிப் பகுதியில் அமைந்திருக்கும் தனியார் பஸ் தரிப்பு நிலையத்தின் சேதமடைந்த கூரைப்பகுதி இதுவரை புனரமைக்கப்படாமையால் அங்கு பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் வீசிய 'லைலா' காற்றினாலேயே இந்தக் கூரையின் தகரங்கள் தூக்கி வீசப்பட்டுக் கூரைப்பகுதி கடுமையாகச் சேதமடைந்தது.

சேதமடைந்த இந்தக் கூரை இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை.

வெளியிடங்களில் இருந்து யாழ்.நகருக்கு வந்து சேரும் தனியார் பஸ்களும் இந்த தரிப்பு நிலைய பகுதியிலேயே தங்கிச் செல்கின்றன.

இந்த நிலையில் பஸ்தரிப்பு நிலையக் கூரைகள் சேதமடைந்துள்ளமையால் பயணிகள், சாரதிகள், நடத்துநர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

எனவே இந்தக் கூரைத் தகரங்களை சீர்செய்துதருமாறு சம்பந்தப்பட்ட சாரதிகள் யாழ். மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-224)

## வார இறுதி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கொழும்பிலுள்ள ஏபிஎஸ் கல்வி நிறுவனத்தினால் நடத்தப்படும் உயர்கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலா கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் நவீன கல்வித்துறை சார்ந்த தகவல்கள், விசா தொடர்பான ஆலோசனைகள் என்பன நடைபெறவுள்ளதனால் அனைத்து ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-204)

* * *

பருத்தித்துறை, ஜூலை 10

புற்றளை மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை வித்தியாலய அதிபர் மு.அனந்தேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக இவ் வித்தியாலய பழைய மாணவனான கண்டி போதனா வைத்தியசாலை டாக்டர் வா.பேரின்பறூபன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார். (ஒ-190)

* * *

சுன்னாகம், ஜூலை 10

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் (நவோதயா பாடசாலை உரும்பிராய்) பரிசளிப்பு விழாவும் வயவன் மலர் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலை மண்டபத் தில் இடம்பெற உள்ளன. இந்நிகழ்விவுகளுக்குப் பாடசாலை முதல்வர் க.கனகராசா தலைமை வகிப்பார்.

இவ்விழாவிலே பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் சிவகுருபத்நாதனும் சிறப்பு விருந்தினர்களாகத் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும், வயாவிளான் ம.ம.வித்தியாலய முன்னாள் அதிபர் இ.ஆறுமுகம், பழைய மாணவரும் பொறியியலாளருமான ச.சர்வராஜாவும் கலந்துகொண்வார்கள். மலர் மதிப்பீட்டுரையை ஆசிரியர் ம.பா.மகாலிங்கசிவம் நிகழ்த்துவார். திருமதி கமலாதேவி பத்மநாதன் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (ஒ-55)

* * *

பருத்தித்துறை, ஜூலை 10

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசுத்தினம் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் விழா நடைபெறும். இதில் முன்னாள் அதிபர் திருமதி இராஜேஸ்வரி நந்தகுமார் பிரதம ஷிருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ-190-1-236)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 10

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப விவசாய நிறுவனத்தின் 24 ஆவது நிறுவன தினம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் மற்றும் விவசாயக் கல்லூரி அதிபர் ஆகியோர் இணைத் தலைமையில் இது இடம் பெறும்.

பிரதம விருந்தினர்களாக யாழ். ஏ.ரி.ஐ. நிறுவனப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஜெ. எம்.சகாயன், அவரது பாரியார் சிலாபம் வைத்தியசாலை வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி எல்.பி.சகாயன் ஆகியோர் கலந்து கொள்வார்.

மேற்படி நிகழ்வு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தில் இடம்பெறும் எனப் பணிப்பாளர் எச்.ஆர்கூல் அறிவித்துள்ளார். (50-302)

## கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டு விழாக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 67 ஆவது ஆண்டு விழாக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் ராஜா கொல்லூரே தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சருமான டி.ஈ.டபிள்யூ. குணசேகரா, கட்சியின் யாழ்.மாவட்டச் செயலாளர் ரி.குகதாஸ் ஆகியோர் சொற்பொழிவுகளை நிகழ்த்துவர். (50-201-86)

## சிவசக்தி மணி மண்டப 7 ஆம் ஆண்டு நிறைவு விழா

கோப்பாய், ஜூலை 10

ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தின் 7 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகனும், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரனும், சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட சைவவிழுமிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு, ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறும். (50-72)

## மாகியப்பிட்டி கிராமத்தில் 20 பயனாளிகளுக்கு கடனுதவி

யாழ்ப்பாணம், ஜூலை 10

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட ஜே/144 மாகியப்பிட்டி கிராமத்தில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 20 பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் நிதியில் இருந்தே தலா 10 ஆயிரம் ரூபா வீதம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் எ.நாகராசா, பொருளாளர் ஐ.மார்க்கண்டன் ஆகியோரின் முயற்சியினாலேயே இவ் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

மேலும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கும் விரைவில் கடனுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கப் பொருளாளர் ஐ.மார்க்கண்டன் தெரிவித்தார். (50-302)




## வெளிக்கள போதனாசிரியர் பதவிக்கு போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 10

காணி நிர்வாகத் திணைக்களத்தின் வெளிக்கள போதனாசிரியர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான அனுமதி அட்டைகள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் 026 3262951, 026 222 6951 - 701, 709 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் கேட்டுள்ளார். (50-201)

## சூழல் பாதுகாப்புச் சட்டம் தொடர்பாக இன்று பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 10

வடக்குப் பிராந்தியத்தின் சட்டத்தரணிகள், அரச அதிகாரிகள், சமூக அடிப்படை நிறுவனங்கள், பொதுமக்கள், பெண்களுக்கான சூழல் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சி பட்டறை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் சூழல் மத்திய நிலையத்தினால் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதில் -

சூழல் தொடர்பான சட்ட விஞ்ஞானம் தொடர்பாக சட்டத்தரணிகளை பயிற்றுவித்தல், சுற்றுச்சூழல் சம்பந்தமான தீர்மானம் எடுத்தல், சட்டத்தரணிகள் மற்றும் விஞ்ஞானக் குழுக்கள் தமது சுற்றுச் சூழல் விடயங்களை மக்கள் அறிவதற்கு சமூக பலமூட்டுதல் போன்றவற்றிற்கு நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக இதில் அராயப்படும். (50-302)

# இணுவில் கந்தசுவாமி கோயில்

## தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் – 10.07.2010

### பரம்பரைக் குருக்கள்மாரின் ஆசிச்செய்தி

இலங்கைத் தீவில் இந்துமதத்தின் பெருமைகள் சேர் யாழ்ப்பாணத்தில் இணுவையம்பதி எனும் கிராமத்தில் பிரசித்திபெற்ற பல ஆண்டு காலம் போற்றப்பட்டு பல ஆயிரம் மக்கள் பார்த்து மெய் சிலிர்க்கின்ற திருமஞ்சம் அமையப்பெற்ற பல அறிஞர்கள், கற்றோர்கள், கலைஞர்கள், சிவாச்சாரியார்கள் கண்ட இணுவில் கந்தசுவாமி கோயிலில் முருகனிற்கு முன்பிறந்த யானைமுகன் விநாயகப் பெருமானுக்கு புதிதாக தேர் (ரதம்) நிர்மாணிக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெற்றதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வாலயத்தின் அருகில் சிறுபராயம் முதல் வசித்து, பூசைகள் செய்து வந்ததன் பயனாக இப்பொழுது கந்தன் திருவருளுடனும் எனது பெற்றோரின், வித்யாகுருவின் ஆசியுடனும் மகோற்சவ குருவாக இருக்கின்றவேளையில் இந்த ரத வெள்ளோட்டம் எனக்குமிக சந்தோசத்தைத் தருகின்றது.

இதற்கு காரணம் நான் பிரதான குருவாக இருந்து மகாகும்பாபிசேகம் செய்த அங்காள பரமேஸ்வரியின் திருவருள் என்று நான் நினைக்கின்றேன்.

பக்தி என்பது எமது இதயத்தில் உறைகின்றபோது இறைவன் எனும் காந்தத்தின் பால் எமது உணர்வுகள் இழுக்கப்பட்டு இவ்வாறு செயற்கரிய நல்ல தர்மகாரியங்களில் எமது மனம் ஈடுபடுகின்றது. இதனால் எமது சைவசமயத்தின் சிறப்பும் பெருமையும் நிலைக்கும் என்பதில் ஐயமில்லை. இத்தேர் செய்ய முன்வந்த தர்மவான், பக்தர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல இணுவைக் கந்தன் அருள்கிடைக்க ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ அபிராஸிதக் குருக்கள் - மகோற்சவகுரு,
சிவஸ்ரீ ந.உ ருத்திரமூர்த்திக்குருக்கள் - ஆலய பிரதமகுரு,
சிவஸ்ரீ இ.ஸ்ரீஸ்கந்தராசாக் குருக்கள் - ஆலய பிரதமகுரு.



### வாழ்வளிக்க தேரேறி வருகின்றான் இணுவைக் கந்தன்

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்குபவன் முருகன். ஆறுமுகங்களையுடையவன், தியானம் செய்யும் யோகிகளின் இருதயத்தில் எழுந்தருளியிருப்பவன், பெருவீரன், அழகிய மயில்வாகனன், சிவகுமாரன், தேவசேனைத் தலைவன், நெஞ்சம் எனும் குகையில் இருப்பவன் என புகழ்ந்துரைக்கப்படுபவன். இப்படிப் பல பெருமைகளையும் சிறப்புக்களையும் கொண்டு இணுவையம்பதியில் கந்தசுவாமி என்ற திருநாமத்துடன் பழம்பெரும் வரலாற்றுச் சிறப்பனைத்தையும் தன்னகத்தேகொண்ட முருகப்பெருமான், இன்று தேரேறி அடியவர்களுக்கு அருள்பாலிக்கவருகின்றான். தமிழர்தம் குறைபோக்கி வாழ்வுதர வருகின்ற குமரனை வணங்கி குறையாவும் தீர்ப்போம்.

மதுரகவி, காரை.எம்.பி.அருளானந்தன் J.P.

### இணுவில் கந்தசுவாமி கோயில் வரலாற்றுச் சுருக்கம்

இணுவிலில் அணிசெய்யும் ஆலயங்களில் சரித்திரப் பிரசித்திபெற்று, பெரியகோயில் என்று சிறப்பிக்கப்படும் ஆலயம் ''இணுவில் கந்தசுவாமி'' ஆலயமாகும். கிட்டத்தட்ட நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு முருகன் அடியாரான அருணாசலம் அவர்கள் நித்திரையாக இருந்தபோது, முருகப்பெருமான் அவரின் கனவில் தோன்றி தான் காஞ்சியம்பதியிலிருந்து வருவதாகவும் தமக்கென இல்லிடமொன்று அமைத்துத் தருமாறும் கேட்டார். அடியவர் எங்கே அமைத்துத் தருவது என வினவியபோது, உங்கள் வெற்றிலைத் தோட்டத்தினுள் நொச்சித் தடியொன்று நாட்டப்பட்டிருப்பதாகவும் அந்த இடத்திலேயே அமைக்கலாமெனவும் ஆலோசனை கூறினார். கனவின் உண்மையினை அறிய விரும்பிய அடியவர் மறுநாள் காலை தோட்டத்தில் சென்று பார்த்தபோது வியப்படைந்தார். தனது தோட்டத்தில் இருந்த மாட்டுக் குடிலின் அருகே நொச்சித்தடி நடப்பட்டிருந்தது. அங்கு வேலினை வைத்து வணங்கினார். இம்மகிமையை அறிந்த ஊர்மக்களும், அயற்கிராமத்தவர்களும் வணங்கினார்கள். காலப்போக்கில் அடியார்கள் மிகுந்து வந்தமையால் பூசை வழிபாடுகளை அருணாசலம் தானே முன்னின்று நடத்தினார். அதன் பின்னர் அவர்தம் சந்ததியினரும் பரிபாலித்து வந்தனர்.

தொடர்ந்து செங்கல்லினால் கட்டப்பட்ட கோயில், 1840ஆம் ஆண்டு வெள்ளைக் கற்களால் கட்டப்பட்டது. படிப்படியாக கோயில் வளர்ச்சியடைந்து வரும் வேளையில் 1910ஆம் ஆண்டில் உலகப் பிரசித்திபெற்ற திருமஞ்சமானது இணுவையூர் தத்துவஞானியான பெரியசந்நியாசியார் (சுப்பிரமணிய சுவாமி) அவர்களின் கண்ணோட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. இக்கோயிலானது பொதுக்கோயிலாக மாற்றம் பெற்ற பின்னர் மூன்று தள இராஜகோபுரமானது ஐந்து தளமாகவும், இலண்டனிலிருந்து வருவிக்கப்பட்ட புதிய கண்டாமணியும், மணிமண்டபமும் நிறுவப்பட்டுள்ளது.

பெருந்திருவிழாவானது ஆனிமாத அமாவாசையினைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு 25 திருவிழாக்கள் சிறப்புடன் இடம்பெற்று வருகின்றது. இவ்வருடம் 17.06.2010 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று (10.07.2010) சனிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தின் கீர்த்திக்குச் சான்றுபகரும் மற்றுமோர் அம்சம் புண்ணிய தீர்த்தமாகும். வடக்குப் பக்கத்தில் சாந்தியடி வயிரவர் சந்நிதியும், அதன் முன்பாகவுள்ள தீர்த்தக்கிணறும் பிரசித்தமானவை. அடியார்களைப் பிடித்த நோய்களைக் குணப்படுத்தி சாந்தி அளிக்கும் தன்மை இத்தீர்த்தத்திற்கு உண்டு. அடியார்களுக்கு ஏற்படும் அல்லல்களைக் களைந்து ஆறுதலளிக்கும் சாந்தியடி வயிரவப் பெருமானும், நொச்சியம்பதி முருகப்பெருமானும் இணுவையம்பதி மக்களின் கண்கண்ட தெய்வங்கள் என்பது மனம் கொள்ளத்தக்கன. தேர்த்திருவிழாவன்றும், மஞ்சத்திருவிழாவன்றும் ஆறுமுகப்பெருமான் (சண்முகப் பெருமான்) வீதியுலா வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இங்கு கோயில் கொண்டு உறைந்துள்ள முருகப்பெருமானை நொச்சியம்பதியான், காஞ்சியம்பதியான், கல்யாணவேலவர் எனப் பல சிறப்புப் பெயர்கள் கூறி மக்கள் பக்தி வெளிப்பட வழிபடுவார்கள்.

அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக்குருக்கள் அவர்களின் ''மகோற்சவ விளக்கம்'' என்ற நூலிலிருந்து பெறப்பட்ட கருத்து:

''பசுபதியாக சிவபெருமான் சூரிய சந்திரர்கள் உருள்களாகவுசம், மற்றைச்சரம், அசரம் ஆகிய பொருள்கள் ஒவ்வொரு உறுப்புக்களாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும் அமைந்த தேரில் மேருவை வில்லாகவும், விட்டுவை அம்பாகவும், அக்கினியை அவ்வமைப்பின் கூர்வாயாகவும் கொண்டு எழுந்தருளிப் பிரம்மாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்தத் திரிபுரத்தசுரர்களைத் தமது திருப்புன்முறுவலால் எரித்தருளினார். திரிபுல சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை யும் கெடுத்தற்காக இரதோற்சவம் நடத்தப்படுகின்றது.

''புரமடு நாட் சான்ற நிலத்தோர் பொருமணித்தேர்
சங்கத் தலைவருட்டினார்'' (திருவானைக்கா புராணம்)
''முருகப்பெருமான் திருவடி சரணம்''

செ.சோதிப்பெருமாள் (ஜே.பி),
தலைவர், தர்மகர்த்தாசபை.


**ஜனா பாம்**
பால், பால் உற்பத்திப் பொருள்கள், பசுநெய், கேக் வகைகள் ஓடருக்கு குறித்த காலத்தில் தரப்படும்.
இல.7, மத்திய சந்தை, மல்லாகம்.

**Siva Fancy And Spare Parts**
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

**ரமணன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்**
சகல விதமான கட்டடப்பொருள்கள் நியாய விலைக்கு குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்
525, 528, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 2229296.

**Annams Super Market**
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.

**கஜமுகன் மோட்டோஸ் அன் ஹாட்வெயார்**
கட்டடப்பொருள்கள்,
மோட்டார் வாகனப் பொருள்கள் விற்பனையாளர்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

**Sakthivel Hardware**
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில், இணுவில்.

**பழரசத் தொழிலகம்**
**ஜசுபி** தயாரிப்புகள்
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்,
சுன்னாகம்.

ஸ்பெஷல் ஐஸ்கிறீம் நோமல் ஐஸ்கிறீம், குளிர்பான வகைகள், வடை, றோள், சிற்றுண்டி வகைகள், பெஷல் பீடா, சைவக் கொத்து மற்றும் விசேட வைபவங்களுக்கான ஓடர்கள் விசேடமாகச் செய்து தரப்படும்.
**ராஜ் கிறீம் ஹவுஸ்**
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

கர்ப்பிணித் தாய்மார்க்கும் சிறார்களுக்கும் ஏற்ற போசாக்கு நிறைந்த சத்துமா
வளரும் குழந்தைகளுக்குகேற்ப தாய்மார்களுக்கும் வயோதிபர்களுக்கும் ஏற்ற சத்துணவு
ஜீவாகாரம்
**அண்ணா தொழிலகம்**
துரை வீதி, இணுவில்.


இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட திருமண அழைப்பிதழ்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள், திருமணப் பரிசுப் பொருள்கள், கேக் பெட்டி, தாம்பூலப்பை, குங்குமச்சிமிழ்.
**கஜசங்கவி சென்ரர் பிறிண்டேர்ஸ்**
இல.237, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:0212227885

பலசரக்கு பொருள்கள், யாழ்.நகரின் தரமான அரிசி வகைகள், கேக் தயாரிக்கும் பொருள்கள் மற்றும் பலகார வகைக்கான பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள
**ஸ்ரீ அம்மன் றேடர்ஸ்**
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

**சாந்தி புடவை அகம்**
157,158, நவீன சந்தை
(மின்சார நிலைய வீதி) யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில். 070 212748

**சரஸ்வதி ரேடிங்**
இல.19, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**செ.இராசரட்ணம்**
நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாக உற்பத்தியாளர்
**S.R.P. பம்புகள்**
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில், தாவடி.

வலிகாமத்தில் கணனிக் கல்விக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
**கணனியியல் கல்லூரி**
கே.கே.எஸ்.வீதி, இணுவில். 222 7643
**லது டிஜிற்றல் வீடியோ**
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

**சிவசம்பு களஞ்சியம்**
இல.3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**நாதன் பிறதர்ஸ்**
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

**ஆனந்தா**
**கட்டடப்பொருள் வாணிபம்**
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

**கணேசன் சென்ரர்**
உடுப்பு வகைகள், அழகுசாதனப் பொருள்கள் விற்பனையாளர்கள்.
கே.கே.எஸ்.வீதி, இணுவில். 021 222 5708

# இ.தொ.காவைப் போல் வடக்கு, கிழக்கு கட்சிகளும் அரசுடன் இருந்து சேவை செய்யவேண்டும்!

## பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 10

''மலையக மக்களின் தேவைகளை எண்ணியே இ.தொ.கா. அரசுடன் இணைந்தது. அது போன்று வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் தேவைகருதி அங்குள்ள அரசியல் தலைவர்கள் சரியான தீர்மானத்துக்கு வரவேண்டும். அவர்கள் எல்லோரும் ஓரணியாகத் திரண்டு அரசுடன் இணைந்து பேரம் பேசி மக்களின் நலனுக்காக செயற்பட வேண்டும்''

- இவ்வாறு இ.தொ.கா. தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட பிரதேசசபைத் தலை வர்களை தமது அமைச்சில் சந்தித்து உரை யாற்றும்போதே பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் மலையக மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றம் சென்று அவர்களுக்குப் பல தரப்பட்ட சேவைகளைச் செய்துள்ளேன்.

எமது கட்சி அரசியல் ரீதியாக மலையக மக்களுக்கு முடிந்தளவு தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளது.

அதுபோல் வடக்கு, கிழக்கில் உள்ள அரசியல் தலைவர்களும் கடந்தகாலக் கசப்புகளை மறந்து மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

நான் மலையகத்தைச் சேர்ந்தவன். வடக்கு, கிழக்கில் வாழ்கின்றவர்கள் எனது இனம். அதனால் அவர்களுக்குச் சேவை செய்யவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் மிக மகிழ்கின்றேன்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு என்னால் முடிந்ததைச் செய்வதற்கு முயற்சி எடுத்து வரு கின்றேன். இதற்கு அங்குள்ள மக்கள் பிரதிநிதி களின் உதவி மிக முக்கியம்.

மூன்று தசாப்தகால யுத்தம் எமது மக்களின் வாழ்வாதாரத்தை முற்றாக ஒழித்து விட்டது. எனவே, அவர்களின் வாழ்க்கைத் தரத்தைக் குறைந்தளவேனும் கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (ளி)




# புரட்டொப்பில் லொறியில் பிரசவம்: சிசு மரணம் துர்ப்பாக்கியத்திற்கு தோட்ட நிர்வாகமே பொறுப்பு

## தொ.வி.மு.தலைவர் அய்யாத்துரை சாடல்

கொழும்பு, ஜூலை 10

புசல்லாவை புரட்டொப் தோட்டத்தில் கர்ப் பிணித்தாயை லொறியில் கொண்டு சென்ற போது அந்த லொறியிலேயே குழந்தை பிரசவமானதும் பின்னர் அது இறந்து போனமையும் மிகவும் வருந்தத்தக்கதும் கண்டிக்கப் படவேண்டியதுமாகும்.

இற்கான முழுப் பொறுப்பையும் குறித்த தோட்ட நிர்வாகமே ஏற்கவேண்டும்

- இவ்வாறு தொழிலாளர் விடுதலை முன் னணியின் தலைவர் டி.அய்யாத்துரை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

மலையகத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய சம்பவம் முதல் முறை அல்ல, பல தடவைகள் தோட்டப் பகுதிகளில் நடந்துள் ளன.

இதற்கு சுகாதார சேவைகள் மாத்திரம் காரணமல்ல. தோட்ட நிர்வாகங்களின் கவனயீனமும், பொறுப்பற்றத் தன்மையும் ஒரு காரணமாகும். எனவே, இதற்கான முழுப் பொறுப்பையும் தோட்ட நிர்வாகமே ஏற்க வேண்டும். - என்றார். (ளி)

# மூன்று நிறுவனங்களில் கொழுத்த தொகையை ஊதியமாகப் பெற்ற பல்கலை பேராசிரியர்

கொழும்பு, ஜூலை 10

பல்கலைக்கழகப் பணியில் கிடைக்கும் ஊதியத்துக்கு மேலதிகமாக வேறு மூன்று நிறுவனங்களில் கடமையாற்றி 35 லட்சம் ரூபா ஊதியத்தை பேராசிரியர் ஒருவர் பெற்றுள்ள சம்பவம் பேராதனையில் நடந்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட பேராசிரியர் பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் பணி யாற்றியவர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் பல்கலைக்கழகத்தில் அரசபணிக் காகப் பெற்ற ஊதியத்துடன் இவர் மேலதிகமாக மூன்று நிறுவனங்களில் இருந்து 35 லட்சம் ரூபாவைப் பெற்றுள்ளார் எனக் கணக் காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 தொடக்கம் 2005 ஆம் வருடக் காலப்பகுதியில் இவர் இந்த மேலதிக வருமானத்தைப் பெற்றுள்ளார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

பேராதனை பல்கலைக்கழகப் பணிக்கு மேலதிகமாக இவர் இலங்கை மன்றக்கல்லூரி, இலங்கை வெளிநாட்டு சேவை முக வர் நிறுவனம், இலங்கைவெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக முகவர் நிறுவனம் ஆகிய மூன்று நிறுவனங்களிலும் கடமையாற்றி பெருந் தொகை சம்பளத்தைப் பெற்றுள்ளார் என்பது தெளிவாகியுள்ளது. (ளி)

# குன்றும் குழியுமாகக் காட்சிதரும் மஸ்கெலியா பிரதான பஸ் நிலையம்

## கவனிக்குமா அம்பகமுவ பிரதேசசபை?

நுவரெலியா, ஜூலை 10

அம்பகமுவ பிரதேசசபைக்கு உட்பட்ட மஸ்கெலியா பிரதான பஸ் நிலைய வளாகம் புனரமைப்புச் செய்யப்படாமல் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காட்சி தருகின்றது.

பஸ்நிலையம் இவ்வாறு அவலமாகக் கிடப்பதால் பஸ் நடத்துநர்களும், சாரதிகளும் வாகனங்களைச் செலுத்திவதில் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

பயணிகளும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

மழைக்காலங்களில் நிலைமையைச் சொல்லவே தேவையில்லை என்று அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த பஸ் நிலையத்திற்கு நாளாந்தம் சுமார் நூறு பஸ்கள்வரை வந்து தரித்துச் செல்கின்றன.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களும் கூட இங்கு தரித்துச் செல்கின்றன.

எனவே, அம்பகமுவ பிரதேசசபை அதிகாரிகள் இந்த பஸ்நிலையத்தைச் செப்பனிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - எனப் பல்வேறு தப்பினராலும் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (ளி)

# விலங்கு பரிபாலன டிப்ளோமா பாடநெறி 20 இல் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 10

குண்டசாலையில் அமைந்துள்ள விலங்கு பரிபாலன முகாமைத்துவக் கல்லூரியில் விலங்கு பரிபாலன டிப்ளோமா பாடநெறி எதிர்வரும் 20 ஆம்திகதி ஆரம்பிக்கப்படவுள் ளது.

பாடநெறிக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 15 தமிழ் மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என விலங்கு பரிபாலன முகாமைத்துவக் கல்லூரி அதிபர் பி. எல். எஸ். பாலசூரிய தெரிவித்தார். (ளி)

# தபால் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள்

மட்டக்களப்பு, ஜூலை 09

பதினேழு வருடங்களுக்குப் பின்பு மண்டூர் தபால் அலுவலகத்துக்கும், கல்குடா தபால் அலுவலகத்துக்கும் நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த இரு தபால் அலுவலக கட்டடங்களும் அடுத்த வாரம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளன.

இதேவேளை, 17 வருடத்திற்கு முற்பட்ட பெரிய போரதீவு தபால் அலுவலகத்துக்கும் நிரந்தர கட்டடம் அமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. (ளி)




# மட்டு. மாவட்ட நெல் கொள்வனவுக்கு 2 கேடி 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு, ஜூலை 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்திருந்ததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

மட்டு. மாவட்டத்தில் கடந்த மகாபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை விற்பனை செய்வதில் விவசாயிகள் பாரிய இன்னல்களை எதிர்நோக்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகளின் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அண்மையில் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

அவர் நாடாளுமன்றத்திலும் இது தொடர்பாக உரையாற்றியிருந்தார்.

இந்நிலையில் நெல்லை பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கொள்வனவு செய்வதற்காக 2 கோடியே 50 லட்சம் கோடி ரூபா திறைசேரி ஒதுக்கியுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இதன்படி கிரான், பட்டிப்பளை, பழுகாமம், வவுணதீவு கூட்டுறவு சங்கங்களூடாக சம்பா நெல்லை 30 ரூபாவுக்கும், ஏனைய நெல் வகைகளை 28 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இங்கு கொள்வனவு செய்யப்படும் நெல்லைக் குற்றி அரிசியாக்கப்பட்டு இம்மாவட்டத்துக்குள்ளேயே கூட்டுறவு சங்கங்களினூடாக விற்பனை செய்யப்படும் என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் குறிப்பிட்டார். (ளி)

# காணாமல் போன மாணவியின் சடலம் காட்டிலிருந்து மீட்பு

## மொரவெவப் பகுதியில் சம்பவம்

திருகோணமலை, ஜூலை 10

திருகோணமலை, மொரவெவ காட்டுப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை எரியுண்ட நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அடையாளம் காணமுடியாத நிலையில் எரியுண்டுள்ள இச்சடலம், கடந்த மாதம் 27ஆம் திகதி காணாமல்போன 16 வயதுடைய எச்.எம்.சில்ஹானி குமாரி என்ற பெண்ணுடைய சடலமாக இருக்கலாம் எனப் பிரதேசவாசிகள் சந்தேகிக்கின்றனர்.

குறித்த பெண் காணாமல்போன தினத்திலிருந்து அவரின் காதலனான ரிஷாந்த என்பவர் அடிக்கடி குறித்த காட்டுப் பகுதிக்கு சென்று வருவதை அவதானித்த பொது மக்கள், அக்காட்டுப்பகுதியில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இச்சடலம் கண்டுபிடிக் கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறிந்த மொரவெவ பொலிஸார், குறித்த பெண்ணின் காதலனான ரிஷாந்தவை கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் பொலிஸ் தடுப்புக்காவலில் இருந்த ரிஷாந்த கடந்த புதன்கிழமை காலை தப்பியோடியிருந்தார். எனினும், இந்நபரை மொரவெவ பிரதேசவாசிகள் பிடித்து மீண்டும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ளி)

# திருமலையில் இன்று கருத்தரங்கு

திருகோணமலை, ஜூலை 10

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தர்மாசிரியர் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை திருகோணமலையில் நடைபெறும் என இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இக்கருத்தரங்கு திருகோணமலை பிரதான வீதியில் அமைந்துள்ள சிவானந்தா தபோவனத்தில் இன்று காலை 8 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் தர்மாசிரியர் பாடத் திட்டத்திற்கு அமைவாக ஐந்து தலைப்புகளில் விரிவுரைகள் நடைபெறவுள்ளது. அத்துடன், அறநெறி ஆசிரியர் தகுதிகாண் பரீட்சையில் பங்கு கொண்ட ஆசிரியர்களுக்கான சீருடையும்,மாணவர்களுக்கான சீருடைகளும், சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன. (ளி)

# நாட்டில் இடம்பெற்ற பிரச்சினைக்கு மொழி தெரியாமையே பிரதான காரணம்

## கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 10

''நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட முரண்பாட்டுக்கு மொழிப் பிரச்சினையே பிர தான காரணமாகும்.''

- இவ்வாறு கிழக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் டி.ரி.என்.விஜே குணவர்த்தன தெரிவித்தார்.

சிங்களம் பேசும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வைபவம் மட்டக்களப்பு பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்றது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் வழிகாட்டலில் ஆசியா பவுண் டேசனின் அனுசரணையுடன் 5 ஆண்டுத் திட்டத்தின் கீழ் 6ஆயிரம் சிங்கள மொழி பேசும் பொலிஸாருக்கு தமிழ்மொழி கற்பிக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு உட்பட 6 இடங்களில் ஆரம்பித்து வைக்கப்படுகிறது. சகல தரங்களையும் சேர்ந்த தலா 100 பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு 5 மாதம் பயிற்சியளிக்கப்படும்.

- இவ்வாறு குறிப்பிட்டார் பிரதிப் பொலிஸ் மா அதிபர் .

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஐ.எம்.கருணாரத்ன, ஆசியா பவுண்டேசன் நிறுவன இணைப்பாளர் தீபால் கமகே, பொலிஸ் கான்ஸ்டபிள் ரத்னாயக்கா, பொலிஸ் பயிற்சிக் கல்லூரி பொறுப்பதிகாரி கே.ரவிச்சந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ளி)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்


அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிப்படலாம். கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள். சிலர் உங்களிடம் வாக்குக் கொடுத்துவிட்டு, அதை காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். வீட்டுக்குத் தேவையான சில பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும்.

### இடபம்

கனிவான பேச்சுக்களால் எந்த காரியத்தையும் முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பு, சந்தோஷம் உண்டாகும். பல நாள்களாக தள்ளி வைத்த வேலை ஒன்றை இன்று செய்ய நேரிடலாம். உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும்.

### மிதுனம்

இறைவழிபாட்டின் மூலம் இன்பம் காண வேண்டிய நாள். சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடுகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். கடந்த காலத்தில் உங்களுக்கு உதவி செய்த ஒருவருக்கு நீங்கள் பதில் உதவி செய்யலாம். உறவினர் ஒருவரை சந்திப்பால் செலவுகள் நேரும். வேலை நெருக்கடி கூடும்.

### கடகம்

உடன் பிறப்புக்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் நீங்கி பாசம் அதிகரிக்கும். ஆசைப்பட்ட பொருள் ஒன்று எளிதில் கைக்கு கிடைக்கலாம். பெண்கள் ஆடை, அலங்கார பொருள்கள் வாங்க போட்ட திட்டம் நிறைவேறலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களை பெறலாம். சந்தோஷ அனுபவம் உண்டு.

### சிங்கம்

எதிர்காலம் தொடர்பான விஷயங்களில் அக்கறை காட்டுவீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பல நாட்களாக இழுபறியாக இருந்த வேலை ஒன்று இன்று வெற்றிகரமாக முடிவுக்கு வரும். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்கு செல்லலாம். கொடுக்கல் வாங்கல்கள் சீராகும். அனுகூலமான நாள்.

### கன்னி

நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். தொழில் ரீதியான வெளியூர் பயணங்கள் செல்லலாம். உறவினர்கள் சிலரிடம் நீங்கள் உதவி கேட்டு நச்சரிப்பதன் மூலம் அவர்கள் எரிச்சல் அடையலாம். உங்களின் அனுபவம் ஒன்றை பற்றி மற்றவர்களிடம்-பெருமையாகச் சொல்வீர்கள்.

### துலாம்

எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கலாம். கசப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். உதவி செய்வதாக சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். தொழில் ரீதியான விடயங்களில் அவசரப்பட்டு முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். தடை, தாமதம் நேரும்.

### விருச்சிகம்

பெரிய மனிதர்கள் சிலரின் நட்பு கிடைக்கலாம். பிரியமானவர்களுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். நண்பர்களுடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகள் செயற்பாடுகளை நினைத்து பெருமை அடைவீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர்.

### தனுசு

புதிய அனுபவங்களை பெறும் சூழ்நிலை உருவாகும். உறவினர்கள் சிலரிடம் மனம் விட்டு பேசுவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அயலார் சிலரின் செயல் பாடுகளால் கோபம் எரிச்சல் அடையலாம். நினைத்த காரியம் ஒன்று நடக்காமல் போனாலும், நினைக்காத காரியம் ஒன்று நடக்கும்.

### மகரம்

விலை மதிப்புமிக்க பொருள்கள் வாங்கலாம். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளை சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலர் மீது கொண்ட கோபத்தை மற்றவர்களிடம் காட்டுவீர்கள். ஓய்வெடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலைகள் உருவாகும். ஆலய வழிபாட்டின் மூலம் அமைதி பெறுவீர்கள்.

### கும்பம்

குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகள் கேட்டு செயல்பட முற்படுவீர்கள். சக ஊழியர்கள் சிலர் ஆதாயம் பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். கடன் வாங்கி பொருள்கள் வாங்குவதைத் தவிர்க்க வேண்டும். மனைவி வழியில் சில பிரச்சினைகளை சந்திக்கலாம். உங்களுக்கு தெரிந்த ஒருவரை மற்றொருவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள்.

### மீனம்

எந்த வேலையையும் நாளை என தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள். பல நாள்களாக வராத பணவரவு ஒன்று இன்று கைக்கு கிடைக்கலாம். வியாபாரிகள் கூடுதல் வருமானத்தால் மகிழ்ச்சி அடையலாம். புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள். உங்களை நம்பி சிலர் முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்கலாம். வெற்றிகரமான நாள்.

# ஐ.நாவுடன் சண்டித்தனம் செய்வதால் நாட்டுக்கு எவ்வித பயனும் கிடையாது

## ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்து இது

கொழும்பு, ஜூலை 10

ஐ.நா.செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழு தொடர்பாக சண்டித்தனம் செய்வதால் நாட்டுக்கு எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. இதை இராஜதந்திர முறையிலேயே அணுகித் தீர்வுகாண வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபை என்பது வெறுமனே பான் கீ - மூன் அல்ல. ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் பல அமைப்புகள் இயங்குகின்றன. உலக சுகாதார ஸ்தாபனம், உலக உணவுத் திட்டம், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் போன்றவற்றால் நமது நாட்டுக்குப் பல உதவிகள் கிட்டுகின்றன. வெறுமனே சண்டித்தனம் காட்டுவதால் நாடு இந்த உதவிகள், சலுகைகளை இழக்கவேண்டிய நிலை ஏற்படலாம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அரசு இந்தப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக் காணவேண்டும்-என்றார். (அ-சி)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)



**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



அமரர்

**நாகரத்தினம் நாகம்மா**

அன்னை மடியில் 24★08★1930

இறைவன் அடியில் 10★06★2010



கடந்த10.06.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.07.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

4.ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு. [100448] குடும்பத்தினர்.



LG No 1 Dealer in SriLanka

Fridge, Deep freezer, Bottle cooler, Airconditioner, T.V, மற்றும் சகலவிதமான மின்சார இலத்திரனியல் உபகரணங்களை அபான்ஸ் நிறுவனத்தின் உத்தரவாதத்துடனும் இலவச விநியோக சேவையுடன் பெற்றுக்கொள்ள



LG JAFFNA ELECTRICAL

Show Rooms

Authorized Dealer for Abans

141,Power House Road, Jaffna.
T.P: 021 222 8378, 5766.

No: 04,New Market, Chavakachchri.
T.P: 0213008702

94 (6), Stanley Road, Jaffna.
021 222 2353

Cool Line: 0777725258

# ஓர் அரசியல் பாடம்

சந்திரகுப்த மௌரியார் சரித்திர பாடப்புத்தகம் படிக்கும்போது கேள்விப்பட்ட ஒரு பெயர்.

அவர் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி. சாணக்கியரின் அறிமுகம் அவருக்குக் கிடைப்பதற்கு முன் நடந்த நிகழ்ச்சியாம் இது.

பாடலிபுத்திரம் தலைநகரம். நந்தர்கள் ஆட்சி நடக்கின்றது. அவர்களுடைய ஒன்றுவிட்ட சகோதரன் சந்திரகுப்த மௌரியார்.

ஆனால் இவர் காடுகளில் ஒளிந்து வாழ வேண்டிய நிலைமை. ஆட்சியில் தனக்கு உள்ள உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதனால் காடுகளில் இருந்தபடியே சின்னதாக ஒரு படையைத் திரட்டினார்.

பாடலிபுத்திரத்தை நோக்கிப் படையெடுத்தபோது, என்ன ஆனது தெரியுமா?

அது தலைநகரம் ஆதலால் ஏகப்பட்ட வீரர்கள் பாதுகாப்புக்காக அங்கு அணிவகுத்து தயாராக நின்றார்கள். நந்தர்களின் படை சந்திரகுப்தரின் படையை சுலபமாக விரட்டியடித்தது. சந்திரகுப்தரையும் சிறைபிடித்தார்கள். இருந்தாலும் சகோதரன் என்பதால் மன்னித்து உயிர்ப்பிச்சை கொடுத்து துரத்திவிட்டார்கள். இருந்தாலும் சந்திரகுப்தர் ஓய்ந்து போகவில்லை. திரும்பத் திரும்ப சின்னச் சின்ன படைகளை திரட்டிப் போய் ஒவ்வொரு முறையும் தோல்வி தான். ஆனாலும் இவர் சும்மா இருக்கவில்லை. இந்தத் தடவை மாறுவேடத்தில் அங்கும் இங்கும் திரிந்து படைதிரட்ட ஆரம்பித்தார்.



அந்த நேரத்தில் ஒரு நாள் ரொம்ப சோர்ந்து போய் ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார். பசியால் முகம் வாடிப்போய் இருந்தது. அந்த வீட்டுக்குள் இருந்த பாட்டியம்மா வெளியே வந்தபோது இவரைப் பார்த்தார். இவர் தான் சந்திரகுப்தர் என்று இவருக்குத் தெரியாது. யாரோ வழிப்போக்கன் பசியோடு இருக்கின்றான் என்று நினைத்து உள்ளே அழைத்து உட்காரவைத்து சாப்பாடு கொடுத்தார். பக்கத்தில் பாட்டியின் பேரனும் சாப்பிட உட்கார்ந்தான். அவர் சுடச் சுட சாப்பாடு பரிமாறினார். பசியோடு இருந்த பேரன் அவசரமாக சாதத்தின் நடுவில் கை வைத்தான் சுட்டுவிட்டது. சூட்டைத் தாங்க முடியாமல் ''ஐயே! அம்மா! என்று சத்தம் போட்டுக் கொண்டு கையை உதறினான். அப்போது அந்தப் பாட்டி அந்தப் பேரனைப் பார்த்து ''என்னப்பா இது... சந்திரகுப்தனைப் போல் முட்டாளாக இருக்கிறியே! என்று சொன்னார்.

அதைக் கேட்டதும் மாறு வேடத்தில் இருந்த சந்திரகுப்தனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''ஒருவேளை நான் யார் என்று இந்தப் பாட்டிக்குப் புரிந்து விட்டதா...! என்று யோசித்தான். ஆனாலும் அப்படி இல்லை என்பதை தெரிந்து அந்தப் பாட்டியைப் பார்த்துக் கேட்டான். ''ஏன் பாட்டி இந்தப் பையனை அப்படித் திட்டினீர்கள்? சந்திரகுப்தன் என்ன அவ்வளவு முட்டாளா? என்று கேட்டான்.

அப்போது அந்தப்பாட்டி சொன்னார், 'ஆமாம்ப்பா! இப்போது என் பேரன் சாதத்தின் நடுவே கையை வைத்துவிட்டு சுட்டு விட்டது என்று அலறுகிறான். நடு சாதத்தின் ஓரமாக பகுதியில் முதலில் சாப்பிட்டால் அங்கே சூடு குறைவாக இருக்கும். பிறகு மையப்பகுதிக்கு வரும் போது அங்கே சூடு ஆறிவிடும். இது அவனுக்குத் தெரியவில்லை. சந்திரகுப்தனும் அதே மாதிரித்தான்.

''நந்தர்கள் முழுப் பலத்தோடு இருக்கும் தலை நகரத்தை தாக்க வேண்டும்'' என்று நினைக்கிறான். கையை சுட்டுக் கொள்கிறான் அதனால் தான் தோல்வியைச் சந்திக்கின்றான்.

படை எண்ணிக்கை குறைவாக உள்ள எல்லைப் பகுதியை அவன் தாக்கி இருந்தால் இந்த நேரம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி பலமும் அதிகரித்து இருக்கும். கடைசியில் தலை நகரத்தையும் கைப்பற்றி இருக்கலாம் என்றார் பாட்டியம்மா.

சந்திரகுப்தன் கற்ற முதல் அரசியல் பாடம் இது. அதனாலே உடல் பலம் மட்டும் போதாது. அறிவுப் பலமும் வேண்டும்.

அது தான் நாம் இந்தத் தகவலில் இருந்து தெரிந்து கொள்ள வேண்டிய பாடம்.

ஒரு சின்னப்பையன் தனது அப்பாவிடம் போய் ''எனக்கு அரசியல் பாடம் கற்றுக் கொடுங்கள்'' என்றான். ''சரி ஓடிப் போய் ஒரு ஏணிமரம் எடுத்துக் கொண்டு வா'' என்றார்.

'எதற்கு' என்றான்.

''இப்படி எல்லாம் பேசக் கூடாது'' எடுத்துக் கொண்டு வா என்றால் வா என்றார். 'எடுத்துக் கொண்டு வந்தான்' இந்தச் சுவரில் சாத்தி வைத்து இதில் ஏறி உச்சிக்குப் போ. அங்கே இந்த ஆணியை சுவரிலே அடித்து விட்டு வா'' என்றார்.

ஓர் ஆணியும் சுத்தியலும் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு ''அப்பா நான் ஏணியில் ஏறி மேலே போகிறேன். நீங்கள் கீழே இருந்து ஏணி விழுந்திடாமல் இறுக்கமாக பிடித்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

''அதைப்பற்றிக் கவலைப்படாதே. நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார். ஏணியைப் பிடித்துக் கொண்டார். பையன் மெதுவாக ஏறி மேலே போனான். அவன் உச்சிக்குப் போனதும் அப்பா கையை எடுத்து விட்டார். ஏணி மரம் சரிந்து கீழே விழுந்தது. பையனும் பொத்தென்று கீழே விழுந்து விட்டான்.

''வலி தாங்க முடியாமல் இடுப்பைப் பிடித்துக் கொண்டு எழுந்தான்'' என்னப்பா இது இப்படிச் செய்து விட்டீர்கள் என்று கத்தினான்.

''அப்பா பொறுமையாகப் பதில் சொன்னார்''

''மகனே கத்தாதே! இது தான் அரசியலின் முதல் பாடம். பெற்ற அப்பாவாக இருந்தாலும் நம்பக் கூடாது! என்று சொன்னார்.

(கோ.சுவாமிநாதன்)

---

# பாதுகை

வைகுண்டத்தில் ஒரு நாள் திருமால் வழக்கத்துக்கு மாறாக தமது பாதுகையைப் பள்ளியறையிலேயே விட்டுவிட்டு பாம்பணையில் படுத்தார்.

உடனே அவரது திருமுடிக்கு கோபம் வந்து விட்டது. ''பாதுகையே! உனக்கு அறிவு இருக்கிறதா? கண்ட கண்ட இடங்களை எல்லாம் மிதிக்கிற நீ பள்ளியறைக்குள்ளே வரலாமா? போ! வெளியே!'' என்றது.

''திருமுடியே!

நீ சொல்வது சரிதான், என்றாலும் ஒன்றை நீ நினைத்துப் பார். நானாக இந்த அறைக்குள் வரவில்லையே ஆண்டவன் திருவடிகளே இங்கு என்னை சேர்ப்பித்தன. அப்படி இருக்கும்போது நீ என்மேல் கோபப்படுவது சரியா?'' என்று கேட்டது.

திருமுடிக்கு மேலும் கோபம் அதிகமாயிற்று ''தலைக்கு மேல் இருக்கிற என்னைப் பார்த்து காலுக்கு அடியிலே இருக்கிற நீ இந்த அளவுக்கு பேசுகிறாயே! உனக்கு எவ்வவளவு தைரியம்-''

''திருமுடியே! வீணாகப் பெருமை பேசாதே! நான் இறைவன் திருவடியோடு சேர்ந்திருப்பவன். அவன் பாதத்தைப் பற்றியவர்களுக்கே எல்லாப் பெருமையும் சேரும் என்பது பெரியோர் வாக்கு''

இவ்வளவு நேரமாக இந்த விவாதத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சங்கும் சக்கரமும் திருமுறையோடு சேர்ந்து கொண்டு பாதுகையை விரட்ட ஆரம்பித்தன. ''உனக்கு எவ்வளவு திமிர்? உடனேயே வெளியே போகிறாயா? இல்லையா?

பாதுகைக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அதனால் ஆண்டவனிடம் முறையிட்டது. ''கருணைக் கடலே! நீங்களே என்னை உள்ளே கொண்டுவந்து விட்டுவிட்டு இவர்களை இப்படி பேச விடுவது சரியா?''



திருமால் உடனே பாதுகையைப் பார்த்து, ''நீ கவலை அடையாதே! என்று சொல்லிவிட்டு திருமுறையை பார்த்துச் சொன்னார். 'முடியே! நீ அகந்தையாகப் பேசி இந்த பாதுகையை அவமானப்படுத்தி விட்டாய்! எனவே, அடுத்து வருகிற ராமாவதாரத்தில் 14 ஆண்டுகள் இந்தப் பாதுகையின் மேலே நீ இருக்கக் கடவது! சங்கே! சக்கரமே! நீங்கள் இருவரும் என் கண் முன்னால் பாதுகையைப் பழித்து பேசிவிட்டீர்கள்! ஆகையால் ராமாவதாரத்தில் நீங்கள் இருவரும் சத்துருக்கனாகவும் பரதனாகவும் பிறந்து இந்தப் பாதுகையை 14 வருடங்கள் வழிபடக் கடவது!''

இது ஆண்டவன் அளித்த தீர்ப்பு அதன் படியே, 14 ஆண்டுகள் பாதுகைக்கு முடிசூட்டி பரதர் விரதம் இருந்து அதை வழிபட்டு வந்தார்.

''கீழோராயினும் தாழவுரை''

(நன்றி:-நீதிக்கதைகள்)

---

# பார்த்திருந்தால் காட்டுங்களேன்

இராமகிருஷ்ண பரமஹம்சர் சிறு சிறு கதைகள் மூலம் பெரும் பெரும் கருத்துக்களை விளக்கியவர். இந்த வகையில் இவருக்கு நிகர் இவரே! ஒரு சம்பவம்.

பரமஹம்சரிடம் ஒருவர் வந்தார். ஒரு கேள்வி கேட்டார். இவர் பதில் சொன்னார். பெரிய விடயம். சிறிய உதாரணம் வந்தவர் கேட்டார்.

''ஐயா நீங்கள் காளியைப் பார்த்திருக்கிறீர்களா?''

''ஓ பார்த்திருக்கிறேனே! காலையில் கூட அவளிடம் பேசினேன்'' பரமஹம்சரின் பதில்.

''நீங்கள் பார்த்தது உண்மை என்றால் எனக்குக் காட்டுங்களேன்''

சுற்றி அமர்ந்திருந்தவர்கள் பரமஹம்சர் மாட்டிக் கொண்டார் என்று எண்ணி பரிதாபப்பட்டனர். பரமஹம்சர் தெளிவானவர். அவர் கவலையே படவில்லை. வந்தவரிடம் கேட்டார்,

''நீங்கள் என்ன வேலை பார்க்கிறீர்கள்?''

''நான் டாக்டர் வேலை செய்கிறேன்.''

''அப்படியானால் என்னை ஒரு டாக்டர் ஆக்குங்களேன்''

அது எப்படி? நீங்கள் டாக்டருக்குப் படிக்க வேண்டுமே?''

''டாக்டராவதற்கே ஒரு படிப்பு வேண்டுமென்றால், கடவுளைப் பார்க்க ஒரு படிப்பு வேண்டாமா? நான் அதைப் படித்திருக்கிறேன். நீங்களும் அதைப் படித்தால் கடவுளைக் காணலாம் என்றார்.

எல்லோரும் வியந்து போயினர்.

(ஸ்ரீபகவான் ராமகிருஷ்ணர் கதைகள்)




(சென்றவாரத் தொடர்ச்சி)

பனங்களி ஒரு மிக நல்ல சுத்திகரிப்பான். உடுப்புக்குப் போட்டு துவைத்தால் நல்ல வெண்மையாக வரும்.

பிரேமதாசா காலத்தில் இதை நாமும் செய்து பார்த்தோம்.

இக்காலத்தில் நாகலிங்க மாமா அறத்தி குளத்தில் பனங்களி போட்டு வேட்டியைத் துவைத்து புல்லில் காயப் போட்டுவிட்டு குளித்துக் கொண்டு நிற்க-

மேய்ச்சலுக்கு வந்த மாடு ஒன்று வேட்டியில்லுள்ள பனங்களி வாசத்தால் வேட்டியைப் சாப்பிடத் துவங்கிவிட்டது.




இதைக்கண்ட நாகலிங்க மாமா கோவணக்கட்டுடன் மாட்டைக் கலைக்க மாடு அரைவாசி வேட்டியுடன் ஓட, மிகுதிவேட்டி இழுபட ஓடிய மாமா கல்லில் தடக்கப்பட்டு விழ, கோவணக் கட்டு அவிழ- ஒரு குறும்படம் எடுக்கலாமா?

பனை மரம் குறித்து எம்மூரில் வழங்கு பழமொழி (Folck Lore)

"நட்டாயிரம் பட்டாயிரம்"

மிக நீண்ட ஆயுள் கொண்ட மரம் பனைதான். ஆயிரம் வருடங்கள் நிற்குமா என நம்ப முடியவில்லை. ஒரு 250 வருடம் நிற்கலாம், பயன் தரலாம். ஒரு பனை நாலு தலை முறைக்குப் பயன் தரவல்லது. (இதில் உங்கள் கணிப்பை கோருகின்றேன்)

அதென்ன பட்டாயிரம். ஒரு பனையைத் தறித்து அடித்துக் ஒரு வீட்டு மரமாகப் போட்டால் அந்தப் பனை வளை ஆயிரம் வருடத்துக்குக் கிடக்கும். அதாவது நீண்ட காலத்துக்குக் கிடக்கும் என்பதைக் குறிப்பதே இது; ஆயிரம் வருடம் புறக்காரணிகளால் குறைவடையாமல் சீராக இருப்பின் ஒரு நல்ல வைரவளை முன்னூறு வருடத்துக்கு உக்காமல் கிடக்கும்.

ஒரு முக்கிய பொருளை கதைப்பிராக்கில் மறந்து விட்டோமா.

பனங்கள்ளு

எப்படி வாயூறுகின்றதா? மனிதனின் - யாழ்ப்பாணத்தாரின் அற்புத கண்டு பிடிப்பு சோமபானம் என்ற கள்.


பாளையைச் சீவினால் கள்ளு வடியும் என்று எவ்வாறு கண்டு பிடித்தார்கள் என்று என் அறிவுக்கெட்டியபடி உணர முடியவில்லை. இது தற்செயலாக நிகழ்ந்திருக்கவும் வாய்ப்பில்லை.

(வளரும்)

# கனா தரும் சாங்கதியும்

(எண் சீர்க் கழிநெடிலடி விருத்தம்)

பொலிகையூர்



வாகனமும் மோதியதில் முறிந்த கனகர்
வாட்டினிலே கிடப்பதனை பார்க்க மூத்தர்
வேகமாக வாகனத்தில் வந்த வேளை
விந்ததுவே தொலைபேசி எடுத்தார் கையில்
வேகமாக ஓடினாரே கதைத்துக் கொண்டே
வந்திடுவேன் விரைவாக என்று சொல்லி
வேகமாக வந்தபோதே மோதி விழுந்து
விழித்தபோதே கனகருக்கு அருகே கிடந்தார்.

(அடுத்த சனிக்கிழமை கனகர் சந்திப்பார்)

# தெரு மூடி மடம்: ப
# தனியடையாள

இன்றுவரைக்கும் யாழ்ப்பாணப் பண்பாட்டில் மடங்கள் என்பன முக்கியமான பகுதியாகவுள்ள போதிலும் சில தசாப்த காலங்கள் முன்பதாக மடங்களை நிர்மாணித்தல் அதன் சமூக - சமய முக்கியத்துவம் தொடர்பான எமது நம்பிக்கைகளில் இருந்த முனைப்பு இப்போது இல்லைத்தான். யாழ்ப்பாணப் பௌதீகப் பண்பாட்டின் சிறப்புக் கூறான மடங்கள் பொதுப்படையாக நெடிய இந்திய உபகண்டப் பண்பாட்டுத் தொடர்ச்சியுடையனவாயினும் அவை தம்மை தமது சூழலுக்குள் சமூக வரலாற்று நிலைவரங்களுக்குள் மறு நிர்ணயஞ் செய்துள்ளன. இதன் மூலம் எமக்கேயான - அசலான, தனித்துவமான மடப்பாரம்பரியமொன்றினை நாம் கடந்த காலத்தில் கட்டியெழுப்பியுள்ளோம். மிக முக்கியமான யாழ்ப்பாண மடங்கள் தொடர்பான ஆய்வொன்று குமுதா சோமசுந்தரக் குருக்கள் என்பவரால் இளமாணிப் பட்டத்திற்காக யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் குமரன் பதிப்பகத்தால் நூலுருவாக்கப்பட்டுள்ளது.

மேற்படி யாழ்ப்பாணத்து மடங்களின் தனிச்சிறப்பு மரபுகளில் ஒன்று பருத்தித்துறையில் அதிஷ்டவசமாக இயன்றளவும் தப்பிப் பிழைத்துள்ளது. நல்லவேளையாக போரும் பொதுமக்களது அசட்டையும் சேர்ந்து பல விடயங்களை அழித்து, ஒழித்தது போல் இதற்கும் நேராமல் இருப்பதற்கு முதற்கண் பருத்தித்துறை வாழ் பெருமக்களுக்கு ஒட்டுமொத்த யாழ்ப்பாணமுமே நன்றிக்கடன்பட்டுள்ளது. இனிமேலும் முற்றிட பண்பாட்டு வரலாற்றுச் சின்னங்களை எதற்கு தயாராகியுள்ள வீதி அகலிப்பாளர் போன்றோ 'கடவுள்தான்' அதனைக் காக்க வேண்டும்.

இன்று பருத்தித்துறை நகரத்திலிருந்து தும் நோக்கிச் செல்லும் தெருவில் அமைந்துள்ள மடத்தினை விடவும் மந்திகை போன்ற இடங் தெருமூடி மடங்கள் இருந்ததாக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா முதலியோர் பதிவு செய்துள்ளனர். ஆனால் துரதிஷ்ட வசமாக இ அவையில்லை.

தெருமூடி மடங்கள் எமது யாத்திரை அல்ல நெடும்பயண வழியில் வழிப்போக்கருக்கு ஒய்வுதரும் பந்தல் மரபின் தொடர்ச்சி என்பத அதன் கட்டுமான உருவ அமைப்பினைப் பார் போது புரிகிறது. மேற்படி, இன்றுவரை கோயி திருவிழாக்களில் நாம் அமைத்து வரும் நிரந் பந்தல் கட்டுமானத்தின் நிரந்தரமாக்கலூடாகவு விருந்தோம்பல் - உபசரித்தல் - தர்மம் எனும் பண்பாட்டுப் பெறுமானங்களூடாகவும் பயணஞ்செய்து உரு திண்ணை மரபினையும் அதனோடு இணைத்து தொகுப்பினை ஆக்கியுள்ளன. வெள்ளைப் பெ திண்ணை என்பன அதன் முக்கியமான கூறுக

## நமது பெ

சில மாதங்கள் முன்பதாக பருத்தித்துறை ப அதனை புனருத்தாரணம் செய்யும் நன்நோக்கி பேணுகை முயற்சிகள் மேற்கொண்டது. அது சில சலசலப்புக்கள் பத்திரிகைகளிலும் வந்தன

திருப்பவும் இந்தப் பத்தியில் ஒரு விடயத்ை விரும்புகிறேன். எம்மிற் சிலருக்கு ஆவது பண் செழுமை மிக்க பண்பாட்டு வரலாற்றுச் சின்ன உலகில் நாகரிகமடைந்த பல சமூகத்தவர் போ பாதுகாப்பதில் ஆர்வமுண்டு. அதனால் 'வீதி அபிவிருத்தி என்ற பெயரால் இலங்கையின் ம சட்டங்களைக் கூடத் துஷ்பிரயோகம் செய்பவ அல்லாமல் நாம் அதனைப் பேண முயற்சி எடு

ஆனால் எமது ஆர்வம் - முயற்சிக்கு அப்பா புனருத்தாரணம் எப்படிச் செய்ய வேண்டும் எ பொதுவான நடைமுறைகள் - தொழில்நுட்ப நாம் தவறவிட்டு விடுகின்றோம். அவ் அல்லாமல் நமது முயற்சி - வலி முயற்சியாக இருக்க அ துறைசார் அறிவு உதவியை நாடுவது அவசியமாகும்.

யாழ்ப்பாணத்தில் மேற்படி ஒரேயொரு மடத்தினை பாதுகாக்க விதமான நெருக்கடிகள் ஆசைவார்த்தைகள், ஏமா




# கல்லைமட்டும் கண்



அந்த வீதியால் கடந்த இரண்டு வா கட்டுவதற்காக கற்குவியல்கள் குவி

"ஏ-9 பாதை திறந்த பின்னர் கட் எனக்குள்ளே மகிழ்ந்தபடி இந்த சமூ

"எங்கள் ஊரில் உள்ள ஆலயம் ஒன் வீதியில் உள்ள அரசியல் வாதியொருவரின் வ எல்லோருடைய கோரிக்கைகளையும் ஏற்றுக் ஒருவாறு இரண்டு வாரம் கழித்து மீண்டும் அந்த என்பது ஒரு புறமிருக்கட்டும் அந்த வீதிக்குப் போன போதுதான்....

அங்கு ஓர் ஆச்சரியம்.... அதிசயம் நிகழ்ந்திருந்தது. மானிப்பாய்ப் பிரதேசத்தில் உள்ள சிறிய வீதியொன்று சந்தனம், அணிவித்து, பட்டுச்சாத்தி, ஒரு கோயில் போலவே அது காட்சியளித்திருந்தது.

"என்னடப்பா போன கிழமை கற் குவியலாகக் காட்சி தந்த இடம் இப்போ ... அந்தக் கோலத்தில் இருக் அதில் கண்டவர்களை விசாரித்தேன். இப்ப சனம் இதுக்கு பூவைத்து கும்பிடுதுகள். கல்லையும் எடுக்கவிடு விடயத்தைக் கல்லைக் கண்ட இடமெல்லாம் எம்மவர்கள் கோயில் அமைக்கிறார்கள்.

இவ்வாறான செயல்களைச் செய்வதன் மூலம் எமது மதத்தை நாமே இழிவுபடுத்துகிறோம் என்ற ஆத இதைப்பார்த்தால் தெய்வீக உணர்வு எள்ளளவும் எழவில்லை என்பது வேதனைக்குரியதாகவே உள்ளது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்பது" ஆன்றோர் வாக்குத் தான்.. அதுக்காக இப்பிடி

எத்தனையோ சைவ ஆலயங்கள் புனரமைக்கப்படாமல் உள்ளபோது அதைப்பற்றி சிந்திக்காமல் புதிது பு பணத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆலயங்கள் மனிதனை புனிதப்படுத்துகின்றன. அத்து கிறது. இதில் எந்த வித மறுப்புக்குமிடமில்லை. உண்மையும் அதுதான்.

அதுக்காக இப்பிடி கல்லைக் கண்ட இடமெல்லாம் கோயில் என்று பாவனை செய்ய வெளிக்கிட் வாசலுக்கொரு கோயில் என்றும் உருவாகுவதை எவரும் தடுக்கமுடியாது.

இத்தகைய விடயங்களில் எமது இந்து அமைப்புக்கள் இந்து மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும் என்ப வதன் முக்கிய நோக்கமாகும். இருக்கிற ஆலயங்களைப் புனரமைத்து புனிதப்படுத்தி அதில் இறைவனைக்

# : பருத்தித்துறையின் ...ளங்களுள் ஒன்று



ம.திருக்குமரன்

...ரம் முற்திட்டமின்றி - கூசாமல்
...ள எதற்கும் பலிகொடுக்கத்
...போன்றோரிடமிருந்து
...ண்டும்.
...ருந்து தும்பளை
...ந்துள்ள தெருமூடி
...ற இடங்களிலும்
...ராசிரியர்
...திவு
...சமாக இன்று

...ரை அல்லது
...ருக்கு
...சி என்பதனை
...னைப் பார்க்கும்
...ரை கோயில்
...ரும் நிரந்தரமற்ற
...லூடாகவும்

## ...பெருமை மிகுந்த மரபுரிமைகள்

...செய்து உருவாகியுள்ள தெருமூடி மடம் எமது
...இணைத்து புதியவொரு கட்டுமானத்
...ளைப் பொழிகற்களாலான தூண்கள் -
...ன கூறுகளாகும்.
...த்துறை பட்டினசபை
...ன்நோக்கில் சில
...து. அது தொடர்பாக
...ம் வந்தன.
... விடயத்தை வலியுறுத்த
...வது பண்டைய
...ச் சின்னங்களை
...தவர் போல பேணிப்
...ால் 'வீதி அகலிப்பு',
...கையின் மரபுரிமைச்
... செய்பவர்கள் போல
...யற்சி எடுக்கிறோம்.
...கு அப்பால் பேணுதல் -
...ண்டும் என்ற உலகப்
...ில்நுட்ப முறைகளை
...ம். அவ்வாறு
...ற்சி - வலிமை மிக்க
...இருக்க அதற்கான
... அறிவுடையோரின்
... நாடுவது
...ாகும்.
...ாணத்தில் எஞ்சியுள்ள
...ரேயொரு தெருமூடி
...ாதுகாக்க எந்த
...க்கடிகள் - அச்சுறுத்தல்கள் -
...கள், ஏமாற்றுதல்களையும் (வீதி அகலிப்புக்காக எடுக்கப்படும் காணிகளுக்கு நஷ்ட ஈட்டு ஏற்பாடு இருப்பினும் அதனைக் கொடுக்காது பருத்தித்துறை மக்களை ஏமாற்றுவது போல) எதிர்கொண்டு அதனை நாகரிக உலகுக்கு எமது எதிர்கால சமூகத்துக்கு காவிச் செல்ல பருத்தித்துறை வாழ் மக்களும், யாழ்ப்பாண சமூகமும் உறுதி பூண வேண்டும்.



★★★

# ...ண்டால்... அடடா...!

...இரண்டு வாரத்துக்கு முன் சென்றிருந்தேன். அவ்வாறு சென்றிருந்த போது ஒரு வீட்டு வாசலில் வீட்டுக்கு அத்திபாரம்
...ல்கள் குவிக்கப்பட்டிருந்தன.
...பின்னர் கட்டடப் பொருள்களின் விலைவாசி குறைந்துள்ளது. இதனால் குடிசைகளெல்லாம் கல்வீடாக மாறிவருகிறது.'' என்று
... இந்த சமூக நிலை நீடித்தால் நல்லம் தானே! என்று எனக்குள்ளே பெருமூச்செறிந்தபடி... விரைந்து கொண்டிருந்தேன்.
...லயம் ஒன்று நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளது. அதனைப் புனரமைத்துத் தருமாறு கேட்பதற்குத் தான் அந்த
...ாருவரின் வீட்டுக்குத்தான் சென்றேன். தமது சிறிய ஆலயங்களைப் புனரமைத்துத் தருமாறு கோரி பலர் அங்கு காத்திருந்தனர்.
...யும் ஏற்றுக் கொண்டு இரண்டு வாரங்கள் கழித்து வருமாறு அந்த அரசியல் வாதி எம்மிடம் வேண்டுகோள் விட்டார்.
...டும் அந்த வீதிக்குச் சென்றேன். சரி அந்த அரசியல் வாதி வீட்டுக்குப் போனேனா? கோரிக்கைக்கு உரியதீர்வு கிடைத்தா?


...தியொன்று தான் அது. நான் முன்னர் குறிப்பிட்டிருந்த அத்திபாரம் கட்டுவதற்குப் பறிக்கப்பட்டிருந்த கல் குவியலுக்கு விபூதி,

...தில் இருக்குது....?
...டுக்கவிடுகுதுகள் இல்லை என்றனர். பார்த்தீர்களா? கேட்டீர்களா?

... என்ற ஆதங்கம் தான் எம்மனதில் எழுகிறதே தவிர
...உள்ளது.
...காக இப்பிடியா?
...மல் புதிது புதிதாய் ஆலயங்களை அமைத்து வீணாகப்
...ன. அத்துடன் அவன் வாழ்வியலை செம்மைப்படுத்து

...வளிக்கிட்டால் வீட்டுக்கொரு ஆலயம் என்று வீட்டு

...டும் என்பதே மேற்படி விடயம் இங்கு சுட்டிக் காட்டப்படு
...றவனைக் கண்டு மகிழ்வோம்.




கவிநேதன்

# இது இந்தக் காலம்

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

அன்னதானமென்பது மிகவும் முக்கியமான தொண்டாக,பல காலங்களாய் கருதப்பட்டு நடைபெற்று வருகின்றது. தானங்களிலே சிறந்தது கண்தானம் என்பது போல் அன்னதானம் கோயில் திருவிழாக் காலங்களிலும், விசேட தினங்களிலும் கோயிலுக்கு வரும் அடியவர்களுக்கு அன்னதானம் செய்தல் மூக்கிய தொண்டாக விளங்கி வருகின்றது.

இறை பக்தரான அடியார்களுக்கு சிவ அமுது செய்வித்தல் மிகவும் புண்ணிய செயலாகும் அன்னதானம் செய்து ''மோட்ச '' நிலை அடைந்து பல புண்ணிய வான்களின் வரலாற்றை கதைகளை படித்தும் கேட்டும் இருக்கின்றோம்.

நமது கோயில்களிலும் அன்னதானம் செய்தல் முக்கிய தொண்டாக நடைபெற்று வருகின்றது. விரதமிருக்கும் அடியவர்கள் இறை வழி பாடு முடித்து கோயிலின் அன்னம் புசித்து வீடு செல்லல், மன நிம்மதியை கொடுக்கும் செயலாக நடந்து வருகின்றது.

அது சரி. நீங்கள் என்ன சொல்ல வருகின்றீர்கள்? இதனை வாசிக்கும் பலர் யோசிக்கலாம் உண்மைதான். நீங்கள் யோசிப்பதில் நியாயம் இருக்கின்றது. நான் சொல்லப் போற விடயம் என்ன வென்றால்.

அன்னதான மென்பது கோயில்களில் முக்கிய மானதாக கட்டாயப்படுத்த வேண்டியதாக மாறி வருவது போல் தெரிகின்றது. அன்னதானம் செய்யாது விட்டால் கோயில் என்பது பலவீனமாக, பயனற்ற இடமாக மாறிப் போகும் நிலை வந்து விடுமோ என கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

ஒரு வேளை சோற்றுக்கு நாங்கள் கஷ்ரப்பட்டிருப்போம் பின் மெல்ல மெல்ல வசதி வாய்ப்புக்கள் பெருக ஒரு வேளை, இரண்டு வேளையாகி, பின்னர் மூன்று வேளையும் பூரணமாக உணவு கிடைக்கும் பட்சத்தில் அடுத்து மேலதிக வரவுகள் அதனை என்ன செய்வதென்று திண்டா.... மனமே தேவையில்லாமல் விடயத்திற்கு அலை மோதுகின்றது.

நல்ல நிலையிலிருந்த ''வாசற் கதவினை இடித்து வேறு கதவினை பொருத்துகிறோம், சற்றும் யோசனை செய்யாமல் நேரத்தை பணத்தை'' துஷ்பிரயோகம் செய்கிறோம். பணத்தின் பெறுமதி அதனை எமக்கு அனுப்புபவர்கள், (அன்பளிப்பாகவோ, உதவியாகவோ) படுகின்ற கஷ்ரங்கள், தியாகங்கள், உழைப்புக்கள் இவற்றை நாம் எண்ணிப்பார்ப்பதுண்டா? பணத்தை சேமிப்பது, அடைவது என்பது லேசான காரியமா? மக்களிடமிருந்து கிடைக்கும் பணங்கள் சரியான பலனை அடைகின்றதா?

பத்து நாள்களோ, இருபது நாள்களோ திருவிழாக்களை ''ஊர்மெச்சத்தக்க'' வாய் பிடித்து நிற்கும் படி செய்து விட்டால் அது பெருமைப் பட வேண்டிய விசயமா?

## அன்னதானத்துக்கு அரோகரா!

மூடை மூடையாய் அவிச்சுப் போட்டு சாப்பாடு கொடுத்தால் அது பெரிய விடயமா?

இதன் மூலம் எமக்கு பக்தியையும் வளர்க்கவும், இறைவன் அருள் கிடைத்து விடுமென நாங்கள் நம்பிக்கை வைத்துக் கொள்ளலாமா?

நடப்பது தான் என்ன?

நமக்குத் தெரிந்த விடயமென்றால் அன்னதான மென்பது எளியவர்களுக்கு அமுது படைத்தலாகும். இல்லாதவர்களுக்கு இருப்பதைக் கொடுத்தல் புண்ணிய மானதாகும். வயிற்றுப் பசி உள்ளவர்களுக்கும் அன்றாட உணவு கிடைக்காமல் வறிய நிலையில் உள்ளவர்களுக்கும் அமுது கொடுத்தல் சாலப் பொருத்தமானதாகும்.

''காய்ந்த வயிறுகள் உணவு கிடைக்கும் போது நிறைவடைதல் அதில் கிடைக்கும், திருப்தி, சந்தோசத்திற்கே அளவேயில்லை.'' அங்கே இறைவன் இருக்கிறான்.

ஆனால் நாங்கள் அன்னதானத்தை தொழிலாக்கப் பார்க்கின்றோமா? மக்களை வியாபார நோக்கில் கவருவதற்காக வர்த்தகர்கள் செய்யும் தந்திரம் போல அன்னதானமும் மெல்ல மெல்ல சந்தைப் படுத்தல் தொழிலாக மாறி வருகிறதோ என அச்சம் ஏற்படுகின்றது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்விமான் ஒருவர் கடந்த வாரம் பத்திரிகையில் இப்படிச் சொன்னார். ''கோயில் திருவிழாக்களில் ஆடம்பரச் செலவுகளை குறைத்து அதனை ஆக்கபூர்வமாக ''நலிவுற்ற மனிதர்களுக்கு உதவும் படி கூறினார். முட்கம்பி வேலிக்குள்ளே இருந்து கொண்டு இன்னும் ஒரு வேளை உணவுக்காக கையேந்தி நிற்கின்ற ஒரு பகுதி மக்கள் இன்னமும் உள்ளனர்.

தாய் இல்லாமல், தந்தை இல்லாமல், சகோதரர்கள் இல்லாமல் புத்தகங்களை சுமக்க வேண்டிய பருவத்தில் குடும்பப் பாரத்தை தோளில் சுமந்து கொண்டு அலைகின்ற பிஞ்சுகள் எத்தனை.... அநாதைகளாய் எங்களுக்கு உதவிக் கரம் தாருங்கள் எங்களின் வறுமையை போக்குங்கள், எமது வாழ்க்கைக்கு உயிர் கொடுங்கள் என ''கெஞ்சி அறை கூவல் விடுக்கும் மனிதர்களை பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

தங்களின் குடும்பச்சுமையோடு, கஷ்டத்தோடு இருக்கின்ற நிலையிலும்... எல்லாவற்றையும் இழந்து அநாதரவாக இருக்கும் உறவுகளையும் தம்மோடு சேர்ந்து ... வாழவைத்துக் கொண்டிருக்கும் மனிதர்கள் எத்தனைபேர் நாங்கள் நினைத்தால் அவர்களுக்கு உதவ முடியும் அல்லவா?

இப்போது எது எமக்கு முக்கியமானதோ அதை முதலில் செய்வோம் எங்களால்தான் அது முடியும்.

அன்று நான் கண்ணால் கண்ட சம்பவமிது பேருந்து நிலையத்தில் காத்துக் கொண்டிருந்த போது ''தொப்பென'' ஏதோ ஒன்று விழுந்த சத்தம் கேட்டு சுயநிலைக்கு வந்தேன்.

என் முன்னால் வயது போன மூதாட்டி ''சொப்பிங்பாக்கில்'' கொண்டு வந்த மிகவும் அதிகமான குழைசாதத்தை மண்ணில் போட்டு விட்டு விழித்தபடி நின்றார்.

என்னம்மா சாதத்தை கீழ போட்டிட்டியள் அநியாயமெல்லே. இன்டைக்கு கூடத் தந்தவையோ?

என்னமோ தெரியேல்லே இப்ப திருவிழாக் காலம் தானே வந்த ஆக்கள் குறைவு போல. அதால் கூப்பிட்டு கூப்பிட்டு தந்தவையள்.

''சரியம்மா மண்ணுக்க விழுத்திப் போட்டியள் என்ன செய்யப் போறியள்?

அதுவே வீட்டில நிக்கிற கோழியளும், பூனையளும், நாயளும் பாவம் தானே கொண்டே அதுகளுக்கு போட வேண்டியது தான்.

அம்மனுக்கு அரோகரா!''

# நெஞ்சம் விட்டகலாத ஓராண்டு

## நினைவலைகள்

மலர்வு 18 . 07 . 1930

உதிர்வு 22 . 06 . 2009



# அமரர் சுப்பிரமணியம் நாகராஜா

## (Retired MSO, Jaffna Post Office)

திதி: சதுர்த்தசி (10.07.2010)

வாழ்கையில் நாம் உங்கள் வழி வந்தோம்
பாசத்தில் உங்களைப் பற்றியிருந்தோம்
துன்பத்தில் உங்கள் தோள்சாய்ந்தோம்
இன்பத்தில் உங்களுடன் கலந்திருந்தோம்- அப்பா
எங்கள் குடும்பத் தலைவனான நீங்கள்
எம்மைவிட்டு தெய்வமாகி ஓராண்டு ஆனாலும்
மறையாமல் உங்கள் நினைவுகள்
எங்களுடன் என்றும் உறவாடிய வண்ணமே உள்ளன!
பார்க்கும் இடமெல்லாம் நீங்கள் நிற்பதுபோல்
நீங்கள் எம்முடன் வாழ்ந்த காலங்கள் எம்முள்ளே
நித்தமும் அலைமோதியவண்ணம் உள்ளது அப்பா!
உங்கள் கைபிடித்து உங்கள் ஆதரவில் உங்கள் வழியிலேயே
உங்கள் பின்னால் நடந்தோம் அப்பா!
ஆனால் இன்று கைபிடித்து அரவணைக்க
நீங்கள் இல்லையே எங்களுடன்.

(100374)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக, நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக, அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக இன்று (10.07.2010) சனிக்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்திலும், திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று, தெல்லிப்பழை மகளிர் இல்லம், கோண்டாவில் சிவபூமி சிறுவர் இல்லம், திருநெல்வேலி முத்துத்தம்பி சிறுவர் இல்லம், சுழிபுரம் முதியோர் இல்லம், கைதடி முதியோர் இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு உணவு உபசாரமும் 16.07.2010 வெள்ளிக்கிழமை அன்று நல்லூர் துர்க்கரதேவி மணிமண்டபத்தில் அன்னதான நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

ஆண்டு ஒன்று ஆனாலும் என்றும் உங்கள் நினைவுடன்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

**குடும்பத்தினர்.**

தகவல்: நாகராஜா விஜயகுமார் (மகன்- சுவிஸ்).

## அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...




உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.11.1992

* மணலாறில் இராணுவத்தினரின் நிலைகளைப் பலப்படுத்தும் நோக்கில் கூட்டுப்படைக் தளகர்த்தர் சிசில் வைத்திய ரத்தின மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகள் மணலாறுக்கு விஜயம் செய்திருப்பதாகத் தெரிவிப்பு.
* தமிழகத்தில் எஞ்சியுள்ள சுமார் 88 ஆயிரம் ஈழ அகதிகளும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இலங்கைக்குத் திரும்பவுள்ளதாகத் தெரிவிப்பு.

02.11.1992

* கொக்கட்டிச்சோலையில் 67 இற்கும் அதிகமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான விசாரணையில் இராணுவ நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்கு பல மனித உரிமைகாப்பு இயக்கங்கள் தமது அதிருப்தியையும் அதிர்ச்சியையும் தெரிவித்துள்ளதாக அறிவிப்பு.
* சந்திரிகாவை சுதந்திரக் கட்சியின் தலைவியாக்குவதற்கு தாம் தமது செல்வாக்கு எதனையும் பிரயோகிக்க வில்லை என சிறிமாவோ பண்டாரநாயக்க பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவிப்பு.

03.11.1992

* தினமும் 27 கோடி ரூபா செலவிடப்படும் இந்த யுத்தத்தை இனிமேலும் தொடரவிட இயலாது. எனவே அடுத்த இரண்டு மாதங்களுக்குள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என பிரதமரும் பாதுபாப்பு ராஜாங்க அமைச்சருமான டி.பி.விஜயதுங்க படையினருக்கு காலக்கெடு விதித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* மட்டக்களப்பு மாவட்டம் காக்காச்சி வேட்டை கிராமத்தில் படையினரின் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்ட 91 தமிழர்களின் கதி குறித்து உறவினர்கள் கலக்கமடைந்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி தெரிவிப்பு.

04.11.1992

* அம்பாறை மாவட்டம் - அரந்தலாவையில் படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் விமானப்படை, இராணுவம், பொலிஸார் உட்பட 25க்கும் அதிகமான துருப்புக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.
* அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பகிரங்கமாகப் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு.

05.11.1992

* ஆயுதம் ஏந்திப் போராடுவதற்காக கிழக்கிலங்கை முஸ்லிம் இயக்கமொன்று பாலஸ்தீன கெரில்லா இயக்கமொன்றிடம் உதவி கோரியிருப்பதாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவிப்பு.
* அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட பில் கிளின்ரன் வெற்றி பெற்றதாக அறிவிப்பு.

06.11.1992

* வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஏதுவாக பாதுகாப்புப் படையினருக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி.பி.விஜயதுங்க தெரிவிப்பு.
* வடக்கு - கிழக்கு எல்லைப்புறங்களில் உள்ள சிங்களக் குடியேற்றக் கிராமங்களை பாதுகாப்பதற்காக எல்லைப் பாதுகாப்புப் படை ஒன்றைத் திரட்ட அரசு முடிவு.

07.11.1992

* கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு இராணுவ முகாம்கள் விசேட அதிரடிப் பொலிஸாரின் நிர்வாகத்தின் கீழ் ஒப்படைக்கப்பட இருப்பதாகத் தெரிவிப்பு.
* பிரதான எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளையும் அரசதரப்புப் பிரதிநிதிகளையும் கொண்ட குழுவொன்று இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் பேசுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிப்பு.

08.11.1992

* யாழ்ப்பாணம் செல்வதற்கு உத்தேசித்துள்ள மதகுருமார் தூதுக்குழு, தமது சொந்த யோசனைகளுடன் சிங்களப் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் காமினி ஜெயசூரியாவின் யோசனைகளை தம்முடன் எடுத்துச் செல்லும் என லங்காதீப பத்திரிகை தெரிவிப்பு.
* புத்தளம் கடற்பகுதியில் கடற்படையினரின் 'கந்துல' என்ற பெயருடைய கப்பல் மூழ்கிய சம்பவம் ஒரு சதிச்செயலாக இருக்கலாம் என பாதுகாப்புத் துறைச் செய்தியாளர் தெரிவிப்பு.

09.11.1992

* மட்டக்களப்பு காட்டுப் பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை இலங்கைப் படையினர் ஆரம்பித்திருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிப்பு.
* பிரதமரும் நிதி அமைச்சருமான டி.பி.விஜயதுங்க விரைவில் அப்பதவியி லிருந்து நீக்கப்படலாம் என கொழும்பில் பேச்சு அடிபடுவதாக பி.பி.ஸி வானொலி தெரிவிப்பு.

10.11.1992

* கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விமானப் படையின் 'பெல்' ரக ஹெலி கொப்டர் ஒன்று விழுந்து நொருங்கியதில் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருக்கலாம் என சந்தேகம் தெரிவிப்பு.
* இரு நாள்களுக்கு முன்னர் மணலாறுப் பகுதியில் இலங்கை இராணுவத்தினரின் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 7 படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

11.11.1992

* நேற்று நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் கூட்டம் கோரம் இன்மையால் ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.
* இலங்கை விமானப் படைக்கு ஹெலி கொப்டர்களைக் கொள்வனவு செய்ய விமானப் படை அதிகாரிகள் குழு ஒன்று ஆர்ஜென்ரைனாவுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிப்பு.

12.11.1992

* தமிழ் நாட்டில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளை இந்தியா தற்போது இலங்கைக்குத் திருப்பி அனுப்பக் கூடாது என அமெரிக்காவிலுள்ள மனித உரிமை பாதுகாப்பு நிறுவனமான 'ஏசியா வாச்' அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தை கோரியுள்ளதாகத் தெரிவிப்பு.
* கடந்த வாரம் மட்டக்களப்பில் முப்படையினராலும் மேற்கொள்ளப்பட்ட 'ஜெயபஹர' இராணுவ நடவடிக்கையில் இராணுவத் தரப்புக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

13.11.1992

* கொழும்பில் மீண்டும் பெரியளவில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெறலாம் என்று பாதுகாப்புப் படை வட்டாரங்கள் அச்சம் கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* பிரபாகரன் பங்குபற்றாத எந்தத் தீர்வு முயற்சியும் பயன்தரப்போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

14.11.1992

* தமிழ் நாட்டிலிருந்து இரண்டாயிரம் பேர்வரை வந்து விடுதலைப் புலிகளுடன் ஆயுதப் பயிற்சி பெற்று வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.பி.எம்.சிறில் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.
* அரசாங்கத்தைக் கலைத்த பின்னர் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஆலோசனையை சுதந்திரக் கட்சி முன்வைக்கும் என அக் கட்சியின் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு.

15.11.1992

* விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு 'குவாக்கர்' சமாதானக் குழுவினர் மேற் கொண்ட முயற்சி தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* ஆர்ஜென்ரீனாவிலிருந்தும் பிரான்சிடமிருந்தும் பாதுகாப்புப் படையினருக்கு அவசியமான போர் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், போர் ஆயுதங்கள் என்பவற்றை கொள்வனவு செய்ய இலங்கை அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

## இந்துவின் சதுரங்க விளையாட்டை வளர்த்தெடுத்தவர்



யாழ்.இந்துக் கல்லூரியின் சதுரங்க விளையாட்டு வளர்ச்சிக்காக அகல்விளக்காக விளங்கிய யாழ்.இந்துவின் முன்னாள் கணித ஆசானும் சதுரங்கக் கழகப் பொறுப்பாசிரியருமான கந்தசாமி அருளானந்தசிவத்தின் திடீர் மறைவு வேதனைக்குரியதாகும்.

அன்னார் யாழ்.இந்துவின் சதுரங்கப் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றிய காலம் ஒரு பொற்காலம் எனலாம். தனது விடா முயற்சி, இனிய சுபாவம், கண்டிப்பு என்பவற்றால் யாழ்.இந் துவை சதுரங்க விளையாட்டில் தன்னிகரல்லாத அணியாக் கினார். அத்துடன் அணிவீரர்களின் வரவு, ஒழுக்கம் என்பவற்றில் மிகுந்த கரிசனை எடுத்து ஒரு கட்டுக் கோப்பான அணியாகவும் மாற்றினார்.

### நீத்தார் நயப்புரை

அன்னார் ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகள் யாழ்.இந்துவின் சதுரங்கப் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றியுள்ளார். அவரது நேர்த்தியான வழிகாட்டலில் விளையாடிய சதுரங்க வீரர்கள் பல சாதனை களைப் புரிந்துள்ளனர். அவர்களுள் மூவர் சர்வதேசத்தர வரிசையைப் பெற்றுக் கொண்டதுடன் ஒருவர் இலங்கை பகிரங்க சதுரங்கப் போட்டியில் சம்பியனானமை அன்னாரது நல்லாளுமைக்கு ஒரு சீரிய எடுத் துக் காட்டாகும்.

அன்னார் மாவட்ட மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையிலான பல போட்டிகளை ஏற்பாடு செய்து நடத்தி யாழ்.மாவட்டத்தில் அதிகமான மாணவர்கள் சதுரங்க விளையாட்டினால் ஈர்க்கப்படக் காரணகர்த்தாவாக இருந்தவராவார்.

அன்னாரின் பெரு முயற்சியினால் சதுரங்க விளையாட்டின் விவரங்கள் அடங்கிய 'இந்துவின் சதுரங்கன்' எனும் நூல் வெளியிடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சி.வித்தியாபுரன்
சர்வதேச தர வரிசை சதுரங்க வீரரும்
யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் பயிற்றுவிப்பாளரும்,
யாழ்ப்பாணம் சதுரங்கச் சம்மேளனத்தின் முன்னாள் செயலாளரும்.

## மக்கள் முகம்




நாகேந்திரம் நாராயணனிற்கு ஐக்கிய இராசதானியிலுள்ள 'RICS' தாபனத்தினால் 'FRICS' என்னும் அதியுயர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே ஐக்கிய நாடு ஸ்தாபனங்களின் 'FCIOB', 'FASI' மற்றும் MRICS பட்டிய கணிய அளவையாளர் கட்டட அமைப்பாளர், பட்டங்களையும் அத்துடன் அவுஸ்திரேலியா மற்றும் இலங்கையிலும் இதேபோன்ற ஸ்தாபனங்களின் பட்டங்களையும் கொண்டுள்ளார். காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் தற்பொழுது Narayanan Associates (நாராயணன் இணைஞர்) பட்டைய கணிய அளவையாளர், கட்டட அமைப்பாளர் மற்றும் பொறியியலாளர்கள் "54C, ஸ்கூல்" அவெனியு தெகிவளை என்னும் நிறுவனத்தின் உரிமையாளர் ஆவார். இவர் கணிய அளவை மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவம் என்பனவற்றிற்கான ஆலோசனைச் சேவைகளை Narayanan Associates (நாராயணன் இணைஞர்) நிறுவனத்தினூடாக வழங்குகின்றார். உள்ளூர் தொழில் நிறுவனங்கள் உட்பட இலங்கையில் அபிவிருத்தித்திட்டங்களுக்கு நிதியீடு செய்யும் JBIC, ADB, GTZ போன்ற வெளிநாட்டு முகவராண்மைகளின் பல மில்லியன் ரூபா மதிப்புடைய கருத்திட்டங்களையும் இவர் நிறைவேற்றியுள்ளார். இது மாததிரமன்றி அபுதாபி மற்றும் புறூனி டாரெஸ்சலாம் ஆகிய நாடுகளில் பல வகைப்பட்ட கருத்திட்டங்களிலும் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

2009ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட தமிழ் மொழித் தினப்போட்டி யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றபோது தனி இசைப் பிரிவு 4 இல் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி கு.மயூரதி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (9)



## புத்தகசாலை




### ஞானச்சுடர்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ''ஞானச்சுடர்'' 150ஆவது இதழாக வெளிவந்துள்ளது.

ஆனி மாதத்துக்குரிய இதழாக வெளிவந்துள்ள ''ஞானச்சுடர்'' சைவசமயக் கட்டுரைகள், கவிதைகள் எனப் பல்வேறு அம்சங்களைத் தாங்கி இம்முறையும் சிறப்பான முறையில் வெளிவந்துள்ளது.

சைவசமயத்தின் உண்மைகளையும், தொன்மைகளையும் எடுத்தியம்பும் நோக்குடன் வெளியிடப்படுகின்ற ''ஞானச்சுடர்'' 150ஆவது இதழாக வெளிவந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும். ஏனெனில் பெரும்பாலும் சஞ் சிகைகள் வெளிவரும் வேகத்திலே மறைந்து விடுகிறன.

இந்நிலையில் ஒரு சமயம்சார் சஞ்சிகையாக 150ஆவது இதழ் விரித்து நிற்கிறது. ''ஞானச்சுடர்' இன்னும் நின்று-நீடித்து-நிலைத்திருக்கிறதென்றால் அந்தச் சஞ்சிகை வாசகர் மத்தியில் நீங்கா இடம்பிடித்திருக்கிறது என்றுதான் கருதப்படுகிறது. எனவே இத்தகைய பணியில் காத்திரமாய் பயணிக்கும் ''ஞானச்சுடர்'' என்றும் பட்டொளி வீசி பிரகாசிக்கட்டும்.

## நிர்வாகிகள் தெரிவு

வல்வெட்டித்துறை கம்பர்மலை வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கு புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக சிவஸ்ரீ சோ.தண்டபாணிகத் தேசிகர், உப தலைவராக பொ. சின்னதம்பி, செயலாளராக க.விஜயரத்தினம், உப செயலாளராக பொ.சந்திரலிங்கம் மற்றும் பொருளாளராக மு.வைகுந்தநாதன் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாகப் 10 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (9-253)

# இந்தியாவை இன்னமும் இலங்கை சரியாக விளங்கிக் கொள்ள வில்லையா?

**கடந்த 06.06.2010 அன்று டெய்லிமிரர் பத்திரிகையில் எஸ். சத்தியமூர்த்தி எழுதியிருந்த கட்டுரையின் சில முக்கிய பகுதிகள்.**

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் குழப்பமும் முரண்பாடுகளும் இந்தியாவுடனான விடயங்களிலேயே வேறு எதிலும் விட வெளிப்படையாகத் தெரி கின்றன.

உள்நாட்டிலும் சர்வதேச மட்டத் திலும் புதுடில்லியின் மீது என்னதான் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட போதிலும் 4ஆவது ஈழப்போர் தொடர்பாக இந்தியா மௌனமாக வழங்கிய அதி முக்கியமான ஆதரவை ஏற்றுக் கொள்வதில் இலங்கைக்கு எதுவித பிரச்சினையும் இருக்கவில்லை.

இருந்த போதிலும் இலங்கை யிலுள்ள புத்தி ஜீவிகள் மற்றும் மூலோபாய சமூகத்தினரின் ஒரு பகுதியினர் இன்னமும் கடந்த காலத்திலேயே வாழ்வதற்கு முயன்று வருகிறார்கள். இந்திய உதாரணத் தைப் பின்பற்றாமல் இலங்கையானது தமக்கு அருகிலுள்ள அம்மாதிரியான சக்திகளாலேயே கட்டுப்படுத்தப் படுவதாகவும் வழி நடத்தப்படுவ தாகவும் ஒரு அபிப்பிராயத்தை உருவாக்கி வருகின்றது. இதனால் புதுடில்லியில் உள்ளவர்களின் புருவங்கள் தவிர்க்க முடியாத வகையில் உயர்த்தப்படுவ தாகவுள்ளன. எதுவானாலும் இலங்கையின் நோக்கம் இதுவாக இருக்கமாட்டாது.

## உண்மைக்கு வெகு தூரம்

எண்பதுகளின் நடுப்பகுதியில் இலங்கை போராளிகளுக்கு பயிற்சி யளித்து ஆயுதங்கள் வழங்கியது தொடர்பாகவே இலங்கையில் இந்தியா மீது அடிக்கடி குற்றம் சுமத்தப்படுகின்றது. பனிப்போர் காலத்தில் இலங்கை மேற்கு நாடுகள் பக்கம் சார்ந்து நின்றமையே இதற்குக் காரணம் என்று சிலர் கூறக்கூடும். வேறு சிலர் 1971 ஆம் ஆண்டு நிகழ்ந்த பங்களாதேஷ் போரைக் குறிப்பிட்டு இலங்கையையும் இரண்டாகப் பிரித்து விடுவதற்கு இந்தியா விரும்பியது என்று விவாதிக் கலாம். இரண்டு கருத்துக்களும் உண்மைக்கு வெகு தூரமானவையே.

பாகிஸ்தானில் நிகழ்ந்தது போல் இலங்கையில் அரசியல் மட்டத்தில் பிரிவினை ஏற்பட வேண்டும் என்று இந்தியா விரும்பியிருக்கவில்லை. 1983 இல் இடம்பெற்ற தமிழருக்கெதிரான பெருமெடுப் பிலான படுகொலைகளுக்கு பின்னால் இருந்து அது செயல் படவும் இல்லை.

பங்களாதேஷின் தோற்றத்தின் போது இந்தியா நிச்சயமற்றதோர் நிலையில் இருந்தது. கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து பெரும் அளவில் அகதிகள் வந்து குவி வார்கள் என்று அது முன்கூட்டியே கணிக்கவில்லை. ஒரு கோடிக்கு மேற்பட்ட அகதிகள் வந்து குவிந்தார்கள். அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்த நிலையில் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் அவர்கள் எதிர்கொண்ட பணிகள் விசாலித்துப் போயிருந்தன.

எனவே அகதிகளை மீளவும் தங்கள் தாயகத்துக்கு அனுப்பி வைப்பதற்கு அரசியல் நிலைப் பாடுகளை எடுக்க வேண்டிய கட்டாயம் புதுடில்லிக்கும் மாநில அரசுக்கும் ஏற்பட்டது.

எனவே 1971 ஆம் ஆண்டு டிசெம் பரில் முதல் வாரத்தில் இஸ்லாமாபாத் முதலாவது தாக்குதலை இந்திய நகரங்கள் மீது குறிவைத்ததன் மூலம் போரையே ஒரு சாத்தியமான நடவடிக்கையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. பாகிஸ்தான் விமானங்கள் தலைநகர் புதுடில்லி உட்பட பல நகரங்களைக் குறிவைத்திருந்தன.

இந்த பின்னணியில் தான் இந்தியாவுக்கு வருகை தந்திருந்த 250,000 தமிழ் அகதிகள் மீண்டும் தம் நாட்டுக்குத் திரும்பி செல்வதற்கான நம்பிக்கையும் உடல் ரீதியில் பாதுகாப்பும் வழங்கும் வகையில் இந்தியா நடவடிக்கை எடுக்க நேர்ந்தது. இலங்கைக்கு எவ்வளவு தூரம் எடுத்துக்கூறியும் அவர்கள் இணங்கிப் போகாத நிலையில் துன்பப்பட்டுக் கொண்டிருந்த மக்கள் தொடர்பாக நியாயம் செய்ய வேண்டிய கட்டாயம் புதுடில்லிக்கு ஏற்பட்டது. அதனால் புதுடில்லி தனது தெரிவை மேற்கொண்டது. பின்னர் நடந்தவை யாவும் வரலாறு ஆகும்.ஆனால் அந்தக் காலத்து தமிழ் போராளிக்குழுக்கள் இந்தியா தமக்கு இலங்கை இராணுவத்தை எதிர்த்துப் போராடுவதற்கான ஆயுதங்களைத் தந்து உதவவில்லையென்று குறை கூறியதாக பதிவுகள் உண்டு.

அவர்கள் இலங்கைக்குத் திரும்பியதன் பின்னர் தன்நம்பிக்கையையும் பாதுகாப்பு உணர்வையும் அவர்களுக்கு ஏற்படுத்தும் என்று எதிர் பார்த்திருந்தார்கள். இல்லையென்றால் இலங்கை அரசாங்கம் தமிழர்களின் நியாயமான கவலைகளையும் அபிலாஷைகளையும் தீர்த்து வைக்க உதவுவதாய் இருக்கும் என்று கருதப்பட்டது.

இந்த வகையிலேயே இந்திய விமானப்படையின் பூமாலை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனலாம்.

இந்தியாவிலிருந்து உணவுப் பண்டங்கள் வள்ளங்களில் அனுப்பப்பட்டதை நாட்டின் இறைமையையும் நாட்டின் ஒருமைப்பாட்டையும் காப்பாற்றும் நோக்கத்துடன் இலங்கை அதிகாரிகள் எதிர்த்ததையடுத்து விமானம் மூலம் உணவு பொட்டலங்களைப் போடும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இல்லாது போனால் மேலும் அதிகமான அகதிகள் வந்து குவிவதையே இந்தியா எதிர்கொள்ள நேர்ந்திருக்கும் அத்துடன் முன்னரை விட அகதிகள் இலங்கை கடற்படையின் தாக்குதல்களை எதிர் கொள்ளவும் நேர்ந்திருக்கும் .

## இந்தியா வருமுன்பே களத்தில் போராளிகள்

இந்தியா இதில் தலையிடுவதற்கு முன்பே தமிழ் போராளிகள் களத்தில் இறங்கியிருந்தார்கள். 70 களில் பெரும் பகுதியிலும் அவர்கள் வடக்கு,கிழக்கில் வங்கிக் கொள்ளைகள் மற்றும் பொலிஸ் நிலைய தாக்குதல்களிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

1975 இல் அல்ஃபிரட் துரையப்பா, பிரபாகரனின் குண்டுகளுக்கு இரையானார். சர்ச்சைக்குரிய பொலிஸ் அதிகாரியாகயிருந்து வந்த வஸ்தியான் பிள்ளையை விடுதலைப்புலிகள் கொன்றொழித்தார்கள். இவையாவும் இங்கு என்ன நடக்கிறது என்பதை இந்தியா அறிவதற்கு முன்பு இடம்பெற்றவையாகும்.

அந்தக் காலத்தில் பயிற்சி பெறவும் ஆயுதங்கள் பெறவும் பாலஸ்தீனம் வரை சென்றிருந்தார்கள் என்பது இரகசியம் அல்ல. இஸ்ரேலிலிருந்து இலங்கை அரசாங்கம் பயிற்சிகளையும் ஆயுதங்களையும் நாடிச் சென்றதன் மூலம் இந்த நிலைமை ஏற்பட்டது எனலாம்.

இலங்கை இந்திய ஒப்பந்தம், இந்திய அமைதிகாக்கும் படையின் வருகை, ராஜீவ் காந்தி படுகொலை போன்றவற்றுக்கு முன்னதாக ஆயுத வழங்கல் விடயத்தில் புலிகள் இந்தியாவின் விருப்புக் குழுவாக இருந்ததில்லை. அவர்கள் பிரேமதாசவின் விருப்பத்துக்குரியவர்களாக இருந்தார்கள். இந்திய அமைதி காக்கும் படை விடயம் ஒரு முக்கியமான கதை.

இலங்கையில் இருந்த எல்லா ஏதிர்த்தரப்பு போராளிக் குழுக்களையும் அழித்து விட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் தம்மை பெரிய அமைப்பாக ஆக்கிக் கொண்டார்கள். கருணா பிரிவு அழிக்கப்பட்டமைக்கும் நிறைய கதைகள் உண்டு.

இலங்கை- இந்திய ஒப்பந்தம் புலிகளை எதிர்ப்பதற்கு இந்திய இராணுவத்தை அழைக்கும் சந்தர்ப்பத்தை இலங்கைக்கு ஏற்படுத்தி கொடுத்தது. ஒப்பந்த எழுத்துக்களின் மை காயும் முன்னரே அதைத்தான் அவர்கள் செய்தார்கள்.

இலங்கையின் மூலோபாய விடயத்தில் இந்தியா பாரதூரமான அக்கறைக் கொண்டிருந்திருக்குமானால், தென்னிலங்கையில் இரண்டாவது ஜே.வி.பி போராட்டத்தை இலங்கை இராணுவம் எதிர்கொண்ட போது இந்திய அமைதி காக்கும் படை வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்திருக்கும்.

இந்திய அமைதி காக்கும் படைகளுக்கு விடுக்கப்பட்டிருந்த கட்டளைகள் மிகத் தெளிவாக இருந்துள்ளன. அவர்கள் புலிகளுடன் மோதிக்கொண்டு இறந்துள்ளார்கள். அதன் மூலம் இலங்கையின் ஒற்றுமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் காத்திருக் கிறார்கள்.

இலங்கைக்கும் புதுடில்லிக்குமிடையில் உறவுகள் சீர்குலைந்து அமைதி காக்கும் படையை வாபஸ் பெறும் படி கேட்டபோது இந்தியா அதனை எதிர்க்கவில்லை. இந்த நாட்டின் இறைமை குறித்து இந்தியா தெளிவாகவே இருந்துள்ளது.

மூன்று வழி அணுகு முறை

அமைதி காக்கும் படை வாபஸ் பெறப்பட்டதின் பின்னர் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா மூன்று வழி அணுகு முறையொன்றை கடைப்பிடித்து வந்துள்ளது.

ஒன்று புலிகளின் பயங்கரவாதம் எதிர்கொண்டு போராடப்பட வேண்டும், இரண்டாவது புலிகள் இல்லாமலே அரசியல் தீர்வு ஒன்று, இனப்பிரச்சினைக்கு காணப்பட வேண்டும்- காணப்பட முடியும், மூன்றாவது இலங்கையின் இறைமையும் ஆள்புல ஒருமைப்பாடும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் அமெரிக்காவுக்கு சோவியத் யூனியனுக்கும் பாரிங் கால்வாயை விட பாக்கு நீரினை திருகோணமலையை தென்னிந்திய கரைக்கு மிக அருகிலேயே கொண்டு வந்து விடுகிறது.

83 ஆம் ஆண்டு இன அழிப்பினை பல நாள்களுக்கு தொடர்வதற்கு விடாமல் இருந்திருந்தால் அல்லது அதன் பின்னராவது சரியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இந்திய தலையீடு என்ற பிரச்சினை தோன்றியிருக்க முடியாது.

இந்தியா தனது தென்கோடி அயல் நாட்டின் மீது எதுவித வரலாற்று கோபமும் கொண்டிருக்கவில்லையென்பதற்கு 1974 ஆம் ஆண்டு கச்சதீவு தொடர்பாக செய்து கொண்ட ஒப்பந்தம் உதாரணமாக அமையும்.

பங்களாதேஷ் யுத்தத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது.வரலாறு மற்றும் இந்திய மீனவர்களின் உரிமைகள் தொடர்பான விடயங்களுக்கும் அப்பால் இந்த ஒப்பந்தங்களைக் கொண்டு சென்றுள்ளது இந்தியா.

இந்த வகையில் இந்திய அமைதி காக்கும் படையை அனுப்பியமை முதல் தடவையாக இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கிய சம்பவமாகக் கொள்ள முடியாது. ஜே.வி.பி யின் முதலாவது புரட்சிப் போராட்டத்தை குறிப்பிடலாம்.

எதுவிதத் தயக்கமும் இன்றி இந்தியா தனது விமானப்படையை அனுப்பிவைத்தது. இரண்டு நாடுகளினதும் பாதுகாப்பு மூலோபாயம் ஒன்றோடொன்றை பிணைந்துப் போட்டிருக்கிறது. இப்பொழுது போலவே அப்பொழுதும் நிலைமைகளை புதுடில்லி முழுமையாக விளங்கிக் கொண்டிருந்துள்ளது.

இந்தியாவைப் பொறுத்தளவில் அரசமைப்பு திட்டமும் அரசியல் முறைகளும் மத்திய அரசையும் மாநில அரசுகளையும் பொது விவகாரங்களில் இடைவிடாது ஆலோசனை கலந்து கொள்வதற்கு வழி வகுத்துள்ளன.

## உலகத்தின் நுழைவாயில்

போருக்கு பின்னரான இலங்கையானது தான் போர்க்காலத்தில் தவறவிட்டு விட்ட உலகமய நிலைமைகளை அவதானிக்கத் தொடங்கியுள்ளது. அருகிலுள்ள

## ஏனைய நாடுகளை எங்ஙனம் புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

திருகோணமலை எண்ணெய்க் குதம் பகுதியை இந்தியா பயன்படுத்துவதற்கு இலங்கை அங்கீகரித்துள்ள போதிலும் அவைகளை இந்தியா ஒரு போதும் வர்த்தகம் தொடர்பான விடயங்களைத் தவிர வேறு விதமாகப் பயன்படுத்தியதாக ஒரு போதும் குற்றஞ் சாட்டப்படவில்லை

எண்பதுகளில் இலங்கை தொடர்பான இந்திய கரிசனைகளிலும் மேற்குலகுக்கான மூலோபாய வசதிகள் வழங்கப்பட்ட நிலைகளை கருத்தில் கொண்டால் இதேவிதத்தன்மையே நிலவியமையைக் காணலாம். கடந் கால நிலைமைகளில் இருந்தே இந்த கரிசனை வெளிப்பட்டுள்ளது. பங்களாதேஷ் யுத்தமும் அவ்வாறே அமைந்தது. டியாகோ கார்ஸியாவில் முழு அளவிலான இராணுவத்தளம் ஒன்றை வைத்திருந்த நிலையில் - இந்திய கரைக்கு மிக அருகில்- அமெரிக்கா தனது முயற்சிகள் தாமதமடைந்தமையைக் கண்டது. பெரும் எடுப்பில் கடற்படை நடவடிக்கை எடுக்கப்பட்டு பங்களாதேஷ் யுத்தம் நேர காலத்துடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விட்டது.

டியாகோ கார்ஸியாவை விட இந்தியாவுக்கு மிக அருகிலேயே இலங்கை இருக்கின்றது.

பொருளியலாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் உலகத்துக்கான நுழைவாயில் இந்தியா தான் என்கிறார்கள் அவர்கள். இருந்த போதும் இன்னும் சிலர் இலங்கையில் இந்தியா பொருளாதார காலனித்துவத்தை உருவாக்க முயல்வதாகப் பேசுகிறார்கள். ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் உள்ளக கலந்துரையாடல்கள் தேவையென்பதாகக் கூறத் தொடங்கியுள்ளார்கள். நல்லதென்றாலும் இது வெளிவருவதில் கால தாமதமாகிவிட்டது.

இலங்கையின் போருக்குப் பின்னரான வெளிநாட்டு கொள்கையில் ஒன்றாக இந்தியா விடயத்தை உதாரணமாகக் கொள்ளலாம். இது முக்கியமானது. ஆனால் சில திருத்தங்கள் தேவை.

தம்மிடம் எல்லாவித விடயங்களும் இருக்கின்றன என்ற வகையில் இலங்கையானது நிலைமைகளை விளங்கிக் கொள்ள விரும்பாவிட்டால் அல்லது ஏற்றுக்கொள்ளவும் மறுத்தால், இவர்களின் திட்டங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் நிலைப்பாடுகளை அறியாத தேசங்களின் எண்ணங்கள் செயல்முறைகளை எவ்வாறு இவர்களால் மதிப்பீடு செய்து கொள்ள முடியும். இது கற்பனைக்குரிய விடயமே.

(ப)

வன்னியில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில்

# ஊனமடைந்த 40 பேருக்கு சுயதொழில் ஆரம்பிக்க 50 ஆயிரம் ரூபா வீதம் உதவி வழங்க நடவடிக்கை

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி மாவட்டத்தில் மாகாண விசேட நிதி (PSDG)திட்டத்தின் கீழ் 40 ஊன முற்றோருக்கு இவ்வருடம் சுய தொழில் வழங்கப்படவுள்ளது.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்குரிய நிதியாக தலா 50,000 ரூபாவை கரைச்சி, பூநகரி, கண்டாவளை, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள ஊனமுற்றோருக்கு வழங்க உள்ளது.

இப்பிரதேச செயலக பிரிவுகள் ஒவ்வொன்றிலும் இருந்து தலா 10 ஊனமுற்றோர் இந்தநிதி உதவிக்கென தெரிவு செய்யப்படுகின்றனர்.

இவர்களுக்கு இந்நிதி 3 கட்டங்களாக ரூபா 20,000, 15,000, 15,000 என வழங்கப்பட உள்ளது.

இந்நிதியைக் கொண்டு வருமானமற்ற ஊனமுற்ற குடும்பங்கள் கால்நடை வளர்ப்பு, சிறுவியாபாரம், சிறு கைத்தொழில் போன்ற பொருத்தமான ஒரு சுயதொழிலை மேற்கொள்ள வாய்ப்புக் கிட்டும் .

சென்ற வருடம் இவ்விசேட சுய தொழில் திட்டம் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு 300 பேருக்கு நிதி வழங்கப்பட்டது.மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

இந்த வருடமும் அவ்விதமாக உதவி கிளிநொச்சி உட்பட வன்னிப் பிரதேசத்தின் மாவட்டங்களில் வழங்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது. (1-121)

# பாடசாலையில் சிரமதானம்

கிளிநொச்சி, ஜூலை 10

இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்மடு நகர் கிராம சேவை அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களால் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 4 நாள்களாக இச்சிரமதானப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இக்கிராமத்தில் இரு மாதங்களுக்கு முன்னர் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பின்னரே இப்பாடசாலை மீண்டும் இயங்கத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. (50-405)




# பூநகரி அரச ஊழியர் தங்குவதற்கு 50 லட்சம் ரூபா செலவில் விடுதி

## போதிய அதிகாரிகள் இன்றி பணிகள் தாமதம்

பூநகரி , ஜூலை 10

பூநகரிப் பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர் தங்க வென 2,200 சதுர அடி பரப்பளவுள்ள விடுதி ரூபா 50லட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு உள்ளது.

தற்போது அரசு உத்தியோகத்தர்கள் இதில் தங்கியிருந்து கடமை புரிகின்றனர்.

பூநகரிப் பிரதேசத்தில் பெருமளவில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இப்பிரதேச செயலகத்திற்கு மிக அண்மையில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக எஸ்.பரணீதரன் போட்டிப் பரீட்சை மூலமாகத் தெரிவாகி கடமையேற்றுள்ளார்.

உடுவில் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து இடமாற்றம் மூலம் சென்ற எஸ்.சுஜித் பதில் சமூக சேவை உத்தியோகத்தராகப் பணியாற்றுகிறார்.

ஆயினும் தொழில்நுட்ப அலுவலர், கலாசார அலுவலர் சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர்,விளையாட்டு அலுவலர் ,மகளிர் அபிவிருத்தி உதவியாளர், உளவளத் துணை அலுவலர் போன்ற பதவிகளுக்கு இதுவரை ஆள்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

5முகாமைத்துவ உதவியாளர்கள், சக உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து பிரிவின் முழு வேலைகளையும் செய்து வருகின்றனர்.

மத்திய அரசும் வடமாகாண சபையும் இந்த உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்பி மக்கள் சிறந்த சேவையைப் பெற வழி செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுகின்றனர். (1-121)

# மன்னாரில் பாணின் விலை இறங்க மறுக்கிறது

## அரச அதிபர் கூட்டம் கூட்டிய பின்னரும்

மன்னார் , ஜூலை 10

மன்னாரில் நீண்ட காலமாகவே பாணின் விலை பத்து ரூபாவால் அதிகரித்து விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது மேலும் நான்கு ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலையாக 52 ரூபாவாக விற்கப்படுகின்றது.

இதனை மன்னார் மக்கள் அரச அதிபருக்குச் சுட்டிக் காட்டியதன் விளைவாக நேற்று முன்தினம் மாலை அரச அதிபர் தலைமையில் மன்னாரிலுள்ள வெதுப்பக உரிமையாளர்கள் மற்றும் மன்னார் மாவட்டப் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் அழைக்கப்பட்டுப் பாணின் விலை அதிகரிப்புக்கான காரணம் வினாவப்பட்டது.

வெதுப்பக உரிமையாள்ர்களால் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டபோதும் அரச அதிபர் அதனை ஏற்க மறந்ததோடு, பாணின் விலையை மேலும் ஐந்து ரூபாவால் குறைக்கும்படி வலியுறுத்தினார். வெதுப்பக உரிமையாளர்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆயினும் 450 கிராம் நிறையுள்ள பாணின் விலை இன்று வரையிலும் குறைக்கப்படாமல் முன்பு விற்ற 52 ரூபாவாகவே விற்பனை செய்யப்படுவதோடு துண்டாக வெட்டுவதற்கு மேலும் ஐந்து ரூபா அறவிடப்படுகிறது. (1-80)

# பூநகரிக்கு இரு பௌசர்களை கியூமெடிக்கா நிறுவனம் வழங்கியது

## குடிதண்ணீர்ப் பிரச்சினை ஓரளவு தீர்ந்தது

பூநகரி , ஜூலை 10

'கியூமெடிக்கா' எனும் தன்னார்வ தொண்டு நிறுவனம் பூநகரி பிரதேச செயலகத்திற்கு வழங்கிய 2 தண்ணீர் பௌசர்களைக் கொண்டு இப்பிரதேசத்திற்கு குடி தண்ணீர் வழங்கப்படுகிறது.

பூநகரி பிரதேச செயலகத்திலிருந்து சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள முக்கொம்பன் கிராமத்திலிருந்து நாளாந்தம் இந்த பௌசர்கள் மூலமாக குடிதண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து விநியோகிக்கப்படுகின்றது.

தற்போது பொதுமக்களின் குடிதண்ணீர் தேவை ஓரளவுக்கு ஈடுசெய்யப்படுவதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர். (1-121)

# வன்னி மக்கள் கைவிட்ட வாகனங்கள் அவர்களுக்கு மீளக் கிடைக்குமா?

செய்திக்கட்டுரை

வன்னிப் பகுதியில் இறுதிக்கட்ட போரின் போது பொதுமக்களால் கைவிடப் பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களை உரிமையாளர்கள் பெறுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உதவும் மனப்பாங்குடன் உதவ முன்வர வேண்டும்.


மக்களால் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள்

இறுதிக்கட்டப் போரின் போது சொல்லாணத் துன்பங்களை அனுபவித்து மறுபிறவி எடுத்தவர்கள் போல உயிருடன் மீண்டு வந்துள்ள இம்மக்களை சற்று விசேடமாக கவனித்து உதவிகளை வழங்க அரச அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் ஏனைய வர்களும் முன்வர வேண்டும்.

மன்னாரில் 2007 இல் தொடங் கிய இடப்பெயர்வு முல்லைத்தீவில் வட்டுவாகல் வரை 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரை நீண்டு சென்றது. ஆரம்பத்தில் மக் கள் தமது சொத்துக்களுடனேயே இடம் பெயரத் தொடங்கினர். அதாவது அசையும் சொத்துக்களையும் தங்களுடன் எடுத்துச் சென்றனர். அப்போது மக்களின் உயிரிழப்பும் பிற்காலத்துடன் ஒப்பிடுமிடத்து குறைவாக இருந்தது.

ஆனால் கிளிநொச்சிக்கு அப்பால் இடம்பெயரும் போது மக்கள் மிக வேகமாக இடம்பெயர வேண்டி இருந்ததுடன் தமது சொத்துக்களைக் கைவிட்டு செல்லத் தொடங்கி விட்டனர்.

ஒவ்வொரு இடத்திலும் ஒரு [illegible] இக்காலத் தில் மக்களின் உயிரிழப்பும் அதிகரித்தது.

இதனால் மக்கள் தமது சொத்துக்களில் அக்கறை செலுத்தவது குறைந்து எப்படியாவது உயிரைக் காப்பாற்றி விட வேண்டும் என எண்ணி வேகமாக இடம்பெயரத் தொடங்கினர். எனினும் இயங்கு நிலையில் இருந்த தமது மோட்டார் சைக்கிள்களையும், வாகனங்களையும், துவிச்சக்கர வண்டிகளையும் தம்முடன் இறுதிவரை கொண்டு செல்ல முயன்றனர்.

எனினும் குடும்ப அங்கத்த வர்களின் எண்ணிக்கை அவற்றை இயக்க போதாது போது சில கைவிடப்பட வேண்டியிருந்தது. சாதாரண நடுத்தர குடும்பம் ஒன்றில் ஒரு வீட்டில் இரண்டு அல்லது மூன்று துவிச்சக்கர வண்டிகள், ஒன்று அல்லது இரு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஏனைய வாகனங்களில் ஒன்று அல்லது இரண்டு கூட இருந்தன. இவற்றில் குடும்பத் தலைவன் தன்னாலும் தனது மனைவி, பிள்ளைகளையும் கொண்டு செல்லக் கூடிய வற்றையே கொண்டு செல்ல முடிந்தது. மிகுதி கைவிடப்பட்டன.

2009 ஜனவரியின் பின் மக்கள் இராணு வக் கட்டுப்பாட்டில் அகப்பட தொடங்கினர். சிறிது காலம் செல்ல மக்கள் தாமாகவே இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் சென்றனர். இதன்போது மக்கள் உடுத்த உடுப்புடன் உயிர் பிழைத்தால் போதும் என நினைத்தே சென்றனர். இதைவிட நோயாளிகளும் , காயப்பட்டவர்களும் கப்பல் மூலம் சென்றனர். இவ்வாறு செல்லும் போது அவர்களது மனநிலை ஒன்றும் வேண்டாம் உயிர் பிழைத்தால் போதும் என்பதாகவே இருந்தது.

பின்னர் நலன்புரி நிலையங்களில் பல இன்னல்களுடன் தறப்பாள்களில் வாழ்க்கை நடத்திய அவர்கள் தமது சொந்த மண்ணில் வெறுங்கையோடு எனினும் மீள்குடியேறவே விரும்பினர். மீள்குடியேற்றப்பட்டு வாழ்வை ஆரம்பித்த போது அனேகமான மக்கள் தமது வெறு மையை உணர்ந்து வாழ வழியின்றி அல்லல்படத் தொடங்கினர்.

## மக்களின் அவலங்களைத் தீர்க்க விசேட ஏற்பாடு அவசியம் என வலியுறுத்து

இக்காலத்தில் இவர்களது ஏக்கங்களுக்குள் சிறுஆறுதல் யானைப் பசிக்கு நெற்பொறி போட்டாற் போல கைவிடப்பட்ட வாகனங் கள் மீள வழங்கப்படும் என அறிவிப்பு. இதன்பின் வாகனங்களில் மோட்டார் சைக்கிள்களும் , சில கனரக வாகனங்களும் கிளிநொச்சி வாகன பராமரிப்பு நிலையம் நோக்கி வரத் தொடங்கின. ஒவ்வொரு வரது மனங்களிலும் எமது வாகனம் இதனுள் வராதா? என்ற ஏக்கம். தொடர்ந்து இனங் காணும் படலம் தொடர்ந்தது. ஒரு சில மாதகாலமாக இது நீண்டு சென்றது. இனங்கண்ட வர்கள் தமது உடைமைகளை எப்போது தருவார்கள் என்ற ஏக்கத்துடன் அலைந் தனர். ஒருவாறாக அதற்கு ஒரு முடிவு வந்து விட்டது.

கிளிநொச்சி அரச அதிபர் தலைமையில் ஒரு நிகழ்வு வடமாகாண ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர், அரச உயர் அதிகாரிகள் பங்குபற்றுதல்களுடன் நடந்த நிகழ்வில் சம்பிரதாய பூர்வ கையளிப்பில் கையேற்ற ஒருவர் '' எனது மோட்டார் சைக்கிளில் இஞ்சின் கூட இல்லை. இதை எனக்கு தர இவ்வளவு ஏற்பாடா'' என அங்கலாய்த்துக் கொண்டார்.

அவர் போல் சில கைவிடப்பட்ட சைக்கிள்களில் சில்லுகள் கூட இல்லை. அனேக மானவைகள் இப்படி இருக்கும் போது வன்னி மக்கள் சாதனை படைத்தார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றது. அதாவது இன்ஜின் இல்லாமல் சில்லுகள் இல்லாமல் இவற்றை ஓடித் திரிந்து சாதனை புரிந்தார்களோ தெரியவில்லை.

(18 ஆம் பக்கம் பார்க்க)

-திசி-


சேதமடைந்த நிலையில் காணப்படும் மோட்டார் சைக்கிள்

# வன்னி மக்கள் கைவிட்ட வாகனங்கள்....

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

206 மோட்டார் சைக்கிள்களும் 6 கனரக வாகனங்களும் ஒப்படைக்கப்பட்டன. இன்னும் 219 வாகனங்கள் இனங்காணப் பட்டன. உரியவர்கள் சமுகம் தராமையால் வழங்க முடியவில்லை என தகவல் கிடைத்தது.

இங்கு 14,000 இற்கும் மேற்பட்ட சைக் கிள்களும் ,7 ஆயிரத்துக்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள் வாகனங்களும் இங் குள்ளதாக ஆளுநர் அறிவித்துள்ளார். 7 ஆயிரம் மோட்டார் வாகனங்களுள் 431 மட்டுமே இனங்காணப்பட்டுள்ளன என் றால் சற்று சிந்திக்க வேண்டிய விடயமே. கடந்த சில மாதங்களாக இவ்வளவுதான் உரிமையாளர்களால் இனங் காண முடிந்த ததா?

இங்கு தான் பிரச்சினைகள் சில உள் ளன வாகனங்களின் உரிமையாளர் கள் பலர் உயிருடன் இல்லை. அவர்களது வாகனங்களை அவர்களது உரித்துடைய வர்கள் பெறுவதில் சிரமம் உள்ளது. பல வாகனங்கள் இரண்டாம் , மூன்றாம் கைமாறி உள்ள போதிலும் இறுதி உரிமை யாளர் பெயரில் பதிவுச் சான்றிதழ்கள் இல்லை. இறுதி இடப்பெயர்வின் போது பல வாகனங்களது ஆவணங்கள் கைவிடப் பட்டன. இவர்களுக்கு எவ்வாறு இவற்றை வழங் கலாம் என சாத்தியப்பாடான வழி யினை சம்பந்தப்பட்டவர்கள் கண்டறிய வேண் டும்.

வாகனத்தை நேரடியாக பயன்படுத் தியவர் ஒருவாறு தமது சீழிந்த வாகனத்தை கண்டறிய முடிந்தாலும் சம்பந்தப்பட்ட வர்கள் உயிருடன் இல்லாத நிலையில் அல்லது இங்கு வாழ முடியாதுள்ள நிலை யில் அதனை அவரது உரித்துடையவர் இனங்காண்பது என்பது கடினமான விட யமே. எனவே இலகுவாக இனங் காண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண் டும். தற்போது இலக்கத்தகடு களுடன் உள்ள வாகனங்கள் இனங் காண்பது இல குபடுத்தப்பட்டுள்ளது. அந்த இலக்கங் கள் கணனிமயப்படுத் தப்பட்டு அவை வைக்கப்பட்டுள்ள இடமும் அடையாளப் படுத்தப் பட்டுள்ளது. இலக்கத்தகடு விட யத்திலும் மக்களுக்கு ஒரு சிக்கல் என்ன வென்றால் வன்னி வாகனங்களுக்கு சிறி லங்கா பதிவு இலக் கத்தோடு ஒன்று மற் றையது விடுதலைப் புலிகளின் பதிவு இலக்கத்தகடு இவற்றால் வாகன பதிவு இலக்கம் இரண்டையும் மறந்தவர்கள் ஏராளம் பேர். சிறிலங்கா பதிவினை தம் மிடம் வைத்திருந்தாலும் விடுதலைப்புலி களின் பதிவு புத்தகத் தினை அவர்கள் தம் வசம் வைத்திருக்க விரும்பாமல் கைவிட் டார்கள்.

எனவே புலிகளின் இலக்கத்தகடு களு டன் உள்ள வாகனங்களையும் இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்களையும் இனங் காண விசேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு இது சிரமமான காரியம்தான். எனினும் துன்பப் பட்டு ஏதிலியாக உள்ள மக்களுக்கு சிரமம் பாராது உதவ முன் வரலாம்.

இவ்வாகனங்களை வேறாக்கி வைத்தி ருத்தல், அவற்றை வகைப்படுத்தி வைத் திருத்தல்,அருகில் சென்று பார்வையிடக் கூடியதாக ஒழுங்குபடுத்தல், வாகன அடிக்கட்டை இலக்கங் களையும் இயந்திர இலக்கங்களையும் கணனி மயப்படுத்தல் போன்ற சாத்தியமான வழிகளைச் சிந் தித்து சிரமம், செலவு பாராது உதவ முன் வர வேண்டும்.

இவ்வாகனங்களை இங்கு கொண்டு வந்து பராமரிக்க 10 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவாகியதாக ஆளுநர் கூறினார். இவ்வளவு பணத்தை செலவு செய்து 431 வாகனங்களை மட்டும் வழங்கினால் அப் பணத்தினதும் சம்பந்தப்பட்ட அதிகாரி களது உழைப்பும் பயனற்றதாகி விடுமல் லவா? அத்துடன் 14,000 துவிச்சக்கர வண்டிகளையும் திருத்தி வழங்குவதாக ஆளுநர் குறிப்பிட்டார். அவையாருக்கு வழங்கப்படவுள்ளன? மீள்குடிய மர்ந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு சைக் கிளையாவது உடன டியாக திருத்தி வழங் கினால் அவர்களது வாழ்க்கைக்கு அது உதவுமல்லவா?

இச் சைக்கிள்களும் வாகனங்களும் வெயிலிலும் மழையிலும் கிடந்து சீரழிந்து வருகின்றன.

பயன்பாட்டுக்கு உகந்த நிலையில் அவற்றை வழங்க வேண் டுமாயின் சம்பந்தப் பட்டவர்கள் விரைந்து நடவடிக்கைளில் ஈடு பட வேண்டும்.

இனங்காணப்படும் வாகனங்களுக் குரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப் பட்டால் உடனடியாக அவை உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. இது உரிமையாளர் களுக்கு நல்ல சமிக் ஞையே. இதேபோன்று ஆவண பிரதி களை பெற உதவுதல், உரிமை மாற்றத் திற்கு உதவுதல், இனங்காண உதவுதல் என்பவற்றின் மூலமே அவை உரியவர் களைச் சென்றடைவதை விரைவுபடுத்த முடியும்.

அத்துடன் வாகனங்களை கைவிட்ட உரிமையாளர்களும் ஆர்வத்துடன் அவற்றை இனங்கண்டு பெறுவதற்கான முயற்சி களில் விரைந்து ஈடுபட வேண்டும். ***





உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 662 திகதி 08-07-2010

வெற்றி எண்கள்

15 18 22 36 K

ஜக்பொட் பரிசு ரூ. 26,162,530/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 26,162,530/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 16 | 2,000/= | 32,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 370 | 1,000/= | 370,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 615 | 1,000/= | 615,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15518 | 60/= | 931,080/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7310 | 40/= | 292,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 181642 | 20/= | 3,632,840/= |
| | | மொத்தம் ரூ. | 6,673,320/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மாத்தளை | 700167626-5-45 |
| கேகாலை | 700173904-0-10 |
| அனுராதபுரம் | 700166493-8-38 |
| திருகோணமலை | 700169978-8-08 |
| கொழும்பு | 700162678-3-13 |
| குருநாகல் | 700161747-2-02 |
| அம்பாந்தோட்டை | 700167330-7-17 |
| கண்டி | 700168590-2-02 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,073,320/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 26,655,250/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஜுலை 12 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப் படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி
10.07.2010 - 21.07.2010 பி.ப. 2 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி
22.07.2010 நண்பகல் 12 மணி வரை
கேள்வி திறந்து பார்க்கும் திகதி
22.07.2010 பி.ப. 1.30 மணி
கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இடம்
தலைமை அலுவலகம், சுன்னாகம்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத்தரம் |
|---|---|---|---|
| 1. சுன்னாகம் பொது நூலகம் திருத்தம். | 23000.00 | 560.00 | M8/C9 |
| 2. சங்குவேலி கெலன்காமம் வீதி திருத்தம். | 6000.00 | 560.00 | M9/C10 |
| 3. ஏழாலை திராளை வீதி திருத்தம். | 13000.00 | 560.00 | M9/C10 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப் பட்ட ''இக்ராட்'' தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந் தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

தேசத்தைக்கட்டியெழுப்பும் (NBT) வரியாக மீளளிக் கப்படாத கேள்விப்பத்திர பணத்துடன் மேலதிகமாக 3% அற விடப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி 'செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் 'என்ற முகவரிக்கும் அதன் பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கும் உரிய காலத் திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலிலோ அல் லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி சு.முருகநேசன்
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்குப் பிரதேசசபை,
சுன்னாகம்.
05.07.2010 (சி/569044)


## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
நல்லூர் பாம் சென்ரர்,
19,முருகேசர் லேன், நல்லூர்.

## வீடு வாடகைக்குத் தேவை

மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக் குத் தேவை. திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் பகுதிகள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 0789370029

## பிக்கப் விற்பனைக்கு

40ஸ்ரீ பிக்கப் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 303, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

## புறொயிலர் விற்பனைக்கு

நிறை கூடிய புறொயிலர் சுத்தம் செய்யப்பட்டது கிலோ 480/= திங்கள், புதன், சனி, ஞாயிறுகளில் நண்பகல் 12 மணிவரை. குமரன் பாம், 227, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம். 0776180675

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிற்லைன் பைரகா புறொயிலர் குஞ்சுகள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவுசெய்யவும். விவரங்களுக்கு:
எஸ்.கிருஸ்ணகுமார், மானிப்பாய் T.P. 0772338084

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாத மளிக்கப்பட்ட No. - 1 தரமான Broiler கோழிக் குஞ்சுகள் (விசேட விலையில்) 19.07. 2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன்,
நல்லூர்.
T.P.:021 222 6944

கூட்டி பாம்,
வட்டுக்கோட்டையிலும்.
பதிவு செய்யலாம்.
T.P.:0213216290

குறிப்பு (எம்மிடம் குஞ்சு வாங்குபவரிடம் திருப்பிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்)

## விற்பனைக்கு

'வட்டுக்கோட்டைக் கூத்தும் கிராமியக் கலைகளும்' என்னும் வடமோடிக் கூத்து நூல் வலி.மேற்கு பிரதேச செயலகத்திலும், வட்டுக்கோட்டை சிவன் கோயிலடிப் பொதுச்சந்தையிலும், யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத் தகசாலையிலும் விற்பனைக்குண்டு.

நூலாசிரியர்: கந்தையா நாகப்பு,
வட்டுக்கோட்டை.


## பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பொது அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேசத்தில் இயங்கும் பூநகரி பல நோ.கூ.சங்கம் பதிவு இல.PA/48 உடையது மான எமது சங்கத்தின் மூலம் கீழ்வரும் அறிவித்தல் சகல பொதுமக்களினதும் பார்வைக்கு முன்வைக்கின்றோம்.

அசாதாரண சூழ்நிலை காரணமாக சங்கத்தின் மீதிகளை உரிய ஆவணங்களுடன் ஒப்பீடு செய்வதற்காக சங்கத் துடன் தொடர்புபட்ட வருமதியாளர்கள், சென்மதியாளர் கள், கடன் வழங்குநர்கள், கடன்பெறுநர்கள், முற்பணக் கொடுக்கல் செய்தவர்கள், கிராமிய வங்கியின் வாடிக்கை யாளர்கள், தொடர்புபட்ட நிறுவனதாரர்கள், கூட்டுறவு அமைப்புக்கள், அங்கத்தவர்கள், பொதுமக்கள் ஆகி யோர் தம்வசமுள்ள ஆவணங்களை நிழல் பிரதி செய்து கோரல் கடிதத்துடன் அலுவலகத்துக்கு நேரடியாகவோ, பதிவுத் தபால் மூலமாகவோ எதிர்வரும் 15.07.2010 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

கூட்டுறவு சேவையிலுள்ள,
து.இரத்தினசிங்கம்
பொது முகாமையாளர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனும் சொல்

வையத்துள் 26 ★ 12 ★ 1964

தெய்வத்துள் 10 ★ 06 ★ 2010



அரியாலையூர்
கலாபூஷணம்

அமரர் வே.க.பாலசிங்கம் (ஆசிரியர்)அவர்களின் அன்புப் புதல்வன்

**அமரர் பாலசிங்கம் பிரபாகரன்**

(நூலகப் பொறுப்பாசிரியர், யா/ சிதம்பராக் கல்லூரி)

அன்னைக்கும் தந்தைக்கும் தன் குடும்பத்திற்கும்
உடன் பிறவா உறவுகளுக்கும்
உற்றவனாய் வாழ்ந்தவனே - நீ
தொலை தூரம் சென்று விட்டாலும்
தொலைத்திடோம் உன் நினைவை என்றும்!

ஓம் சாந்தி !!!

34/1, கலைமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்

உடன் பிறவாச்
சகோதரர், சகோதரிகள்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(100460)

# துவாரகனின் துல்லியமான பந்து வீச்சு;
# யாழ்ப்பாணக் கல்லூரியை வென்று அசத்தியது ஸ்கந்தா

மருதனார்மடம்,ஜூலை 10

பாடசாலைத் துடுப்பாட்டச் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் 15 வயதுக்குட்பட்ட அணியினருக்கிடையேயான 50 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை 17 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.



ஸ்கந்தா மைதானத்தில் நடைபெற்ற இந்த விறுவிறுப்பான போட்டியில் கே.துவாரகன் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியமை வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணித் தலைவர் ரி.தவதர்சன் பந்து வீச்சினைத் தெரிவு செய்தார். இதற்கிணங்க முதலிலே துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணியினர் 31 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டனர்.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான ஏ.றொசான் 18 ஓட்டங்களையும் பி. விதுசன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். அணித் தலைவர் ஜே.ஜனக்சன் 16 ஓட்டங்களையும் கே. துவாரகன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் பந்து வீச்சில் அணித்தலைவர் ரி.சிவதர்சன் 10 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். எஸ்.லிங்கராஜ், எல்.மாதவரூபன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், எஸ்.பார்த்தீபன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் 134 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் 29:3 ஓவர்களில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

இந்த அணி சார்பாக பி.அபிராஜ் 5 பவுண்டரிகளுடன் 26 ஓட்டங்களையும், எல்.மாதவரூபன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஸ்கந்தா அணியின் பந்து வீச்சில் துல்லியமாகப் பந்து வீசிய சுழல் பந்து வீச்சாளரான கே.துவாரகன் 10 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஜெ.ஜனக்சன், எஸ்.மதுசன்,பி.விதுசன், எ.றொசான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (1-55)

# சிநேக பூர்வ கூடைப்பந்தாட்டம்;
# மட்டக்குளி அணியை வென்றது யாழ்.அணி

யாழ்ப்பாணம்,ஜூலை10

மட்டக்குளி அமறோட் குறூப் இராணுவ அணிக்கும் (Armoured corps) யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி வெற்றிபெற்றது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை வரணி 52 ஆவது இராணுவ படைப்பிரிவு - கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மட்டக்குளி அமறோட் குறுப் இராணுவ அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி மோதியது.

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி மட்டக்குளி அமறோட் குறூப் இராணுவ அணியை 52:42 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டது. (1-23)

# தூயஒளி வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம்;
# சென்.மைக்கல், றோயல் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை10

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் தூயஒளி வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி, றோயல் விளையாட்டுக் கழக அணி ஆகியவை வெற்றிபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி எதிர்த்து விளையாடிய மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்கென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

றோயல் விளையாட்டுக்கழக அணி யங்கென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (1-23)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஜூலை10

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் இன்று காலை 8.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

அரையிறுதி ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* பருத்தித்துறை பிரதேச செயலக அணி எதிர் கரவெட்டிப் பிரதேச செயலக அணி.
* உடுவில் பிரதேச செயலக அணி எதிர் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி.

(1-86)

* * *

வலி.வடக்கு,ஜூலை10

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகளுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வாக இன்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் 10,000 மீற்றர் ஆண்கள் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

(1-86)

* * *

வலி.வடக்கு,ஜூலை10

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கு இடையே நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* உரும்பிராய் சென்.மைக்கல் வி.க, எதிர் ஆனைக்கோட்டை கலை ஒளி வி.க.
* வல்லை ஆதி சக்தி வி.க எதிர் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் வி.க.

(1-86)




# சாதனை படைத்த வீராங்கனைகள்



வடமாகாண கல்வித் திணைக்களம் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான தடகளப் போட்டியில் 13 வயதுப் பிரிவுப் பெண்கள் பிரிவில் இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலய மாணவி மேரி நிலைசணா 200 மீற்றர் ஓட்ட நிகழ்வு, நீளம்பாய்தல் நிகழ்வு ஆகியவற்றில் முத லிடத்தையும், 100 மீற்றர் ஓட்ட நிகழ்வில் இரண்டாமிடத்தையும் பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

* * *



வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடந்த தடகளப் போட்டியில் 11 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் இளவாலை கன்னியர் மட மகாவித்தியாலய மாணவி சாளினி துசாரா 100 மீற்றர் ஓட்ட நிகழ்வில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தி னையும் 75 மீற்றர் ஓட்ட நிகழ்வில் இரண்டாமிடத்தையும் பெற்று வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்றுள்ளார்.

* * *



வடமாகாண கல் வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற தடகளப் போட்டியில் 19 வயதுப் பெண்கள் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி உருத்திரேஸ்வரன் ஷோபினி தடைதாண்டிப் பாய்தல் போட்டியில் முதலாமிடத்தையும், உயரம் பாய்தல் போட்டியில் 3 ஆம் இடத்தையும் பெற்றார். (1-23)

(படங்கள்: தமிழினியன்)

# தேசிய மட்டத்துக்குத் தெரிவானவர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்க ஏற்பாடு

## பரிசளிப்பு விழாவில் ஆளுநர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை 10

தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட வடமாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே வடமாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியும் சிறப்பு விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸும் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது, இங்குள்ள பாடசாலைகளில் வருட ஆரம்பத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம் இவ்வாறு தேசிய மட்டம் வரையும் போட்டிகள் நடத்துகிறோம்.

இவ்வாறு நடத்தப்பட்ட போட்டிகள் மூலம் தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்படும் வடமாகாண மாணவர்களுக்கு இது வரைகாலமும் நிலவிய நாட்டின் யுத்த சூழ்நிலை காரணமாக உரிய வகையில் பயிற்சிகள் வழங்க முடியவில்லை.

இம் மாணவர்களும் உரிய வசதிகளைப் பெற்று தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம்- என்றார்.

(1-16)

# வடமாகாணப் பாடசாலைகளின் தடகளப் போட்டிகள்;
# சாதனை படைத்த மேலும் சில வீர, வீராங்கனைகள்

வலி.வடக்கு,ஜூன் 10

வடமாகாண கல்வித் திணைக்களம் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் தொடர்ந்து வெளிவருகின்றன. அவற்றின் சில முடிவுகள் வருமாறு:

**ஆண்கள்**

**15 வயதுப் பிரிவு - 100 மீற்றர்**

ம.அபியதஸ்சிம் (மன்னார், சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி), இ.சஜீந்திரன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), சி.வனஜன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), ஜெ.வினோத் (மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி).

**உயரம் பாய்தல்**

எஸ்.கேதீஸ்வரன்- 1.38 மீற்றர் (வவுனியா, பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்), சி.டிலர்சன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), பி.கிமிட்சன் (மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி), சி.இளங்குமரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**நீளம் பாய்தல்**

ம.அபியதஸ்சிம் 4.39 மீற்றர் (மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி), தி.திலக்ஷன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), என்.நிஷாந்தன் (வவுனியா அருணாசலம் உள்ளக இடம்பெயர்ந்தோர் நலன்புரி பாடசாலை), வ.மெலியஸ் (மன்னார் புனிதவளனார் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை).

**4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி, மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

**பெண்கள்- 100 மீற்றர்**

சி.ஆரணி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), எஸ்.மேரி நிலக்ஷனா (இளவாலை புனித கன்னியர் மடம் மகா வித்தியாலயம்), சௌ. பிரியதர்சினி (மன்னார் கௌரி அம்பாள் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), எ.பிரியதர்சினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**200 மீற்றர்**

எஸ்.மேரி நிலக்ஷனா (இளவாலை புனித கன்னியர் மடம் மகா வித்தியாலயம்), பி.விஜிந்தினி (மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), பி. நிதர்சனா (யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி), எம்.ரசிதா (வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்).

**நீளம் பாய்தல்**

எஸ்.மேரி நிலக்ஷனா (இளவாலை புனித கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), சௌ.பிரியதர்சினி (மன்னார் கௌரி அம்பாள் அர்சினர் தமிழ்க் கலவன் பாடசாலை), சி.ஆரணி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), நு.பாத்திமா சிப்னா (மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயம்).

**4X100 மீற்றர் தடை தாண்டல்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இளவாலை புனித கன்னியர் மடம் மகா வித்தியாலயம், மன்னார் கல்கிடந்தகுளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, கிளிநொச்சி இந்துக் கல்லூரி. (86) (தொடரும்).

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் செல்வி தமிழினி சதீஸ்வரன்**

கூடித்திரிந்த பள்ளி நாள்களிலே
நோயானாலும் கலங்காத விளக்கு!
பாதி வழியில் பறித்தானோ
காலனவன் உன் விதியை?

உயிர்த்தோழிகள் -11^.
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## முன்பள்ளியின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 10

சுன்னாகம் கிழக்கு சிவன் முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத் தலைவர் செ.சிவநடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஸன், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் கிழக்கு கிராம அலுவலர் வி.எம். இராமலிங்கம், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராஜா, உடுவில் முன்பள்ளி இணைப்பாளர் திருமதி புஸ்பராணி லோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (201)

## சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

28.06.2010 ஆம் திகதிய உதயன் நாளிதழில் பக்கம் 16 இல் பிரசுரிக்கப்பட்ட எமது பதவி வெற்றிடம் தொடர்பான விளம்பரம் சார்பாக;

'மேற்படி விளம்பரத்தில், வயது 'விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்' என்பதனை 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்' என திருத்தம் செய்யப்படுகின்றது. (C/569050)

**பொதுமுகாமையாளர்**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**பாலசிங்கம் பிரபாகரன்**

(நூலக உதவியாளர், யா/ சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை)

உள்ளத்தில் உயர்வாகி
இதயத்தில் இறையாகி
வொனுறையும் தெய்வத்துள் தெய்வமாகி

தோற்றம்
26 ★ 12 ★ 1964



மறைவு
10 ★ 06 ★ 2010

நெஞ்சத்து மனங்களில்
நீங்காத இடம் பிடித்தவரே...!
பண்பில் சிகரமாய்
அன்பெனும் முத்தெடுத்து
அறிவெனும் அமுதெடுத்து
அன்பினால் ஜெகத்தினை ஆண்ட -எம்
இல்லறத்தின் குலவிளக்கே...!

நல்லவர்கள் வாழ்வதில்லை - இது
நானிலத்தின் தீர்ப்பு என்பதை
யதார்த்தத்தில் உண்மையாக்கியவரே - இன்று
இதயத்தின் இதயத்தால் நீர்
எம்மை விட்டுப் பிரிந்து
மாதமொன்று சென்றாலும்
எம் நெஞ்சில் விதைக்கப்பட்டு விட்டீர்கள்.

இன்று (10.07.2010) சனிக்கிழமை காலை 6 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

"செந்தில்பதி", பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

மனைவி : நகுலமாலா பிரபாகரன்

## மரதன், சைக்கிள் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 91 ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஆண்களுக்கான மரதன், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கு நிலைய முன்றலில் இடம் பெறவுள்ளன. (6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12 ★ 12 ★ 1943



மறைவு
21 ★ 07 ★ 2009

அமரர்

**அய்யாத்துரை முத்துக்குமாரசுவாமி**

(Rtd. Head Factory Officer. Loolecondra Estate)

ஆண்டொன்று சென்றாலும்
எங்கள் உயிர் மூச்சில்
உங்கள் நினைவுகளைச்
சுமந்து வாழ்கிறோம் -
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்


மணியகாரன் வளவு,
கைதடி தென்கிழக்கு, கைதடி.

குடும்பத்தினர்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கனவுகள் பல சுமந்து
சாதனை படைத்திடும் வேளைதனில்
மின்னாமல் இடி விழுந்ததுவோ
கண்ணிமைக்கும் நேரத்தில் விண்ணுற்றாய் சுஜீவா
உனக்காய்க் கண்ணீர்ப்பூக்கள் சிந்திக்
கவலையோடு உருகுகின்றோம்
என்றென்றும் உன் நினைவை ஏற்றிவைப்போம்



துளிராய்: 17.01.1989 செல்வன் விதையாய்: 27.05.2010

**சண்முகநாதன் சுஜீவன்**

(2 ஆம் வருடம், பொறியியற்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்)

எமது இதயதீபம் செல்வன் சண்முகநாதன் சுஜீவனின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தும் கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தும் மலர்வளையம் வைத்தும் இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

45 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு இன்று (10.07.2010) சனிக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது திருநெல்வேலி இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் நிகழவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(100462)

தற்காலிக முகவரி:
முருகன் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

நிரந்தர முகவரி:
66/2, திருவையாறு, கிளிநொச்சி.

என்றும் உங்கள் நினைவுடன்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

## நடுக்கடலில் நாகை மீனவர் அடித்துப் படுகொலை

# இலங்கையின் கொடுமையைத் தடுக்குக மன்மோகன் சிங்குக்கு கருணாநிதி கடிதம்

சென்னை,ஜூலை10

இலங்கைக் கடற்படையினரால், நாகபட்டினம் மீனவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று வலியுறுத்தி பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதல்வர் கருணாநிதி கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்தக் கடிதத்தின் நகல், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதல்வர் கருணாநிதி அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கடற்பகுதியில் மீன் பிடிப்பதற்கான தகுதியைப் பெற்றிருக்கும் தமிழக மீனவர்களுக்கு உடல் ரீதியாக எந்தவிதத்திலும் துன்புறுத்தப்படக் கூடாது என்று இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதை மீறி தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்பட்டு, இன்னலுக்கு உள்ளாக்கப்பட்டு வருவது பற்றி நான் உங்கள் (பிரதமர் மன்மோகன் சிங்) கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

இந்த விடயத்தில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

- இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊடகங்களுக்கு முதல்வர் அனுப்பிய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -



இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்டு தமிழக மீனவர் செல்லப்பன் கொல்லப்பட்ட சம்பவம் கடும் கண்டனத்துக்குரியது. இதுபோன்ற செயல்கள் இனியும் நடைபெறாமல் இருக்க கடுமையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கொடுமை புரிவதென்பது இது முதல் முறையல்ல - தொடர்ந்து நடைபெறும் தொடர்கதையாகவுள்ளது.

இந்திய - இலங்கை அரசுகளுக்கு இடையே அண்மையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட நேரத்திலே கூட, தமிழக மீனவர்களின் இந்த நிலை குறித்து விரிவாகப் பேசப்பட்டு தமிழக மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டி மீன் பிடித்தால் கூட, அவர்களைத் தாக்குவதோ, கொலை செய்வதோ கூடாது என்றும், முறைப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர இதுபோன்ற செயல்களில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபடக் கூடாது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

ஆனால், அதற்கு மாறாக தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படும் இக் கொடுமைகளைக் களைய மத்திய அரசு உடனடியாக இதில் தலையிட்டு இதுபோன்ற செயல்கள் இனியும் நடைபெறாமல் இருக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இப்படி அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைத் தூதரகம் முன்பாக இன்று தி.மு.கவின் மீனவர் அணி ஆர்ப்பாட்டம்!

சென்னை,ஜூலை10

இலங்கைக் கடற்படையினரால் நாகப்பட்டினம் மீனவர் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, தி.மு.க. மீனவர் அணி சார்பில் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்னால் இன்று (சனிக்கிழமை) கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து தி.முக. மீனவர் அணி செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைக் கடற்படையின் தொடர் தாக்குதல் கடந்த 7 ஆம் திகதி இரவு கடலில் மீன்பிடிக்கச்சென்ற நாகப்பட்டினம் மாவட்டம், வெல்லப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த செல்லப்பன் என்ற மீனவர், இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என்ற செய்தி கிடைத்துள்ளது.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதும், கடத்தப்படுவதும், கொல்லப்படுவதும் தொடர்கதையாகி வருகின்றன.

இதுகுறித்து தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு பல முறை கடிதங்கள் மூலமாகவும் முதல்வர் கருணாநிதி மூலமாகவும் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும், இந்தக் கொடுமைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இத்தகைய நடவடிக்கையை தி.மு.க. மீனவர் அணியின் சார்பில் கண்டிப்பதோடு, மத்திய அரசு இனியாவது துரித நடவடிக்கையை கடுமையாக் எடுத்து தமிழக மீனவர்களைக் காப்பாற்ற வேண்டும். இந்தக் கோரிக்கையை முன்வைத்து இன்று (சனிக்கிழமை) காலை 10 மணியளவில் இலங்கைத் தூதரகத்தின் முன்னால் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்துவதென்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியான தமிழக மீனவர் செல்லப்பனின் குடும்பத்துக்கு ரூபா 3 லட்சம் நிவாரண நிதி வழங்கப்படும் என தமிழக அரசு வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

# சீக்கியரின் மயிருக்கு இருக்கும் மதிப்புக்கூட தமிழ் மீனவரின் உயிருக்கு இல்லையா?

## சீமான் ஆவேசக் கேள்வி

சென்னை,ஜூலை10

சீக்கியரின் உரோமப் பிரச்சினைக்காக வாதாடிய பிரதமர் மன்மோகன் சிங், தமிழரின் உயிருக்கு என்றாவது மதிப்புக் கொடுத்துள்ளாரா?. சீக்கியரின் மயிருக்கு இருக்கும் மதிப்புக் கூட தமிழ் மீனவனின் உயிருக்கு இல்லையா?

- இவ்வாறு ஆவேசமாகக் கேட்டுள்ளார் 'நாம் தமிழர்' இயக்கத் தலைவர் சீமான்.

இதுதொடர்பாக சீமான் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரைக்கு தென் கிழக்கே கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த வேதாரண்யம் பகுதி மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் புதன்கிழமை இரவு தாக்குதல் நடத்தியதில் தமிழ் மீனவர் செல்லப்பன் உயிரிழந்துள்ளார். இதுபோக மற்ற மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கடும் தாக்குதல் நடத்தியதுடன் அவர்களை மிகவும் இழிவாக நடத்தியுமுள்ளனர்.

தமிழக மீனவர்கள் இந்தியக் கடற் பகுதிக்குள் கூட மீன்பிடிக்க முடியாத அளவுக்கு இலங்கைக் கடற்படையின் அத்துமீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தபடி உள்ளன. இந்த முறையாவது நாம் இவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டும். இந்த நிலைக்குக் காரணம் மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி, அதிகாரத்தில் இருப்பவர்களின் கையாலகாத்தனம்தான்.

இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட இந்தியர்களான தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்கு இதுவரை ஓர் உயிருக்குக் கூட இந்திய அரசின் சார்பில் நிதியுதவியோ அல்லது வேறு வகையான உதவிகளோ செய்யப்படவில்லை. குறைந்தபட்சம் ஆறுதல் கூட தெரிவிக்கப்பட்டதில்லை. இதுகுறித்து இதுவரை இந்தியத் தூதரகம் பெயரளவுக்குக் கூட இலங்கையிடம் ஒரு கண்டனம் தெரிவிக்கவில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் டில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னால் இன உணர்வாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தால் அங்குள்ள பூத்தொட்டி உடைந்தவுடன் பதைபதைத்து தன் கவலையை இலங்கைக்குத் தெரிவித்து, உடனடியாக விசாரணையை முடுக்கிய மத்திய அரசு இதுவரை பலியான 500 இற்கும் மேற்பட்ட தமிழ் மீனவருக்கு என்ன செய்திருக்கிறது?

பிரான்ஸில் சீக்கியரின் மயிர்ப் பிரச்சினைக்காக விமானம் ஏறிச்சென்று வாதாடிய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தினசரி கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மீனவரின் உயிர் குறித்து என்றாவது அக்கறை காட்டியிருக்கின்றாரா?

சீக்கியரின் மயிருக்கு இருக்கும் மதிப்பு கூட தமிழ் மீனவனின் உயிருக்கு இல்லையா? இதுதான் இந்திய ஒருமைப்பாட்டின் லட்சணமா?

இந்தியாவின் கிழக்குக் கடற்படை கொமாண்டர் ராஜசேகர் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில், இலங்கைக் கடற்படையினர் இந்தியாவில் எங்களை மீறி நுழைய வாய்ப்பில்லை என்று சொல்லியிருக்கின்றார். அப்படியானால் அவர்களுக்குத் தெரிந்துதான் இத்தகைய சம்பவங்கள் நடக்கின்றனவா?.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரே நாளில் 75 தீர்ப்புக்களை வழங்கி உச்சநீதிமன்ற நீதிபதி உலக சாதனை

டில்லி, ஜூலை 10

உச்ச நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 75 தீர்ப்புகளை வழங்கி நீதிபதி சுதந்திரகுமார் உலக சாதனை படைத்துள்ளார்.

மும்பை உயர்நீதிமன்றில் தலைமை நீதிபதியாக இருந்து உச்ச நீதிமன்ற நீதிபதியானவர் சுதந்திரகுமார். இவர், மும்பை உயர்நீதிமன்றில் பணியாற்றிய போது, ஒரே நாளில் 80இற்கும் அதிகமான தீர்ப்புகளை கூறி ஏற்கனவே சாதனை படைத்துள்ளார்.

உச்ச நீதிமன்ற நீதிபதியான பின்பும் இந்தச் சாதனையை அவர் தொடர்ந்துள்ளார். நேற்றுமுன்தினம் இவரிடம் 77 வழக்குகள் வந்தன. இதில், 75 வழக்குகளில் தீர்ப்புக் கூறி உலக சாதனை படைத்துள்ளார்.

விரைவில் இந்த சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற உள்ளது.

## இந்தியச் செய்திகள்

# இலங்கைப் படையின் படகுகள் எளிதில் இந்தியக் கடல் எல்லைக்குள் வர முடியாது

## கிழக்குக் கடலோரப் படை கொமாண்டர் தெரிவிப்பு



சென்னை,ஜூலை10

நாகை மீனவர் கொலைச் சம்பவம் பற்றி எனக்கு இன்னும் தகவல் வரவில்லை. இலங்கைக் கடற்படைப் படகுகள் அவ்வளவு எளிதாக இந்தியக் கடல் எல்லைக்குள் வரமுடியாது - என்று கிழக்குப் பிராந்தியக் கடலோரக் காவல்படை ஐ.ஜி. கொமாண்டர் ஏ.ராஜசேகர் கூறினார்.

கிழக்குப் பிராந்தியக் கடலோரக் காவல்படையின் மாவட்ட கொமாண்டர்களின் கருத்தரங்கு ஐ.ஜி. கொமாண்டர் ஏ.ராஜசேகர் தலை மையில் நடந்தது. இதில் மாவட்ட கொமாண்டர்கள், கப்பல்களின் கொமாண்டிங் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

பின்னர் கடலோரக் காவல்படை கிழக்குப் பிராந்திய ஐ.ஜி.கொமாண்டர் ஏ.ராஜசேகர் செய்தியாளர்களின் கேள்விக்கு அளித்த பதில் வருமாறு -

கேள்வி - வேதாரண்யம் அருகே நேற்றுமுன்தினம் தமிழக மீனவர் ஒருவர் இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்டு இறந்துள்ளார். இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற னவே?

பதில் - இந்தச் சம்பவம் பற்றி எனக்கு இன்னும் தகவல் வரவில்லை. இலங்கைக் கடற்படைப் படகுகளோ, இலங்கை மீனவர்களின் படகுகளோ அவ்வளவு எளிதாக இந்தியக் கடல் எல்லைக்குள் வரமுடியாது. இந்தியக் கப்பல்கள் எல்லையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. அதேபோல நமது மீனவர்களும் இந்திய எல்லையைத் தாண்டிச் செல்லக் கூடாது என்று பலமுறை எச்சரிக்கை செய்திருக்கிறோம். அதையும் மீறி சிலர் எல்லையைத் தாண்டிச் செல்வதும் தொடர்ந்து நடந்து வருகிறது. இந்தியக் கடல் எல்லையில் ஏதாவது தாக்குதல் நடந்தால் இது பற்றி ரோந்துக் கப்பல்களுக்கு தகவல் தெரிவிக்கலாம்.

கடந்த 4 மாதங்களாக இந்திய கடல் எல்லைக்குள் இலங்கைக் கடற்படையினராலோ, இலங்கை மீனவர்களாலோ தாக்குதல் சம்பவம் நடந்ததாக எந்த முறைப்பாடும் இல்லை. ஆனாலும் நாங்கள் தொடர்ந்து கண்காணிப்புடன்தான் இருக்கிறோம். இந்திய மீனவர்களும் கடல் எல்லையைத் தாண்டாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

- இப்படி அவர் கூறினார்.

# அறிவித்தல்

## வலி.கிழக்குப் பிரதேச சபை உப அலுவலகம் உரும்பிராய்

**ஆதனப் பெயர் மாற்றம்: வட்டாரம் 04 சிவகுல வீதி ஆதன இல.16/10, 16/10A**

ஆதன இலக்கம் 16/10, 16/10A, சிவகுல வீதி 04 ஆம் வட்டாரத்தில் வைரவப்பிள்ளை ஆறுமுகம் எனும் பெயரிலுள்ள ஆதனத்திற்கு, இராசரத்தினம் இராசதுரை என்பவர் குறித்த ஆதனம் தமக்கு உரிமையானது என உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆதன வரிப் பதிவேட்டில் தனது பெயரை மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் எவரேனும் இருப்பின் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து இராசரத்தினம் இராசதுரை என்னும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

த.நடராசா
செயலாளர்,
வலி.கிழக்குப் பிரதேச சபை,புத்தூர்.
(சி/569048)

# கண்ணீர் அஞ்சலி

நீண்டநெடுங் காலமாக யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்துடன் தன்னை அர்ப்பணித்து அரும்பணியாற்றிய பிரபல ஆர்மோனிய வித்துவான்

**சி. கேசவராஜா**

*(பிரபல ஆர்மோனிய வித்துவான்)*

அவர்கள் 08.07.2010 இல் காலமான செய்தியறிந்து மிகவும் துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம்.
(100470)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி வலய முகாமைத்துவ உதவியாளர் இ.இராகவன் அவர்களின் அன்பு மாமியார்

**பாக்கியலட்சுமி நடராசா**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பதாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள், வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.
(100473)

# மரண அறிவித்தல்

## திருமதி அப்புத்துரை தங்கரத்தினம்



கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி அப்புத்துரை தங்கரத்தினம் நேற்று (09.07.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் மனைவியும் கமலாம்பிகை, சந்திரசேகரன், ஞானசேகரன் (சுவிஸ்), பரமேஸ்வரி, காலஞ்சென்ற சண்முகதாஸ் ஆகியோரின் தாயும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் வள்ளியம்மை, தம்பித்துரை, தெய்வேந்திரம், தருமராஜா ஆகியோரின் சகோதரியும் ராஜ்குமார் (நோர்வே), ராஜினி (டென்மார்க்), தர்சினி (சுவிஸ்), ர.காயத்திரி, கஜீவா, நிலாணி, நிஷானி, நிரோசன், மதுஷா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் கஸ்தூரி, மிதுசன், வைஸ்ணவி, ச.துஷிகா, ஜஸ்மிகா, சார்மிகா, சாமிகன், ஜதுசன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2010) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.சி.ரி.எம் பாடசாலை வீதி,
கொக்குவில் மேற்கு.
(100484)
தகவல்:
குடும்பத்தினர்.


## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் 2½ பரப்புக் காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அருகில். தொடர்பு: 0777111400

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிகோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் 450/=. வியாபாரிகளுக்குக் கழிவு வழங்கப்படும்.

விஜயகுமார்,
குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.

## Piano/Violin Notes

Organ,Guitar, வயலின், புல்லாங்குழல், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான 310 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ,Guitar, புல்லாங்குழல் பயிற்சி வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. Karaveena Isai Manram
75, Temple Raod, Nallur T.P: No 0777031293

## திருமண சேவை

B.A, M.A,B.Com, B.Sc, M.Sc பட்டதாரிகள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், மற்றும் தனியார் துறையினர் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பலரது ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. உங்கள் தெரிவுக்கு நேரில் சந்தியுங்கள்.

த.சிவானந்தன்(பிரபல சோதிடர்)
100,அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரி முன்பாக)
தொ.பே. 0778996281

## VIKNA TRAVELS & TOURS

யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் வரைக்கும் சென்று வர விசேட பஸ் சேவை செய்யப்பட்டுள்ளது. செல்ல விரும்புபவர்கள் தமது ஆசனப்பதிவுகளை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ள...... தொடர்பு:
Ruban Game Park&Net Cafe
மனோகரா தியேட்டர் சந்தி,
K.K.S வீதி, யாழ்ப்பாணம்.





T.P:0776703359
0774469327


## மயிலிட்டி முகாம் சிப்பாய் மரணம்

யாழ்ப்பாணம் ஜூலை10

மயிலிட்டி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மயிலிட்டி இராணுவ முகாமில் கடமையில் ஈடுபட்டு வந்த ஆ.எம். டி.என். ரட்நாயக்கா (வயது-19) என்பவரே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலத்தை காங்கேசன் துறைப் பொலிஸார் பொறுப்பேற்றுப் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

(ஓ-16-78)

# மானிப்பாய் கோவில்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பப்படிவத்தினை 25 ரூபா செலுத்தி கடமைநேரத்தில் மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை 'தலைவர், மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பொன்னாலை வீதி, மானிப்பாய்' என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி - *25.07.2010*
கணக்காளர்- *104:10*
சம்பள அளவுத்திட்டம்-*10700-13200*
*120 X10-130 X 10 (கூ.வே. ஆணைக்குழு சுற்றுநிருபம் இல.66/2006 இன்படி)*

தகைமைகள்

(அ) கூட்டுறவுப்பணியாளரின் 11ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கு அல்லது உட்துறை கணக்காய்வு லிகிதர் பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளரின் 12 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது உட்துறை கணக்காய்வாளர் அல்லது கணக்கு லிகிதர் பதவியில் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியும் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத்துறையிலான 02 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு பணியாளர் உயர்தரம்/க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியல் பாடத்திலான சித்தி அடங்கலாக 03 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை 04 வருடத்திற்கு குறையாத கணக்கியல் தொடர்பான அனுபவம்.

வயதெல்லை- *18-45 (சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது).*

நிபந்தனைகள்


(அ) நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் நிறுவனத்தின் ஊடாக சிபாரிசு செய்து விண்ணப்பிக்க வேண்டும் .

(ஆ) விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதியும் இணைக்கப்படல் வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பப்படிவங்களும் சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

(இ) மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தால் விதிக்கப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.

தலைவர், மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்.
(சி/569049)

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை கேசவராஜா

**(அரங்கிசைத் திலகம், கலைஞானச்சுடர் ஹார்மோனிய வித்துவான்)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அரங்கிசைத் திலகம், கலைஞானச்சுடர் ஹார்மோனிய வித்துவான் சின்னத்துரை கேசவராஜா நேற்றுமுன்தினம் (08.07.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகமுத்து சின்னத்துரை - காலஞ்சென்ற இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் சோதிமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தவனேஸ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், தீவகக் கல்வி வலயம்), மகிமா, ராஜீவ் ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலகலாரதன், தாரணி ஆகியோரின் அன்பு மாமனும் தனுசன், ஆகாஸ், கரிஸ், அபிகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று( 10.07.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல. 125, கனகரத்தினம் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

125, கனகரத்தினம் வீதி,
அரியாலை.
(100431)
தகவல்:
குடும்பத்தினர்.


September Exam

## College of Business Management (CBM)

33, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

CBF → Accounts, Management, Marketing, Financial Enviornment, Economics, Managing Information.

DBF → Accounting, Management,Monetary, Marketing, Lending, International Trade, Risk Management, Managing Information

ஆகிய பாடங்கள் நடைபெறுகின்றன. இயக்குநர் N.Umakanth

# யாழ்.மாநகரத்தை அபிவிருத்தி செய்யும் 20 வருடத் திட்டம் நேற்று அங்குரார்ப்பணம்

## ரூபா 37,890 பில்லியன் செலவிடப்படும் என அறிவிப்பு



யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அடுத்த 20 வருடங்களில் அபிவிருத்திகளை முன்னெடுக்க 37,890 பில்லியன் ரூபா பெறுமதியான திட்டங்கள் இனங்காணப் பட்டுள்ளன. இத்திட்டங்கள் மூன்று கட்டங்களாக நடைமுறைப் படுத்தப்படும்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் எஸ்.இந்திரசிறி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாநகர அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்று மாநகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இப்படிக் கூறினார்.

மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

,பணிப்பாளர் இந்திரசிறியினால் வெளியிடப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச யாழ்.மாநகர அபிவிருத்தி தொடர்பான திட்டங்களின் பிரகாரம் இந்த ஆண்டிலிருந்து அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் குறுகிய காலத்திட்டத்தின் கீழ் 12,430 பில்லியன் ரூபாவும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நடுத்தரக் காலத்திட்டத்தின் கீழ் 11,040 பில்லியன் ரூபாவும் இறுதியாக அடுத்த பத்து ஆண்டுகளுக்கு 14,420 பில்லியன் ரூபாவும் செலவு செய்து இத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படவுள்ளன.

இங்கு அறிவிக்கப்பட்ட உத்தேச முக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் வருமாறு:-

* துரையப்பா விளையாட்டரங்க அபிவிருத்திப் பணிகள்.
* கலாசார மண்டப அமைப்பு வேலை.
* யாழ்.ஆஸ்பத்திரி அபிவிருத்திப் பணிகள்.
* கல்லுண்டாய் வெளியில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைத்தல்.
* ஆளுநர் அலுவலகம், வாசஸ்தலம் என்பன அமைத்தல்.
* யாழ்.ரயில் நிலைய புனர்நிர்மாணம்.
* யாழ்.பஸ் நிலையம், பொதுச்சந்தை என்பனவற்றிற்கான அபிவிருத்திப் பணிகள்.
* சிறைச்சாலை அபிவிருத்தி.
* நாவாந்துறையில் வருமானம் குறைந்த மக்களுக்கான வீட்டுத்திட்டம் மற்றும் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைத்தல்.
* வண்ணான்குளம் அபிவிருத்தி.
* புல்லுக்குளத்தின் அபிவிருத்தி.
* நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டடம், விடுதி ஆகியன அமைத்தல்.
* அரியாலை சந்தைப் புனரமைப்பு வேலைகள்.
* 24 மணித்தியாலம் தண்ணீர் வழங்கும் சேவை.
* திண்மக் கழிவுகளை ஒழுங்காக அகற்றுதல்
* கழிவுநீர் பராமரிப்பு
* புதிய குடியிருப்புக்கள் அமைத்தல் மற்றும் சாட்டி கடற்கரையை அபிவிருத்தி செய்தல் என்பன முக்கியமானவை.

மேலும் 1981ஆம் ஆண்டு வரை இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்கிய யாழ்ப்பாணம் உலகத்தரம் வாய்ந்த நகரமாக அபிவிருத்தி செய்யப்படும் என்ற தகவலும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், பொலிஸ் உயர் அதிகாரிகள், மாநகரசபை உறுப்பினர்கள், திணைக்கள உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஒ-க)

# யாழ்.சிறைச்சாலையில் கைதிகளை டியூ குணசேகர பார்வையிடுவார்

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சரும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளருமான டியூ குணசேகர இன்று விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகிறார்.

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும் நடமாடும் சேவையில் கலந்து கொள்ளும் அமைச்சர் மதியம் ஒரு மணிக்கு சிறைச்சாலை ஆணையாளர் சகிதம் யாழ் சிறைச்சாலைக்கு விஜயம் செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் நிலைமை தொடர்பாகவும் அவர் ஆராயவுள்ளார்.

இதேவேளை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 67ஆவது ஆண்டு கூட்டம் யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வின் பிரதான சொற்பொழிவாளராகவும் அமைச்சர் கலந்து கொள்வார். (50-14)

# அமைச்சர் பதவியைத் துறப்பதாக ஜனாதிபதிக்கு வீரவன்ஸ கடிதம்

## ஆனால் அதனை ஏற்க ஜனாதிபதி மறுத்துவிட்டாராம்

கொழும்பு,ஜூலை 10

அமைச்சுப் பதவியை இராஜிநாமா செய்வதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்தை ஜனாதிபதி ஏற்க மறுத்துவிட்டார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் செயற்குழு உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று மாலை கொழும்பு ஐ.நா. அலுவலகத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள உண்ணாவிரத மேடையில் நடைபெற்றது.

இந்த செய்தியாளர் சந்திப்பில் ஜயந்த சமரவீரவுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.முஸம்மிலும் கருத்துத் தெரிவித்தார். அமைச்சர் விமல் வீரவன்ஸ சோர்ந்து போன நிலையில் மேடையில் இருந்தார்.

முஸம்மில் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக தமக்கு ஆலோசனை வழங்க ஐ.நா. செயலாளர் பான் கீ-மூன் நிபுணர் குழு அமைத்ததற்கு எதிராக நாம் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு சர்வதேசம் ஆதரவு வழங்கவேண்டும் - என்றார். (ஒ-சி)

# சர்வதேச நிறுவனங்களிடம் அதிக வட்டிக்கு அரசு கடன்பெற்றதாலேயே பிரபாவைக் கொல்ல முடிந்தது

## நாடாளுமன்றில் கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு,ஜூலை10

சர்வதேச நிதி நிறுவனங்களிடம் இருந்து அதிக வட்டிக்குக் கடன் பெற்றமையாலேயே பிரபாகரனைக் கொல்ல முடிந்ததோடு புலிகளின் பிடியில் இருந்த அதிக நிலப்பரப்புகளையும் கைப்பற்ற முடிந்தது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டை எந்த அரசு ஆட்சி செய்தாலும் இந்த நாட்டு மக்களிடம் வரியைப் பெற்றுக்கொண்டே ஆட்சி நடத்தும். அந்த வரியில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே நாட்டில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது.

அரச ஊழியர்களுக்கான 2,500 ரூபா சம்பள அதிகரிப்பை அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் சேர்ப்பதா இல்லையா என்று பின்னர் சிந்திப்போம். நாம் மக்கள் நலனை முன்நிறுத்தியே நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை அதிகரித்துள்ளது என்று எதிர்க்கட்சி குற்றம் சாட்டுகிறது. எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் துண்டு விழும் தொகையைத் தடுக்க முடியாது.

யுத்தத்தை வெற்றிகொள்வதற்காக சர்வதேச நிதி நிறுவனங்களிடம் இருந்து வட்டிக்காகக் கடன் பெற்றோம். அந்தக் கடன் பணத்தைக் கொண்டு ஆயுதங்களை வாங்கியே பிரபாகரனைக் கொலைசெய்தோம். அதிக நிலப்பரப்புகளைக் கைப்பற்றினோம். - என்றார். (ஒ-சி)


## நன்றி நவிலல்

### அமரர் செல்வரட்ணம் சண்முகநாதன்

கடந்த 08.06.2010 இறைபதம் அடைந்த செ.சண்முகநாதனின் 08.07.2010 அன்று நடைபெற்ற 31ஆம் நாள் நினைவஞ்சலியில் எமது துயரத்தில் பங்குபற்றி ஆறுதல் அளித்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் யாழ்ப்பாணம், கொடிகாமம், பளை அஞ்சலக ஊழியர்கள் அனைவருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் குறிப்பாக இடம்பெயர்ந்த சூழ்நிலையிலும் எழுதுமட்டுவாள் மக்கள் எமது துயரத்தில் பங்குபற்றி ஆறுதல் அளித்தமைக்கு எமது இதய பூர்வமான நன்றிகளை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இல.18, கடற்கரை வீதி,*
*ஈச்சமோட்டை,*
*யாழ்ப்பாணம்.* (100487)

தகவல்:
பெ.ஜெயபாலசிங்கம்( ஜெயம்)
அஞ்சலர், எழுதுமட்டுவாள்.

24 மணி நேர வைத்திய சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்
குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளைக் கொண்ட

New MediCare Hospital

## நியூ மெடி கெயர் மருத்துவமனை
## New Medi Care Hospital

இல. 32, கச்சாய் வீதி, சாவகச்சேரி. தொ.பே 0213734505, 0214920949
(நகரப் பகுதியின் அண்மையில் அமைந்துள்ளது)

எம்மிடம்...

★ வெளிநோயாளர் பிரிவு - 24 மணி நேரமும்... உள்நோயாளர் பிரிவு
★ முன்பதிவுகள் மூலம் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
★ பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 4.30 மணிக்கு சத்திர சிகிச்சை நிபுணர் Dr.S.ரவிராஜ்(VS) அவர்களிடமும்
★ பிரதி சனிக்கிழமைகளில் Dr.Mrs.N. நாகேந்திரா அவர்களிடமும் (பொது வைத்தியர்)
★ பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிக்கு மகப்பேற்று பெண் நோயியல் நிபுணர் Dr.K.சுரேஸ்குமார்(VOG) அவர்களிடமும்
★ பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 3 மணிக்கு இருதய சிகிச்சை நிபுணர் Dr.N.குருபரன் அவர்களிடமும்
★ ஒன்றுவிட்ட ஞாயிற்றுக்கிழமைகளில் பொது வைத்திய நிபுணர் Dr.S.கேதீஸ்வரன் பி.ப. 3 மணிக்கு நோயாளர்களைப் பார்வையிடுவார்.
★ சகல விதமான பற்சிகிச்சைகளும் பல் பிடுங்குதல், கட்டுதல், அடைத்தல், கிளிப் போடுதல் பல் வைத்தியர் Dr.T.ஜெம்லற் திங்கட்கிழமை பி.ப. 4.00-6.00 மணிவரை நோயாளரைப் பார்வையிடுவார்.
★ அதிநவீன கணனிமயப்படுத்தப்பட்ட சாதனங்கள் மூலம் இரத்த, சலப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
★ நவீன கருவிகள் மூலம் ஸ்கானிங், E.C.G வசதிகள்


## மரண அறிவித்தல்கள்

### சம்பந்தக்குருக்கள் சட்டநாதக்குருக்கள்

(பிரதம குரு, கருணையம்பதி மூத்த விநாயகர் ஆலயம் )

கரணவாயைச் சேர்ந்த சம்பந்தக்குருக்கள் சட்டநாதக் குருக்கள் நேற்று (09.07.2010) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சம்பந்தக்குருக்கள் - மங்களேஸ்வரி அம்மாவின் ஏகபுதல்வனும் காலஞ்சென்றவர்களான வேதராணிக் குருக்கள் - சுந்தரவள்ளியம்மா தம்பதியரின் மருமகனும் யோகாம்பிகை அம்மாவின் அன்புக் கணவரும் கலாராணி, மங்களராணி (முகாமைத்துவ உதவியாளர், இலங்கை முதலீட்டுச் சபை), சுந்தரராணி (அலுவலகப் பதிவாளர், ஊற்று நிறுவனம்), யோகசம்பந்தக் குருக்கள் (ஆசிரியர்), காலஞ்சென்ற அகலியா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2010) சனிக்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கிராய் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குருக்கள் பகுதி,*
*கரணவாய் கிழக்கு.* (100488)

தகவல்:
யோகசம்பந்தக் குருக்கள்
(மகன்).

### திருமதி குமாரலிங்கம் செல்லம்மா



இணுவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரலிங்கம் செல்லம்மா நேற்று (09.07.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - தங்கம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற குமாரலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கு.இரகுநாதன் மற்றும் கு.ஜோதிநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சு.நல்லையா, இ.யோகம்மா, சு.சண்முகராசா மற்றும் ச.கணேஸ்வரி, ஜெ.ஞானேஸ்வரி, செ.இரத்தினேஸ்வரி, அ.தம்பிநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி இ.சுபத்திராதேவி, திருமதி ஜோ.விஜியதர்ஷினி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் இ.பேரெழில்குமார், இ.பிரதீப்குமார், இ.பாலகுமார் (பிரான்ஸ்), இ.திவ்வியா, இ.சசிகுமார் (கொக்குவில் இந்துக் கல்லூரி-உயர்தரம்), ஜோ.லகரி (லண்டன்), ஜோ.பத்மாசனன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பே.அபிநயா, பே. அட்சயன், பி.லக்ஷன், பி.சேநகன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (10.07.2010) சனிக்கிழமை விளாத்தியடி ஒழுங்கை உரும்பிராய் என்னும் முகவரியில் நடைபெற்றுப் பூதவுடல் மாலை 4 மணிக்கு பூவோடை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளாத்தியடி ஒழுங்கை,*
*உரும்பிராய்.*

தகவல் :
குமாரலிங்கம் ஜோதிநாதன்
(மகன்),
குடும்பத்தினர்.

# ஐ.நாவுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண்பதே சுதந்திரக்கட்சியின் நோக்கம் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஜூலை 10

ஐக்கிய நாடுகள் சபை தொடர்பான விடயங்களில் பேச்சுகள் மூலம் தீர்வு காண்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாகும். இருந்தும் ஒவ்வொரு கட்சியும் ஜனநாயக முறையிலான அணுகு முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. அது அவர்களது நிலைப்பாடாகும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரி வித்தார்.

கொழும்பு டார்லி வீதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் இச்செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தனர்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கையின் யுத்தக் குற்றம் தொடர்பாக தமக்கு ஆலோசனை வழங்க நிபுணர் குழு நியமித்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வன்மையாக எதிர்க்கின்றது.

இந்த நடவடிக்கை குறித்து பேச்சு நடத்தி சுமுகமாக பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதே ஸ்ரீ.ல.சு.கட்சியின் நிலைப்பாடாகும்.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஒ-சி)

# கே.பியின் 18 கப்பல்களுக்கும் சொத்துகளுக்கும் என்ன நடந்தன?

## சபையில் ரணில் விக்கிரமசிங்க கேள்வி

கொழும்பு, ஜூலை 10

விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனின் (கே.பி) 18 கப்பல்களுக்கும் ஏனைய சொத்துக்களுக்கும் என்ன நடந்தன - என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

கே.பியின் கப்பல்கள் மற்றும் ஏனைய சொத்துகள் தொடர்பான தகவல்களை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும்.

கே.பிக்குச் சொந்தமாக 18 கப்பல்களும் 500 பெற்றோல் நிலையங்களும் இருந்தன. தற்போது அவற்றுக்கு என்ன நடந்தன என்பதை நாம் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

மேற்படி சொத்துகளை அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்குப் பயன்படுத்த முடியும் என்று ரணில் கூறினார்.

# பொலிஸ் பதிவு நடைமுறை நாட்டின் சகல பகுதிகளுக்கும் பொருந்தும் என விளக்கம்

கொழும்பு, ஜூலை 10

வெளியிடங்களில் இருந்து வந்து தங்கியிருப்பவர்களும், பொலிஸ் நிலையங்களில் தமது பெயரைப் பதிவு செய்யாதவர்களும் மற்றும் இருந்த இடத்தை விட்டு வேறு இடத்துக்கு மாறியிருப்பவர்களும் குறிப்பிட்ட காலத்துக்குள் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யவேண்டும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கொழும்புக்கு மாத்திரம் இந்த நடைமுறை மட்டுப்படுத்தப்படவில்லை. நாடு முழுவதற்கும்இது பொருந்தும் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி நேற்று விளக்கமளித்தார்.

இந்தப் பதிவு நடவடிக்கை பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ் இடம்பெறுகின்றது எனவும் அவர் கூறினார்.

## ஐ.நா அலுவலகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், கொழும்பில் இயங்கும் வெளிநாடுகளின் தூதுவர்களை நாளை மறுதினம் திங்கட் கிழமை சந்தித்து மேற்படி விவகாரம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த முன்வந் துள்ளதை வரவேற்கின்றோம் - என்று வெளிநாட்டுத் தூதுவர்கள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நிபுணர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பாதுகாப்பு ஊடக மையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹூலுகல்ல தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவினால் வெளியிடப்பட்ட வெள்ளைக்கொடிச் சம்பவத்தின் காரணமாகவே, ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் நிபுணர்கள் குழுவை நியமித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம்களின் கோரிக்கைகளும் அரசமைப்பில் உள்ளடக் கப்பட வேண்டும்.

குறிப்பாகத் தேர்தல் முறைமை திருத்தப்படும் போது சிறுபான்மை இனம் அதனால் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது.

நிரந்தர அரசியல் தீர்வொன்று எட்டப்படும் போது முஸ்லிம்களின் நலன் அதில் உள்வாங்கப்பட வேண்டும். அவர்கள் பாதிக்கப்படாதவாறே தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியா சென்று வடக்கு - கிழக்கை மீண்டும் இணைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இந்திய அரசிடம் கோரிக்கை விடுக்கின்றது. இதை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்காது.

**கூட்டமைப்பின் இரட்டை நிலைப்பாடு**

இந்தியாவில் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்துவிட்டு இங்கு வந்து முஸ்லிம்களுடன் பேசவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்றது.

கூட்டமைப்பின் இந்த இரட்டை நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் ஏற்காது.

வடக்கு - கிழக்கை மீண்டும் இணைக்குமாறு கோரிக்கை விடுக்கும் உரிமை கூட்டமைப்புக்கு இல்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீள் இணைப்புக்கான நடவடிக்கையை மேற்கொள்வார் என்று நாம் நம்பவில்லை.

1987இல் செய்துகொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூட முஸ்லிம்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டன. அவர்களுக்குத் தெரியாமலேயே அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்ய முற்பட்ட போது கூட அதை நாம் எதிர்த்தோம். அது முஸ்லிம்களைப் பாதிக்கும் என்றோம். எமது கோரிக்கையையும் மீறி ஒப்பந்தம் செய்ததால் நாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டோம். ஆகவே, முஸ்லிம் சமூகத்துடன் பேசியே எந்த நடவ டிக்கையும் எடுக்கப்பட வேண்டும். - என்றார். (ஒ-சி)

## ஐ.நாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர்கள் ஆலோசனைகளுக் காக அவரவர் நாடுகளால் அழைக்கப்படுவதுண்டு. அதுபோன்ற ஒன்றே இதுவும்.

ஐ.நா. அதன் பணிகளை இடைநிறுத்தவில்லை. அதன் பிராந்திய அலுவலகத்தில் ஒன்றையே அது மூடியிருக்கின்றது.

ஐ.நா. கொழும்பு அலுவலகத்தைப் பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பாக நீல் புஹூனேக்கு நன்கு தெரியும்.

இருப்பினும் ஐ.நா. செயலாளர் நாயகம் அவசரப்பட்டுவிட்டார். இது தொடர்பாக அரசு கவலையடைகின்றது.

இந்தப் பிரச்சினை தொடர்பாகப் பேச்சுகளை நடத்தி இந்த வார இறுதிக்குள் தீர்வு ஒன்றைக் காணமுடியும் என்று நாம் நம்புகிறோம். - என்றார். (அ-சி)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கையான மக்கள் கூடி நின்றனர்.

இதேவேளை, ஒலிபெருக்கி மூலம் விமல் வீரவன்ஸவின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் பேச்சுகளும் அறிவிப்புகளும் ஒலிபரப்பப்படுகின்றன.

ஐ.நா. அலுவலகத்துக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மூன்றாவது நாளாக நடைபெறும் எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து பலர் வந்த வண்ணம் உள்ளனர். பொலிஸாரும் பெரும் எண்ணிக்கையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்க ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நியமித்த நிபுணர் குழுவை கலைக்கும்வரை உண்ணாவிரதம் தொடரும் என விமல் வீரவன்ஸ எம்.பி. அறிவித்திருந்தது தெரிந்ததே. (ஒ-சி)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய பின்னர் நேற்றிரவு கொழும்பு திரும்பியது.

இந்திய அமைச்சர்கள், அரச அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக கூட்டமைப்பினர் இன்று விவரமான அறிக்கை ஒன்றை வெளியிடுவர்.

பிரதமர் மன்மோகன்சிங் உட்பட பல்வேறு தரப்பினருடனும் நடத்திய பேச்சுக்கள் முன்னேற்றகரமானதாக அமைந்திருந்தது; நம்பிக்கை தரக்கூடியவகையில் அமைந்திருந்தது.

தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய வகையில் அரச தரப்பினருடன் நடத்திய பேச்சுக்கள் அமைந்திருந்தன என்பதை தமிழ்மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம் - என்றார் மாவை சேனாதிராசா. (அ-1)


## ஐடியல் அக்கடமி

| | | | |
|---|---|---|---|
| சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய். | இடைப்பிட்டி, காரைநகர். | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | அந்தோனியார் கோயிலடி, மானிப்பாய். |

எமது நான்கு கல்வி நிறுவனங்களிலும் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு இரண்டாம் தவணைப் பரீட்சைகள் யாவும் ஆரம்பிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

குறிப்பு :- எமது வினாத்தாள்களைப் பெறவிரும்பும் மாணவர்கள், தனியார் நிறுவனங்கள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் குடாநாட்டில் உள்ள அனைத்துப் புத்தக சாலைகளிலும், எமது 4 நிறுவனங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகி.

## வெளிவந்துவிட்டது

O/L பொதுச இலகு விடைவினா
M.Y.K.D ஆரியதாச

சிங்கள மொழிபெயர்ப்பு மாதிரி வினா விடைகள் தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு- மொத்தம் 55 வினாப்பத்திரங்கள் சுயமாகவே தன்னை தயார்ப்படுத்தும் வகையில் புள்ளித்திட்டம், விடைத்தாள், வரைபுத்தாள், பல்தேர்வு விடைகள் ஆகியன உள்ளடங்கியது.

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம் - 2229881 சாவகச்சேரி - 2270003

## கற்கும் வெளியீடு

தரம் 1, 2, 3, 4, 5 மாணவர்களுக்குரிய
ஜூன் - ஜூலை மாத இதழ்கள்

அம்மா அன்னை தாய் அறிவு தேடல்

வெளிவந்துவிட்டன

தரம் 1 - 5 மாணவர்களுக்குரிய Easyway வரவு கணிதம் + நுண்ணறிவு வினாத்தாள்களையும் கேட்டு வாங்குங்கள்
"உங்கள் பிள்ளைகளின் ஆற்றலை மேம்படுத்தும்"

கற்கும், நாவலர் வீதி, யாழ். 0718474325

## வரவேற்பாளர் தேவை

கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள எமது கணனி நிறுவனத்துக்கு கவர்ச்சியாக வாடிக்கையாளருடன் உரையாடக்கூடிய 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட பெண் ஒருவர் வரவேற்பாளராக நியமிக்கப்படவுள்ளார். நீங்கள் அவ்வாறானவராயிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியிருப்பின் 5 நாள்களுக்குள் அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் சுயவிவரத்தை STP Computer World (pvt) Ltd P.O.Box 158, Jaffna எனும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கவும்.

## 100% Discount

CIMA UK




Call 772395895

CIMA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையம் (Listed College), பரீட்சை நிலையம்
MCS இல் CIMA அனைத்து கற்கை பிரிவுகளும்.
எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய மாதிரிப்பரீட்சைகள்


MCS Job Gurantee Skill Migration, Australia,Canda,UK
*Free Courses - ICDL, Diploma in English (Duration 02-06 Months)
Supported By UNDP/JRRP
324, பல்கலைக்கழக சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**
**(Centre for International language Studies)**
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
குறிப்பு: ஒக்ரோபர் மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

## விற்பனைக்கு



1408 முட்டைகளுடன் அடைகாக்கும் மின் இயந்திரம் விற்பனைக்காக உள்ளது.

399,900/-

* இரண்டு வருட உத்தரவாதம்
* கடன் அடிப்படையில் வாங்க வழிவகை செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0778995431

NEC இன்று முதல் NEC கல்வி நிலையம் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திச் சந்தியில் (நாவலர் கல்வி நிலையத்திற்கு அருகில்)
A/L கலை, வர்த்தக, கணித,உயிரியல் பிரிவுகளுக்கான கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்கின்றது.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.